

தியாகத்தின் சின்னம்

பதிப்புரை

கும்பகோணம் கடைவீதியில் ஆறு மாதத்திற்கு முன் ஒரு நாள் இருவர் தெருவழியே பேசிக்கொண்டே சென்றனர்.

“சுதந்திரம் வந்துவிட்டதாம் பெரிய சுதந்திரம், பிரமாதமா ஏதோ மூட்[illegible] தூக்கி சம்பாதித்தமாதிரி அல்லவா இந்தக் காங்கிரஸ்காரங்க சொல்லிக்கிறாங்க!”

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததென்பது கஷ்டப் படாத ஒரு முயற்சியென்பது இவர்கள் நினைப்பு. இதையே பெரும்பாலர், எண்ணிக்கொண்டும் இருக்கின்றனர்.

இப்போது வேண்டுமானால் சிலர் சிறைக்கு சென்று விட்டு வந்து தங்களைத்தான் தியாகிகள் என்று தம் பட்டமடித்துக்கொண்டு, பட்டம் பதவிக்கு போட்டியிடலாம். இவர்களைக் கொண்டு சுதந்திரத்தின் பொருட்டு இந்தியா அடைந்த துன்பத்தை முடிவு கட்டிவிட முடியாது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கொடுமையான சட்டங்களுக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகி தங்கள் உயிரைத் திரணமாக மதித்து தேச விடுதலைத் தொண்டையே தங்களுடைய நோக்கமாகக் கருதினவர்கள் பலருண்டு.

அவர்களில் சிலரைப்பற்றி தமிழ் மக்கள்முன் ஞாபகப் படுத்துவதற்கென்றே இச்சிறு நூலை வெளியிடுகிறோம்.

இந்தியா தனது தேச மக்களின் அரசியலமைப்பை ஏற்கும் இப் புனிதமான சரித்திரப் பிரசித்தி பெற்ற குடியரசு தினத்தன்று-தேச விடுதலைக்கு வழி கோலுவித்த புனித தியாகிகளைப்பற்றி தெரிந்துகொள்வதற்கும் இது உதவுமென்பது நம் கருத்து.

பல அலுவல்களுக் கிடையில் இப் புத்தகத்தைப் பார்த்தவுடன் படித்து முன்னுரை எழுதித்தந்த நமது பிரதமர் கனம் குமாரசாமி ராஜாவுக்கும், இந்த முயற்சிக்கு ஊக்கத்தைத் தந்த எஸ். எ. தேவநாயக அய்யாவுக்கும் எல்லாத் துறைகளிலும் எனக்கு உதவியளித்த எஸ். கணேசன் அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

சென்னை
24-1-'50

தமிழ்நாட்டுத் தியாகிகள்

படித்துப் பயன் பெறுவோம்

முன்னுரை

புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களில் கூறப்படும் தமிழர் வீரச்செயல்கள் பழங்கதைகள் ஆகிவிட்டனவோ என்று கவலை வேண்டாம்; வாழையடி வாழையாக வருவது தமிழர் வீரத் திருமரபு; மங்காது மாறாது வந்துகொண்டே யிருப்பது தமிழர் தியாகப் பரம்பரை; ஒவ்வொரு தலைமுறையும் புதுப்புது வீரர்களைப் பெற்றுப் பயன் தருகின்றது—என்றெல்லாம் நமக்கு ஆறுதல் கூறுவதுபோல் அமைந்திருக்கின்றது இந்த அரிய நூல்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் முதலாக தேசபக்தர் சத்தியமூர்த்தி ஈறாக, சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் தோன்றிய தியாகிகள் ஒன்பதினரைப்பற்றி சிறந்த ஆசிரியர்கள் எழுதிய கட்டுரைக் கோவையாக இந்நூல் பொலிகின்றது. மறைந்த சுதந்திரத்தை மீண்டும் பெறப் போரிட்டு, அழியாப் புகழ்கொண்ட வீரமக்களின் நற் சரிதம் குடியரசு தினத்தன்று வெளிவருதல் மிக்கப் பொருத்தமே. அன்றியும், அருந் தியாகத்தால் பெற்ற சுதந்திரம் நிலைபெற, தழைய இன்னும் பெருந் தியாகம் வேண்டும் என்பதையும் இந்நூல் நினைவூட்டுகின்றதன்றோ? எனவே, இந்த வெளியீட்டை வாழ்த்துவோம்; வரவேற்போம்; படித்துப் பயன் பெறுவோம்.

சென்னை
23-1-'50

பி. எஸ். குமாரசாமி ராஜா

பொருளடக்கம்

புகைப் படங்கள்





கட்டபொம்மு

ம. பொ. சிவஞான கிராமணியார்

தமிழகம் வேற்றவர்க்கு அடிமைப்படாத வீரத் திருநாடு. மௌரியப் பேரரசு, முகலாயப் பேரரசு போன்ற எத்தனையோ வல்லரசுகள் இந்தியாவில் தோன்றின: அந்த வல்லரசுகள் எதற்கும் செந்தமிழ் நாடு கட்டுப்பட்டுக் கிடந்ததில்லை. தன்னைச் சுற்றிலும் என்ன நேர்ந்தபோதும் அவற்றிற்குத் தலை வணங்காது தனியரசு ஓச்சியது தமிழகம். ஆனால், கட்டுப்படாத தமிழகத்தைக் கட்டுப்படுத்தியாள ஒரு கள்வர் கூட்டம் தோன்றியது. அதுதான், கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையர் கூட்டம்.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி தமிழகத்தில் கால் வைத்த நேரத்தில் இங்கு மூவேந்தர் ஆட்சி அழிந்து பட்டுவிட்டதால் எங்கும் குறுநில மன்னர்கள் கோலோச்சி வாழ்ந்தனர். தென்பாண்டி நாடு எண்ணற்ற சிற்றரசுகளாகச் சிதறுண்டு கிடந்தன. அந்தச் சிற்றரசுகளில் ஒன்றான பாஞ்சாலங் குறிச்சியின் வேந்தன்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன்.

அந்நாளில், தென்னிந்திய சிற்றரசுகள் மீது மேலாதிக்கம் செலுத்தியவன் ஆற்காடு நவாப் ஆவான். அவன் ஆடம்பரங்களுக்கு அடிமையாகி அரசுநெறி பிறழ்ந்த காரணத்தால், ஆங்கிலக் கம்பெனியின் கடன்காரனானான்.

வாணிபம் செய்யவந்த வெள்ளையர் கூட்டம் வட்டிக்கடை வைக்கவும் பின்வாங்கவில்லை! நவாபிற்கு தந்த கடனுக்காக நாடு முழுவதும் வரிவசூல் செய்யும் உரிமை பெற்றது கிழக்கிந்தியக் கம்பெனி. தென்பாண்டி நாட்டு சிற்றரசுகளை மிரட்டி 'வரி' என்ற பெயரில் பணக்கொள்ளை அடித்தது பரங்கியர் கூட்டம். இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்தான் ஒரே ஒரு கோவேந்தன். அவன்தான் நமது வீரபாண்டியக் கட்டபொம்மன்.

வீரபாண்டியன் வரிசெலுத்த மறுத்த காரணத்தால் ஆங்கிலக் கம்பெனியோடு அமர் செய்ய நேர்ந்தது. வாள், வேல், கத்தி, கட்டாரி ஆகிய கொலைக் கருவிகள் கணக்கற்று கிடந்தன கட்டபொம்மனிடம். கம்பெனிக்கோ, அரசுரிமை இல்லாவிடினும் ஆணவம் படைத்த ராணுவப்படை இருந்தது. பீரங்கி, துப்பாக்கி போன்ற ராட்சஸ ஆயுதங்களைக் கொண்டது அந்த ராணுவம்.

வெள்ளையர்கள், வீரபாண்டியனிடம் எதிர்பார்த்ததெல்லாம், வெறும் கப்பப் பணம்தான்; காவலாட்சி அன்று. ஆனால், கடலோடிக் கூட்டத்துக்கு கப்பம் செலுத்துவது மானங்கெட்ட செய்கையென நினைத்தான் வீரபாண்டியன். ஆகவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் கலெக்டரான ஜாக்ஸனுக்கும் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரனை நமது வீரபாண்டியனுக்கும் 1798-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ந் தேதி காலை ராமலிங்க விலாசத்தில் வாதப் போர் நடந்தது.

"வானம் பொழியுது, பூமி விளையுது
மன்னனென் காணிக்கு ஏது பணம்?"

என்று வீரபாண்டியன் வாதாடினன். முடிவில், வாதப்போர் வாட்போராக மாறியது. அன்று, கிளார்க் என்ற வெள்ளைத் தளபதியைக் கொன்றுன் கட்டபொம்மன். அன்று ஆரம்பித்த போர் 1801-ம் ஆண்டு மே மாதம் 24-ந் தேதிவரை மூன்று ஆண்டுகள் நிகழ்ந்தது. ஆம்; பாஞ்சாலங் குறிச்சி போர்க்களமாயிற்று. பாரதப் போர்களமான குருக்ஷேத்திர பூமியில்கூட

அவ்வளவு கொலைகள் நடத்திருக்குமா என்பது சந்தேகமே. மறவர் மலிந்த திருநாடாகிய பாஞ்சாலங் குறிச்சிப் பிரதேசம், மயானத்துக்குச் சமமாயிற்று. முடிவில், வீரபாண்டியனை வெற்றி கண்டது வெள்ளையர் கூட்டம். 1799-ம் ஆண்டு அக்டோபர் 16-ந் தேதி வீரபாண்டியனை தூக்கிலிட்டனர் வெள்ளைக் கம்பெனியார். கயத்தாறு எனும் சிற்றூர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளது; அந்தச் சிற்றூருக்கு அருகே பாதையிலுள்ள ஒரு புளிய மரத்தில்தான் புவி யாண்ட வேந்தன் தூக்கிலிடப்பட்டான். அந்தக் காலத்தில் ஆங்கிலப் படையின் தளபதியாய் இருந்து விசாரணை நடத்தி, வேந்தன் வீரபாண்டியனைத் தூக்கிலிட உத்தரவிட்டவன் மேஜர் பானர்மென் ஆகும்.

வெள்ளையர்கள் தங்கள் சொந்த ஆற்றலைக்கொண்டு வீரபாண்டியனை வெற்றிகொள்ளவில்லை. கணக்கற்ற துப்பாக்கி களையும், பீரங்கிகளையும் போரில் ஈடுபடுத்தியும் கட்ட பொம்மனை புறங்காண முடியவில்லை. புதுக்கோட்டை, எட்டயபுர சமஸ்தானங்களின் துணையைக் கொண்டே வீரபாண்டியனைச் சிறை பிடித்தனர். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை பகைவர் வசமானதும், புதுக்கோட்டை அரண் மனையில் தஞ்சம் புகுந்தான் வீரபாண்டியன். அந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வெள்ளைத் தளபதி கர்னல் ஆக்னியூவிடம் பிடித்துக் கொடுத்தான் புதுக்கோட்டை தொண்டைமான். ஆங்கிலக் கொடுங்கோல் பாஞ்சாலங் குறிச்சி அரசை அழித்தது; புதுக்கோட்டை—எட்டயாபுர துரோகிகள் செயல் வீரபாண்டியனின் ஆவியைக் குடித்தது.

வீரபாண்டியன் தூக்கில் மாண்டபிறகு அவனது தம்பி ஊமைத்துரை வெள்ளையர்களை எதிர்த்து கடும்போர் புரிந் தான். வீரபாண்டியன் தூக்கில் மாளும்போது, ஊமைத்துரை பாளையங் கோட்டைச் சிறையில் அகப்பட்டுக்கிடந்தான். பின்னர் ஊமைத்துரையும் அவனது கோஷ்டியாரும் சிறையைத் தகர்த்துவிட்டு ஆயிரக்கணக்கான கைதிகளுடன் வெளியேறினர். ஊமைத் துரைக்கும் கம்பெனிக்கும் சுமார்

இரண்டாண்டுகள் வரை கடும்போர் நடந்தது. வெற்றியும் தோல்வியும் இருதரப்பாருக்கும் மாறி மாறி கிடைத்தன. என்றாலும், இறுதி வெற்றி ஏகாதிபத்திய வெறியர்களுக்குத் தான் கிடைத்தது. 1801-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் தேதி பாஞ்சாலங் குறிச்சி பீரங்கி மேட்டில் ஊமைத்துரையும் தூக்கிலிடப்பட்டான்.

கட்டபொம்மன் சகோதரர்களால் கொல்லப்பட்ட ஆங்கிலேயர்கள் கணக்கிலர். அவர்களது சமாதிகளை பாஞ்சாலங் குறிச்சி வெளியில் இன்னும் காணலாம். வீரபாண்டியன் அரசோச்சிய அந்தப் பாஞ்சாலங் குறிச்சி இன்று வெறும் திறந்த வெளியாக காட்சி அளிக்கின்றது. அவ்வீரனை சிறைப்படுத்திய பிறகு ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அந்தப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கினர். மற்றும் காட்டு ஆமணக்கை விதைத்து அந்த நிலத்தை ஒன்றுக்கும் உதவாமல் செய்துவிட்டனர். அதுமட்டுமல்ல; அவனை அரசனாகப் பெற்ற குற்றத்துக்காக பாஞ்சாலங் குறிச்சி நகரமே அழிக்கப்பட்டது. அந்த வீரப்புதல்வனை ஈன்ற பாவத்துக்காக தோக்கலவார் சாதியினர் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஆங்கிலேயர்களால் துரத்தி யடிக்கப்பட்டனர். சேர்ந்து வாழ்ந்த தோக்கலவார் மரபினர் இன்று தென்பாண்டிநாடு முழுவதும் சிறு சிறு குடும்பங்களாக பிரிந்து வருந்துகின்றனர். கோவேந்தன் வழிவந்த தோக்கலவார் குடும்பங்கள் குற்ற பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

வீரபாண்டியன், இந்திய சுதந்திரப் போரைத் துவக்கி வைத்த பெருமகன் ஆவான். தங்கு தடையன்றி இந்தியாவெங்கும் பாவி வந்த வெள்ளையர் கூட்டத்தை, 'நில்லடா!' என்று தடுத்து நிறுத்திப் போர்புரிந்த பெருமை வீரபாண்டியனுக்கே தனி உரிமை.

வீரபாண்டியன் வீழ்ச்சியுற்றது ஆண்மைக் குறைவாலன்று; ஆயுதக் குறைவாலாகும். கனல் கக்கும் பீரங்கிகள்

முன்பு கைவாள் கொண்டு போர்புரிவது எத்தனை நாளைக்குத் தான் சாத்தியமாகும். ஆயினும், 'அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்' என்ற பழமொழி போன்று ஆங்கிலேயரின் ஆயுதம் அன்று வென்றது. இந்திய மக்களின் அறம் இன்று வென்றது. ஆம்! இறுதி வெற்றி நீதிக் கட்சிக்கே கிடைத்தது. வீரபாண்டியனின் ஆவி அந்தக் காட்சியைக் கண்டு பெருமிதம் அடைகின்ற தென்பதில் ஐயமில்லை.

வீரபாண்டியன் தூய சைவன். ஆயினும், சமய வேற்றுமையின்றி சகல மதத்தவர்களிடமும் சமரசமாகப் பழகினான். ஆங்கிலேயர்களைக் கண்டாலே வீரபாண்டியனின் கண்கள் சிவப்பேறும். என்றாலும், கொள்ளைச் செயலுக்கு புறம்பான வெள்ளையர்களுக்கு அவன் கொடியவன் அல்லன். டேவிசன் என்ற ஆங்கிலப் பாதிரியும் வீரபாண்டியனும் இணைபிரியாதிருந்ததே இதற்கு எடுத்துக் காட்டு.

வீரபாண்டியன் ஆந்திரர் பரம்பரையில் தோன்றியவன். அவனது மூதாதையர் பஞ்சம் காரணமாக ஆந்திர நாட்டிலிருந்து வெளியேறி தமிழகத்தில் தஞ்சம் புகுந்தவர்களே. ஆயினும், வீரபாண்டியன் செந்தமிழ் நாட்டுப் பண்புகளையே சிந்தையில் கொண்டு போற்றினான். தமிழிடமும், தமிழ்த் தெய்வமாம் செந்தூர் முருகனிடமும் அவன் பெரு மதிப்பு கொண்டிருந்தான்.

தமிழ் புலவருக்கு வரையாது வழங்குவதில் பெரு மகிழ்ச்சி கொண்டான். பிற்காலத்தில் காந்தியடிகள் தோன்றி எந்தெந்த நன்னெறிகளை அரசியலில் புகுத்தினாரோ அந்த உயர்ந்த நெறிகளில் பலவற்றை வீரபாண்டியன் அன்றே கடைப்பிடித்தான். பின்னால் எந்த வரி கொடா இயக்கத்தின் மூலம் காந்தியடிகள் ஆங்கிலப் பேரரசின் அஸ்திவாரத்தை தகர்த்தாரோ, அந்த வரிகொடா இயக்கத்திற்கு வழி காட்டியாக அமைந்தது வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாறு.

தாழ்த்தப்பட்ட சாதியினரின்பால் அவன் பெருங் கருணை வைத்திருந்தான். ஒரு சமயம் புரோகிதர்களின் பொய்க் கூற்றை நம்பி, இரு தீண்டாதவரை தெய்வத்துக்குப் பலியிடுவதென தீர்மானித்தான் மதுரை மன்னன் திருமலை நாயக்கன். இந்தக் கொடுமையை அறிந்த தென் பாண்டி நாட்டுத் தீண்டப்படாத மக்கள் குமுறினர். குறுநில மன்னர்களின் மாளிகை தோறும் சென்று தங்கள் குறை நீக்க வேண்டினர். ஆனால், பேரரசனான திருமலை நாயக்கன் முன்பு இந்தச் சிற்றரசர்களின் சக்தி எம்மாத்திரம்! தீண்டப்படாதார்களின் சார்பில் நின்று நீதிக்குப் போராட எவருக்கும் நெஞ்சத் துணிவில்லை. இந்தச் செய்தி வீரபாண்டியனின் செவிக்கு எட்டியது. உயிர் வழங்கும் தெய்வத்துக்கும் உயிர்ப் பலியா? அதுவும் உழைப்பாளி மக்களான தீண்டப்படாதார்களின் தலைகள் பறிபோவதா? என்று நெஞ்சம் பதைத்தான். உடனே கணமும் தாமதியாது, படைகள் புடைசூழ பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையைச் சேர்ந்தான். திருமலை நாயக்கனைச் சந்தித்து அவனது அடாத செயலை எடுத்துக் காட்டினான். வீரபாண்டியனின் கருணை உள்ளம் மதுரை மன்னனின் மனதைத் திருத்தியது. குற்றமற்ற தீண்டப்படாதார்கள் இருவரும் உயிர் பிழைத்தனர்.

வீரபாண்டியன் தங்கள் சாதியினருக்குச் செய்த இந்தப் பேருதவிக்காக தென் பாண்டியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வீரபாண்டியனின் குடும்பத்துக்கு இன்றளவும் ஆண்டுதோறும் காணிக்கைப் பணம் செலுத்தி வருகின்றனர். தீண்டப்படாதாரின் உயிரைக் காக்கப் பாடுபட்டான் வீரபாண்டியன். அவர்தம் உரிமைகளைக் காக்கப் பாடுபட்டார் காந்தியடிகள்.

தமிழகம், வாழையடி வாழையாக வீரப் பெருமக்களைப் பெற்று வருகின்றது. அன்று இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போரிட்டான் செஞ்சி வேந்தன் தேசிங்கு ராஜன்.

பின்னர் ஆங்கில சாம்ராஜ்ஜியத்தினரின் ஆரம்ப விழாவை அமர்க்களமாக்கினான் வீரபாண்டியக் கட்ட பொம்மன்.

வீரபாண்டியன் துவக்கி வைத்த சுதந்திரப் போரைத் தொடர்ந்து நடத்தினார் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. அந்த முப்பெரும் தமிழ் வீரர்களும் காணக் கொடுத்து வைக்காத சுதந்திரத்தை இக்கால மக்களாகிய நாம் கண்டு களிக்கின்றோம்.

இதற்குக் காரணஸ்தர்களான அப்பெரு மக்களுக்கு நாம் தரும் காணிக்கை என்ன? பெற்றுவிட்ட சுதந்திரத்தைப் பறிகொடுக்காமல் பாதுகாப்பதே யாகும். அந்தப் பெரும் பணியில் ஈடுபடும் நமக்கு வீரபாண்டியனின் ஆவி ஆசி கூறுமாக!

மோகன முத்துவடிவு

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டிலே, நமது தேசத்தில் முதல் சுதந்திர மகாயுத்தம் மூண்டது. அதன் விளைவுகளோ பூகம்பத்தின் போக்கை யொக்கும்; அல்லது எரிமலையின் கோரத்தை நிகர்க்கும்; என்பர் சரித்திரம் வல்லார்.

பூகம்பம் நேரின், மாட மாளிகைகள் மடமட வென இடிந்துசாயும்; கூடகோபுரங்களோ தலைகுப்புறக் கவிழ்ந்து வீழும்; புவியின் கீழிருந்து குபுகுபு என்று நீர் கிளம்பி யெழும்; சின்னேரத்திலே எங்கும் வெள்ளக்காடு தோன்றும்.; மாந்தரெல்லாம் மாண்டுமடிவர்; பிறவுயிர்களும் அப்படியே பொன்றிப் போம். எங்கும் ஓரே பாழ் அல்லது சூனியமே நிலவும்!

எரிமலையொன்று வாய்திறப்பின், நெருப்பாறு பொங்கிப் பரவும்; பயிர் பச்சைக ளெல்லாம் காய்ந்து கருகும்; மானிடரும் தீயில் வெந்து ஒருபிடி சாம்பலாவர். விலங்குகளும் பறவைகளும் அலறிக்கொண்டு சாகும்; முடிவிலே பாழ் என்னும் பாதேவதை கோர தாண்டவம் ஆடுவாள். பேயும் பூதமும் பெருமிதமாக உலவும்!

முதல் சுதந்திர மகாயுத்தம் மூளுமுன், முன்னெச்சரிக்கையாக நம் தமிழகத்தில் பதினெட்டாம் நூற்றாண்டிலே அத்தகைய பூகம்பம் நேர்ந்தது; இன்றேல் பகைப்புகையைக் கக்கும் எரிமலை வெடித்தது. அதன் விவரங்களை வரன்முறையாக வரைந்து வைக்க, ஒரு வீரசாவர்க்கார் தோன்றவில்லை; என்றாலும் தமிழ்ப் புலவர்களோ சிந்துவடிவிலும்

கும்மிவடிவினிலும் பாடிவைத்துப்போயினர். ஆயினும், அவை தலைதூக்கா வண்ணம், தாக்கீது செய்தனர் ஆங்கிலக் கும்பினியார்.

வெள்ளை வர்த்தகரை விரட்டியோட்டவும், ஆர்க்காட்டு நவாபின் தர்பாரை வேரறுக்கவுமே, பாண்டிநாட்டுப் பாளையக்காரர் தோள்தட்டி ஆர்த்தனர்; மார்தட்டி எழுந்தனர்; அப்பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதி முழுதும், ஓர் ஐம்பது வருஷ காலம், பாளையக்காரரின் பெரும் போர் நடந்து வந்தது. பாஞ்சாலங் குறிச்சியின் தலைவன், வீர பாண்டியன் என்னும் ஆண்மையாளன், கட்டபொம்மு என்னும் கட்டாண்மையுடையோன், அப்போரின் திலகனாக விளங்கினன்!

சாதியபிமானமும் தேசாபிமானமும் சிறிதுமில்லாமல் சுயநலமொன்றே மிகுந்து நின்ற, அந்நாளைய எட்டயபுரம் பாளையக்காரனே துரோகம் புரிந்தான்; புதுக்கோட்டைத் தொண்டைமான் என்பானே காட்டிக் கொடுத்தான் அத்துடன் வினைப்பயனும் வந்து கூடிக்கொள்ளவே, 1799-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ந்தேதி அக்கட்டபொம்முவை ஆங்கிலேயர் சிறைபிடித்தனர். தூங்கும் வேளையிலே சந்தடி ஏதும் செய்யாமல், கழுத்தையறுப்பது போன்ற அத்தீச் செயல் கண்டு, கட்டபொம்மு பல்லைக்கடித்து பதறிப் பொருமினான், வலையில் சிக்கிய சிங்கம் வேறென்ன செய்ய முடியும்?

கட்டபொம்மு கட்டுண்டான் என்று கேள்வியுற்றதும், ஆங்கில வர்த்தகர் துடை நடுக்கம் விடுத்தனர், ஆங்கில வீரரோ கும்மாளம் கொண்டனர். மேஜர் பானர்மன் எனும் ஆங்கில தளகர்த்தன் ஆனந்தத் தாண்டவம் ஆடினான். பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை பிடிபுண்டது, கட்டபொம்முவும் சிறைப்பட்டான், என்று கேள்வியுற்றதும், பாண்டிய நாட்டு மக்களோ தேம்பினர், தயங்கினர், திடுக்கிட்டனர். குஞ்சு குழந்தைகளும் கலங்கின.

நூறுக்கு எழுதிமுடித்த பிரமன்
ஆறுக்கு எழுதுவானோ அழித்து

என்று வீறுபேசிச் சென்றவீரன், தன் உயிரைத் துரும்பெனக் கொள்ளும் தீரன், உயிரோடா சிறையுண்டான்? வஞ்சனை விளைந்தது போலும், துரோகமும் சூழ்ந்தது போலும், இல்லையேல் சிறைபடுவானோ? ஆட்டிப்படைத் தவனை வாளா விடுவதா, என்று ஆங்கிலேயர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள அச்சூரனுக்கு மானக் கேடு விளைவிப்பரோ? என்று பதறுதார் கிடையாது.

போருக்கு வந்தவர் பாருக்கு இரையாகப்
போன்றிட வென்று புகழ்கொள்ளுவேன்

என்றிசைத்த வண்ணம், அத்தனை ஆங்கில வீரரையும் அப்பெரு வீரன் அவனியில் சாய்த்தான், வெற்றி மாலையே சூடினான்! பாவி மகன் தொண்டைமானது வஞ்சனையினால் பிடியுண்டானேயன்றி வேறில்லை. வாள்முனையிலே போர் முகத்திலே அவனை எதிர்த்து நிற்பார் யார்? எறிட்டு நோக்குவாரும் யார்? என்னே 'புதுக்கோட்டையான் புரிந்த சதி' என்று உண்மை யுணர்ந்தோர் உளமிக நொந்தனர்; உணர்ச்சி யிழந்தனர், உன்மத்தம் எய்தினர்.

அங்கிலையில், மேஜர் பானர்மனை வெற்றிவெறி பிடித்தாட்டியது; ஆட்டவே, பாஞ்சாலக்குறிச்சியின் தானாதிபதி சுப்பிரமணிய பிள்ளை தூக்கில் சாகவேண்டும், காடல்குடி பாளையக்காரனும் அவ்வாறே மடிய வேண்டும், அவர்களின உறவின் முறையாரோ அந்தமான் தீவில் தனித்து வாழ்ந்து தனிக்க வேண்டும்' என்று அத்தளகர்த்தன் ஆணையிட்டான். கும்பினியாரும் அதற்கு ஒப்பம் கொடுத்தனர்.

பானர்மனது ஆணை அவ்வளவுதானோ? பாஞ்சாலங் குறிச்சியைச் சார்ந்து நின்ற பாளையக்காரரையும் பிறரையும் நயம்படப் பேசி வரவழைத்தான்; அன்னோர் அனைவருக்கும் விருந்தொன்று நடத்தினான்; அவர்களுடன் சரச சல்லாபஞ் செய்தான். முடிவிலே அத்தனை பெயரையும் சிறையாள

ராகப் பாவித்தான். பாஞ்சாலங்குறிச்சியை ஒரே பாழ் படுத்தினான்.

புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி என்பர். அத்துடன் பேயும் சேர்ந்தடித்தால் எப்படி? அப்படி ஆயினர் ஏனைய பாளையக்காரர் பலரும். சூரியன் மறைந்ததும், உயிர்களெல்லாம் ஒடுங்கியுறங்க, வீட்டையும் கூட்டையும் மரத்தையும் செடியையும் நாடுதல் இயற்கையல்லவா? அங்ஙனம் சிலபலர் வெளியே தலைகாட்டாமல் மறைந்து வாழத் தலைப்பட்டனர்.

கட்டபொம்முவின் பக்கம் சேராமலும், கும்பினியின் சார்பை நாடாமலும், எட்ட நின்று எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பாளையக்காரர் அனைவரையும் அப்பானர்மன் தேன்சொட்டப் பேசியழைத்தான்! நான் விரும்பும் தகவல் அனைத்தும் தந்தால், நிம்மதியாக வாழலாம், ஆபத்தொன்றும் நேராது, என்று அறிவுறுத்தினான். வெளுத்ததெல்லாம் பாலென பதித்துவிட்டனர் அப்பாளையத் தலைவர்கள்.

அந்த ஆங்கிலேயன் விரும்பிய தகவல்கள் இவை:— உங்கள் பாளையத்தின் வருமானம் எவ்வளவு? அதில் கும்பினியாருக்குக் கப்பமாகக் கட்டுவது எவ்வளவு? கட்டினதுபோக எஞ்சி நிற்கும் தொகைக்குரிய செலவினங்கள் என்னென்ன? பாளையத்திலே எத்தனை கோட்டை கொத்தளங்கள்? ஆயுத வகைகளும் தொகையும் எத்தனை? படைஞரின் தொகையும் பிரிவும் என்னென்ன?

பாளையக்காரர் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளாமல், அத்தகவலனைத்தையும் உடனே எழுதித் தரவேண்டும். சிந்தித்துப் பார்க்கவோ, சிறிதும் தாமதம் செய்யவோ, கூடாது! இந்நிலையில், அத்தகவல்களை அவன் கேட்கும் காரணம் யாது? அதன் பலா பலன் யாதாகும்? என்று அவர்கள் சிறிதும் நினைக்கவில்லை. இம்மியளவும் பிசகாமல், எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்தனர் தயக்கமின்றி!

அவ்விவரங்களையெல்லாம் எழுத்து மூலம் உணர்ந்துகொண்டதும், அப்பானர்மன் யாது செய்தான்? பல்லையும்

நகத்தையும் பறித்துவிடின், ஆண்சிங்கமும் சாதனையின்றித் தத்தளிக்குமன்றோ? அவ்வாறே, உங்கள் கோட்டை கொத்தளங்களை உடனே இடித்துவிட வேண்டும்; ஆயுதங்களையெல்லாம் கும்பினியாரிடம் கொடுத்துவிட வேண்டும்; படைவகுப்பைக் கலைத்துவிடவேண்டும்; என்று அவன் கட்டளையிட்டான். அவ்வேலை பூர்த்தியாகும் வரையில், பாளையக்காரர் அனைவரும் தனது கூடாரத்திலேயே இருக்க வேண்டும் என்றும் ஆணை போட்டான்.

அது கேட்டதும், அத்தனை பாளையக்காரரும் இடியேறுண்ட நாகம்போல் கலங்கினர். மனத்தூடே கொதித்தனர்; எனினும் அக்கொதிப்பை முகத்தினிலும் காட்டாது மறைத்தனர். இந்நிலையில், அவர்களிலே தட்டிப் பேசுவோர் யார்? ஏன் இந்தப் பறிமுதல் துரைகளே, என்று முணுமுணுப்பார்தான் யார்? மனம் இடிந்து போகவே, ஆண்மை அகன்று விடவே, வாய்திறக்க வகை ஏது?

கும்பினிவீரர் பாளையந்தோறுஞ் சென்று, கோட்டை கொத்தளங்களை இடிக்கவும், ஆயுதங்களைப் பறித்துவரவும், படைவகுப்பைக் கலைத்து வரவும், ஒப்புக்கொண்டு, ஒவ்வொரு பாளையக்காரனும் தனித்தனியே எழுதிக் கொடுத்தான்; அப்பாழ் வேலை முற்றுப் பெறும்வரையில் பானர்மனுடன் கயத்தாற்றிலே தங்கியிருக்கவும், சம்மதித்தான்! உடனே கும்பினி வீரர் கோலாகலமாகச் சென்று, நாசவேலைகளை நன்காற்றி வந்தனர், மதுவனத்தைக் குரங்கினங்கள் அழித்தமை போல்!

1857-ஆம் வருஷத்திற்கு பின்புதான் இந்தியரெவரும் ஆயுதம் தரிக்கக் கூடாது; ஏதேனும் ஆயுதம் தாங்கி நிற்பதாயின், அரசாங்கத்தின் சம்மதிச் சீட்டு வேண்டும், என்று கும்பினியார் சட்டமியற்றினர், என்றாலும் அதற்கு முன்னதாகவே நமது தமிழகத்தார் அனைவரையும் நிராயுதபாணிகளாக ஆக்கிவிட்டனர் என்பதைப் பலரும் அறியார். ஆங்கிலேயரின் தந்திரமே தந்திரம்!

பாளையம் பாளையமாகச் சென்று, பரிபவம் இழைக்க ஆணை பெற்றவர்களில் மேல்படாகை என்னும் பாளையம் புகுந்த வெள்ளைத் தளபதி காப்டன் புரூஸ் எனப்படுவான். அவனோ துடுக்கும் மிடுக்கும் மிகுந்தவன். தடித்தனத்தில் நம்பிக்கை வைத்தவன், தானிட்டதே சட்டமெனத் தலைவிரி கோலங் கொண்டவன். அவனது படாடோபங் கண்டு பலரும் பேதுற்றனர்; பெட்டிப் பாம்பு போல் அடங்கி கிடக்கவும் கருத்துக் கொண்டனர்.

அது கண்டதும் மாதரிலே சிலர், “ஆடவ ரென்போர் இப்படியா ஆண்மையிழந்து போவர்? ஐந்தாறு பிள்ளை குட்டி பெறுவதுதானோ ஆண்மை யென்பதற்கு அழகு? பாளையக்காரப் பிரபு, மகாராஜா என்று பட்டம் படைத்தோன் எங்கே? வரிதண்டும் அத் தடபுடல் தண்டல்காரன் எங்கே? இந்த வெள்ளையனது கொட்டத்தை யடக்குவார் இல்லையே! சை கெட்டார் இந்த ஆடவர்!” என்று மனங் கொதித்துப் பேசி நின்றனர்.

அம் மாதரிலே மூத்து வடிவு என்னும் இள மங்கை யொருத்தி, மோகனம் என்னும் செல்வப் பேருடையாள், வீர மறவர் குலத்தில் வந்தவள். கன்னியழியாத கட்டிளம் பெண். மறக்குல இளைஞர் பலரும் அவளை மணக்கப் பாசத்துடன் வந்தனர். அவளோ நாடிருக்கும் நிலையில் யாருக்கும் மாலையிட மனமொப்ப வில்லை. புரூஸ் என்பானுக்குப் புத்தி புகட்ட நம்மில் ஒருத்தி புறப்பட்டால் என்ன? என்றாள் அம்மோகன முத்துவடிவு.

அது கேட்டதும், “ஆங்கிலப் பேயின்முன் மாதராவோர் மல்லுக்கு நிற்பதெங்ஙனம்? மாதர் மாதர்தானே! பெருமிதமாகப் பேசும் நீதான் புறப்படு பார்ப்போம்,” என்று இலேசாகப் பேசினாள் வேளாண் மகளொருத்தி. “வாயில் வந்தது வார்த்தையெனப் பேசி விடலாம் சுளுவாக. காரியத்தில் இறங்கினா லல்லவோ கஷ்டந் தெரியும்?” என்றாள் சான்றோர் குலப் பெண்ணொருத்தி.

"செல்வ மோகனம் பெயருக்கேற்ப முத்தாகப் பேசு வாள். வயது பதினாறுகூட நிரம்பவில்லை. போாண்மை பேசித் தீர்க்கிறாள். செல்லம் சொல்லுக்கு அஞ்சுமா என்ன?" என்றனள் இடையர் குல மடந்தை யொருத்தி. அவ்வளா வையும் மௌனமாகக் கேட்டு நின்றான் முத்துவடிவு. எல் லாம் ஆண்டிகள் கூடி மடங்கட்டும் பேச்சுத்தான் என்று தொண்டுகிழவி யொருத்தி தடியூன்றி யெழுந்தனள். மாதா சபை அத்துடன் முடிந்தது.

சிந்தனை தேங்கிய முகத்தினளாய் முத்துவடிவு தனது வீடு சேர்ந்தாள். அன்றிரவு கழிந்தது, பொழுதுபுலர்ந்தது. மோகன முத்துவடிவு போன இடம் தெரியவில்லை என்ற செய்தி மேல்படாகை எங்கும் பரந்தது. நாட்டுப்புற மாத ரின் வம்புப் பேச்சுக்கு எல்லை ஏது? மேல்படாகை மாதர் பற்பலவாறு பேசத்தலைப்பட்டனர்.

பரிசம் போடவந்த வாலிபரில் ஒருவன் அவளைத் தூக் கிச் சென்றான் போலும், என்றாள் ஒருத்தி. தன் காதல னுடன் அவள் தனிவழியே போயிருப்பாள், என்றாள் இன் னொருத்தி. ஒரு சமயம் வெள்ளைப் பிசாசு அவளைப் பிடித்துக் கொண்டது போலும், என்றாள் வேறொருத்தி. நேற்று நிகரிலா ஆண்மை பேசியவள் இன்று யாருமறியாமல் மறைந்து போயினளே, என்றாள் மற்றுமொருத்தி.

இனி கும்பினிப் படைகள் எங்கும் புகுந்து குரங்கே போல் குறும்பும் கோாணியும் செய்து வருகையில், புருஸ் என்பானொரு நாட்டுவளப்பங்காண நாலா திக்கிலும் போவான். மாலைவேளையிலே கானகத்தூடே புகுந்து காட்சிகண்டு களிப்பான்; தனது படைஞரின் அட்டூழியங்கண்டு, கை கொட்டிக் களிப்பான். பின்பு வேட்டம் ஆடவும் நாட்டம் வைப்பான்.

ஒரு நாள் அந்த வெள்ளை மகன் தனது பரிமீதேறிக் கானகம் புகுந்தான்; சிறிது தூரம் சென்றதும், சூரிய கிரணமும் நுழையாத நெடுந் தோப்பொன்றில் நுழைந்தான்;

செடி கொடிகள் நிறைந்து காணப்பட்டமையால், குதிரை மீது செல்ல இயலவில்லை. ஆதலின் அசுவத்தை விட்டிறங்கித் துப்பாக்கிக் கட்டையைத் தோளில் சாத்திய வண்ணம், புதருக்குள்ளே பாய்ந்தான் பூரிப்புடன்.

கூப்பிடு தூரத்திலே வானையளக்கும் பெருமரமொன்று தென்பட்டது. அதனடியில் ஆண்டியொருவன் அற்புதமான கோலத்துடன் காணப்பட்டான். சிரத்திலே சடை; முகத்திலே தாடி கழுத்திலே மணிமாலை. இவை கண்டு புருஸ் பிரமித்தான்; கிட்டச்சென்று பார்க்க விரும்பினான். இந்த விசித்திர ஜீவனை ஊடுருவி நோக்கவேண்டுமென்று நினைத்தான். முன்பின் ஆண்டிகளைக் கண்டிராத பேர்வழி அவன்.

ஆயினும் விசித்திர ஜீவனாயிற்றே, அருகே சென்று நோக்கினால் ஏதேனும் விளையுமோ? என்னும் உதைப்பும் உதித்தது. பின்போ, தோளிலே துப்பாக்கிக் கட்டையிருக்கையில், கலக்கம் கொள்ளத் தேவையில்லை என்று துணிவு பிறந்தது. உடனே அத்துப்பாக்கியைச் சாய்த்துக் குறிபார்த்த வண்ணம் கடுகிச் சென்று, கிட்ட நின்று, யார் நீ? என்று கேட்டான் அதட்டி. அச்சொல் செவியில் பட்டதும், சற்றே கண் திறந்தான் அந்த ஆண்டி.

பின்னர், “இந்தக் கட்டையா? காட்டிலே கந்த மூலங் தின்று காலங்கழிக்கும் ஆண்டி மகன். என்னைக் குறித்து என்ன கவலை உனக்கு? வந்த வேலையைப் பார்த்துக்கொண்டு போ. வீண் பேச்சு எதற்கு?” என்றான் ஆண்டி கம்பீரமாக. மனித சஞ்சாரமில்லாத இவ்வனத்தின் மத்தியிலே வாழும் உன்னை வன விலங்குகள் வந்து விழுங்கி விடுமே என்றான் அவ்வெள்ளையன்.

“மனிதர் வசிக்கும் நாடும் இப்போது வாசத்துக்கு வாசியில்லையே. தற்காலமுள்ள நிலையில் இக்காடே எனக்கு மேலெனத் தோன்றுகிறது. ஆர்க்காட்டு நவாபின் ஆட்சியிலே சீமைகள் பலவும் நாசமாயின. கும்பினியின் மேற்பார்வையிலோ எஞ்சிய சீமைகளும் சீரழிகின்றன. எனவே

இப்போது காடும் நாடும் ஒன்றுபோலுள. நான் எங்கிருந்தா லென்ன?" என்றான் ஆண்டி மகன்.

அதற்கு, "வெள்ளைக் கும்பினியை எள்ளிப் பேசும் உன்னை இதோ கொன்று குவிக்கின்றேன் பார்," என்று உறுமினான் புரூஸ். உடனே தனது துப்பாக்கிக் கட்டை யையும் உயர நிமிர்த்தினான். அது கண்டு, "உடம்பிலே உயிர் இருக்கும் வரையில் உடம்பைப் பற்றிக் கவலை பிறக் கும். உயிர் போய்விட்டால் உடம்பைப் பற்றிய கவலையும் போய்விடும். நல்லது சுட்டு வீழ்த்து, சுகமே சாவேன்" என்று அந்த ஆண்டி அலட்சியமாகப் பேசினான்.

"உயிரை ஒரு துரும்பென மதிக்கிறானே இவன்! எல்லாருக்கும் உயிர் என்றால் ஒரு வெல்லமாயிற்றே," என்று அதிசயித்தான் அவ்வெள்ளையன்; ஆண்டியின் முகத்தை உற்று உற்று நோக்கினான். கண்களின் அழகும், மூக்கின் வனப்பும் முகத்தின் பொலிவும் அவனுக்குப் பர வசம் ஊட்டின. தளதள வென்ற மேனி படைத்த இந்த உருவம் பெண்ணோ என்று ஐயுறவு கொண்டான்.

அச்சமயத்திலே ஆண்டி மகன் திடீரென எழுந்தான். அந்த வேகத்தில் சடை முடியும் தாடியும் கழன்று போயின. போகவே, மினுமினு என்ற மேனியுடன் இள மங்கை யொருத்தியைக் கண்டு, கருத்தழிந்தான் புரூஸ் என் பான்; காதல் நோயும் கொள்ளத் தலைப்பட்டான். பட்ட தும் என் கண்ணே! என்று பல்லைக் காட்டினான்.

"கண்ணாவது கருமாந்திரமாவது? என்ன பிதற்று கிறாய்," என்று எடுப்பாகப் பேசினாள் முத்துவடிவு; அவ் வளவிலே அவனது துப்பாக்கிக் கட்டையை வெகு தந்திர மாகப் பிடுங்கிக் கொண்டாள். கொண்டதும் அவனுக்கு அச் சம் தோன்றியது; காதல் நோயும் சற்றே தணிந்தது காலும் கையும் வெலவெலத்தன.

முத்துவடிவு அதுபார்த்து, "வெள்ளை வீர! இவ் வளவு நடுக்கம் ஏன்? நானோ பெண்பால். நீயோ ஆங்கில

ஆடவவீரன்! அஞ்சாதே என்று புன்சிரிப்புடன் பரிகாச மாகப் பகர்ந்தாள். பெண்ணின் புன்சிரிப்பைக் கண்டதும், அவன் புத்தி மயங்கியது. மையல் ஓங்கியது. ஓங்கவே "என் கண்மணியே! உன்னை என்னுடன் அழைத்துச் சென்று, அழகிய ஆடையுடுத்திப் பார்க்க ஆசை யதிகம்," என்றான் அவன்.

அவளோ "அப்படியா? உன்னை என் வீட்டுக்கழைத் துச் செல்லவே நான் விரும்புகிறேன்" என்றாள். "நல்லது நீ எங்கே இட்டுச் சென்றாலும்" கூடவரத் தயார் என்றான் அவன். "சரி சின்ன வயதிலே நான் குரங்கொன்று வளர்த் தேன். அது மாண்டு மடிந்துவிட்டது. ஆனால் அதன் கூண்டு இன்னும் இருக்கிறது. வெள்ளைக் குரங்கை வைத்து வளர்த்தல் வேடிக்கையாக இருக்கு மல்லவா?" என்று சிரித்தாள் முத்துவடிவு.

"பெண்ணே! என் கண்ணே! உன்னிடம் உயர் வீரம் காண்கின்றேன். சீரிய சமர்த்தும் பார்க்கின்றேன். தளகர்த்த னுக்குத் துணைவியாயிருக்கும் தகுதி பலவும் உன்னிடம் உள்ளன. உன்னுடன் வாத்தலையில்லை. நீ என்னுடன் வாழ்ந்துவரச் சம்மதி தந்தால்," என்று பல்லைக் காட்டினான் அவ்வெள்ளை வீரன்.

"தளகர்த்த! வீரர் குலத்தில் வந்தவள் நான். வீர னுக்கே மாலையிடுவேன். ஆனால் எனது நாட்டை நிர்மூல மாக்கும் வெள்ளையனையும், அன்னாரை ஏவிவிட்ட நவாப்பை யும் வேரறுப்பதே எனது விரதம். மேல்படாகையில் மிக மோசம் பண்ணும் உன் படைஞரையும் வெட்டிப் போடவே விரும்பி நிற்கின்றேன். இதில் பங்கு கொள்ள உனக்குப் பிரியமாயின், உன்னுடன் கூட வருவதைப் பற்றி யோசிக்கலாம்," என்றாள் அவள்.

அவனோ அதுகேட்டுத் திகைத்தான். அவ்வேளை "வீரனே! வாய் பொத்திக் கிடக்கும் பாளையக்காரரின் பான்மை கண்டு, இந்தியரை இலேசாக எண்ணிவிட்டாய். பெண்ணென்று கருதி என்னை ஆளப்பார்க்கின்றாய். ஆணிலே

பெண்ணுண்டு. பெண்ணிலே ஆணுண்டு. விரைவில் உணர்வாய் நீ,'' என்று முத்துவடிவு மொழிந்ததும், துப்பாக்கி ரவைகள் கிளம்பி அவனுடலில் பாய்ந்து, அவனைக் கீழே சாய்த்தன.

உடனே அருகே நின்ற பனைமரமொன்றில் ஏறி அதன் மட்டையொன்றைச் சொணர்ந்து, மட்டையின் கருக்கினால் துப்பாக்கிக் கட்டையும், மற்றொரு கையில் அவன் தலையை உடம்பினின்று பிரித்து, ஒரு கையில் பனங்கருக்கில் செருகிய புருஷின் தலையும் தாங்கி, மேல் படானக்கு வீதியிலே புகுந்தாள் அவ் வீரியமகள்.

நாக்கிலே நரம்பில்லாமல் பேசி நின்ற மாதர் பலரும் அம் மோகனமுத்துவடிவின் செயல் கண்டு, சித்தங்களித்துச் சிறப்புப் பலவும் செய்தனர். பாளையக்காரரின் பெரும் போர் மூண்டகாலத்திலே முத்துவடிவைப் போன்ற மங்கையர் பலர் கிளம்பி, ஆடவரும் வியக்கும் வண்ணம் வீரம் விளைத்தனரென்பதை வாசகர் உணருதல் வேண்டும்.

நாட்டுப் பாடல்களிலும் கர்ணபரம்பரையிலும் திகழும் தமிழக வீரமங்கையரின் செயலை அறிந்து ஆனந்திக்க வேண்டிய காலம் இது ! அன்னாருக்கு என்ன வீரமானியம் வழங்க முடியும் !



வ. உ. சிதம்பரம் பிள்ளை

தே கோ. ர

"வெள்ளையனே வெளியே போ" என்ற இந்த கோஷத்தை இன்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே தூத்துக்குடியில் துவக்கி வைத்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்தான்.

பிள்ளையவர்கள் பிறந்தது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள "ஒட்டப் பிடாரம்" என்ற ஊரில் உலகநாதர் பிள்ளை என்பவருக்கு 1872-ம் ஆண்டு செப்டெம்பர் 5-ந்தேதி அன்று ஆகும். அவர் பிறப்பினால், வளமும் வீரமும் கல்வியும் கேள்வியும் நிறைந்த அப்புகழ் மிக்க பாண்டிநாடு இன்னும் புகழடைந்தது.

பிள்ளையவர்கள் படித்து வக்கிலான சமயம் அவரது தந்தை திருச்செந்தூரைச் சேர்ந்த சுப்ரமணிய பிள்ளையின் குமாரத்தி வள்ளியம்மையைப் பிள்ளைக்கு மணம் புரிவித்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களைப் போலவே அவரது மனைவியும் ஈகைக் குணமும், தொண்டாற்றுவதில் விருப்பமும் கொண்டுள்ளவர். மதம் மக்களைப் பிரிப்பதற்கில்லை. பழமை பாராட்டி பகுத்துப் பிரித்தல் நல்லதல்ல என்ற குறிக்கோள் கொண்டவர். அம்மையவர்கள் தாழ்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெரியார் ஒருவரை வீட்டில் வைத்துக் காப்பாற்றி வந்தார். இவர் இரண்டு கண்களும் சென்று முதுமை மிகுந்திருந்தார். எனவே கணவன் மனைவி இருவருக்கும் இவர்பால் அன்பு அதிகமிருந்தது. சுற்றும் புறமும் இருந்தவர்கள் இவர்களைத் தூற்றினர். பறையனை வீட்டில் வைத்து சோறு போடுவது பாபம் என்றனர். அம்மையார் அஞ்சினாரில்லை. ஒழுக்கமும் வாய்மையும் கொண்டு ஏற்போருக்கு

இல்லையென்றாது வாழ்தலே மனித குலப் பிறவியின் நோக்க மென எண்ணினார்.

நல்லவர்கள் எப்போதும் இருக்க மாட்டார்களோ என்னவோ தெரியவில்லை! இந்த அம்மை மணமாகி ஒரு குழந்தை பெற்ற சின்னாட்களுக்கெல்லாம் இருதய நோய்க்கு ஆளாகி இறந்துவிட்டார். மனைவியைப் பிரிந்த பிள்ளையவர்கள் சில காலம் துக்கத்துடன் தள்ளினார். பின்பு தனது மனைவி யின் முறையிலேயே பெண்ணொருத்தியை மணந்து கொண்டார்.

இதற்குப் பின்னும் தனது பெருந்தன்மையையும் தீண்டாமையையும் விட்டாரில்லை. சகஜானந்தர் என்னும் தீண்டாதார் ஒருவரைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். அவருக்குத் திருக்குறள், தொல்காப்பியம் முதலிய தமிழ்க் கல்வியைக் கற்றுத் தந்து அரிய நண்பராக்கிக் கொண்டார். சாதிக் கொரு நீதி கூறும் சழக்கர்களுக்கு இதனால் புத்தி வந்ததாயில்லை. ஒரு சமயம் நண்பர் ஒருவரின் திருமணத் திற்குச் சிதம்பரம் பிள்ளையும் சுவாமி சகஜானந்தரும் சேர்ந்து சென்றனர். இவர் தீண்டாதாரை அழைத்து வருகின்றார் என்று தெரிந்த சிலர் திருமண வீட்டை விட்டு வெளியேறி விட்டனர். நண்பர் என்ன செய்வார். சொல்லவும் முடிய வில்லை, காரியமும் முடியவேண்டி இருக்கின்றது. இதை யறிந்த பிள்ளையவர்கள் சசஜானந்தரைத் தன்னுடன் அழைத் துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். தன்னால் தன் நண்பருக்குத் துன்பம் விளைவதைக் கண்டுசகித்தாரில்லை!

இதனால் சகஜானந்தர் சிதம்பரனாரைத் தன் தந்தை யென்றும், கடவுளென்றும், குருவென்றும் பல வகையில் பாராட்டி யிருக்கிறார்.

தூத்துக்குடியில் வக்கீல் தொழில் நடத்தி வந்த காலை யில் அவருக்கு நல்ல வருவாயும், பேரும், புகழும் ஏற்பட்டது. இவற்றை எல்லாம் விட்டு விட்டு சுதந்திரப் போருக்கு ஆயத்தமாகிவிட்டார். இதில் ஏற்பட்ட கஷ்டக் கணக்கைப் பகுத்துப் பார்த்தாரில்லை.

இவர் அரசியல் வாழ்விலே புகுந்த சமயம் வங்கத்தைத் துண்டாக்கி ஹிந்து முஸ்லிம் வேற்றுமையைப் புகுத்த அக் காலத்தில் இருந்த ஆங்கில கவர்னர் ஜெனரலான லார்டு கர்ஸான் எண்ணினர். இதைக் கண்ட வங்கம் முழுவதும் கிளர்ந்தெழுந்தது. ஆதிபத்தியத்துக்கு எதிராக வங்கத்தில் புறப்பட்ட போரைத் தூத்துக் குடிக்குத் திருப்பிவிட்டார்கம் தேசபக்தர். அன்னிய ஆடைகளைக் குவித்து வைத்துக்கொளுத்தியும், கடையடைப்பு நடத்தியும், கூட்டங்கள் போட்டு கர்ஜனை செய்தும் தனக்குள்ள அதிருப்தியைக் கர்ஸான் காதுகளில் விண்ணதிர ஒலித்தார்.

இத்துடன் விட்டாரா? இல்லை! தமிழரின் உடமையைப் பறித்ததோடு நில்லாமல் உரிமையையும் பறிக்கப் புறப்பட்ட வெள்ளையர் வாணிபத்துக்குச் சாவுமணியடிக்கப் படை திரட்டவும் துவக்கினர்.

பன்னெடுங் காலமாக பாண்டியநாடு திரைகடலோடித் திரவியம் தேடித் தமிழகத்தின் செல்வத்தைப் பெருக்கி, கடலின் மீது தன் ஆதிக்கத்தைப் பரப்பி யிருந்தது. தமிழ் நாட்டின் வளத்துக்குக் காரணம் வாணிபம்தான். இடத்தைப் பிடித்த ஆண்டி மடத்தையும் சேர்த்துப் பிடித்ததைப்போல் உடமையைச் சுரண்டியதோடல்லாமல் உரிமையையும் "பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்" என்ற கம்பெனியை வைத்துப் பறித்தனர். இந்த ஸ்தாபனத்திற்கு மூலதனம் போட்டவர்கள் அனைவரும் வெள்ளையர்கள். கடலின்மீது தங்களுக்குள்ள ஆதிக்கத்தைப் பயன் படுத்திக் கொண்டு தூத்துக்குடியிலிருந்து சிலோனுக்குச் சென்று பல வகையிலும் பொருள் சேர்த்தனர். பொருள்களை அனுப்பவும், பிரயாணம் செய்யவும் அக் கம்பெனியைத் தவிர வேறு வழியில்லை வணிகருக்கு. ஆங்கில கப்பல் கம்பெனியின் கட்டண பளுவைக்கண்டு பலர் வருத்தம் கொண்டிருந்தனர். வழியெதுவும் இல்லாததால் வாளாவிருந்தனர். இவர்களில் முக்கியமானவர் பாலநத்தம் ஜமீன்தாரான பாண்டித் துரைச்சாமி தேவர் என்பவராவர். இவர்

இச்சூரண்டலுக்கு வழி காண எண்ணினர். இந்தச் சமயத்தில் 1906-ம் ஆண்டு சிதம்பரனார் "சுதேசி கப்பல் கம்பெனி" ஒன்றைத் துவக்கித் தம்மைத் தலைவராயிருக்க வந்து கேட்டபோது, மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொண்டார்.

அயல் நாட்டுக் கம்பெனியோடு போட்டி போட்டுப் புது ஸ்தாபனத்தை எழுப்புவதென்றால் சாதாரணமானதா? இதற்காகத் தன் சக்தி முழுவதையும் செலவழித்தார் சிதம்பரம் பிள்ளை. தூத்துக்குடியில் பலரும் உதவி செய்தனர். இன்னும் வடநாட்டில் உள்ள பலரும் இதில் அதிகம் லாபம் கிடைக்குமென்று தெரிந்து பங்குகளை துணிந்து வாங்கினர். சேலம் விஜயராகவாச்சாரியார் 15000 ரூபாய்க்கு பங்குகள் வாங்கினர். அவர் சேலத்தில் பிரபல வக்கீலாக இருந்து நிறைய பணம் சம்பாதித்தவர். சிதம்பரனாரின் நெருங்கிய நண்பரும் ஆவார்!

"மெய் வருத்தம் பாரார் கண்துஞ்சார்" என்பதுபோல, கப்பல் கம்பெனியின் கருமத்திலேயே கண்ணாயிருந்தார். ஷேர்களை விற்கும்பொருட்டும், கப்பல் வாங்குவதற்கென்றும் பம்பாய் செல்லும் சமயம் மனைவி பூரண கர்ப்பிணியாக இருந்தாள். பம்பாய் சென்றபின் தன அருமைமகன் நோய்ப்பட்டிருந்தான் என்று கடிதம் வந்துங்கூட கவனிக்கவில்லை.

கப்பல் பெறுமல் தூத்துக்குடி திரும்பிவருவதில்லையென்று சபதம் செய்து சென்ற அவர் 1807-ம் ஆண்டு கப்பலுடன் திரும்பினர். இதைக் கண்ட தூத்துக்குடி மக்கள் திரண்டெழுந்து வந்து வரவேற்றனர். அன்று இருந்து தமிழ் நாட்டில் எங்கும் சுதேசிப் பேச்சுதான். சுதேசி சாமான்களைத்தான் உபயோகிக்க வேண்டும், அந்நிய நாட்டுச் சோப்பு, துணி, முதலியவைகளை அகற்ற வேண்டுமென்ற பைத்தியம் எல்லோருக்கும் பிடித்துவிட்டது

இப்படி சுதேசி இயக்கம் நாளுக்குநாள் வளர்ந்து செல்வதைக் கண்டனர் ஆங்கிலேயர். என்ன செய்வார்கள். மக்கள் அனைவரும் தங்கள் சரக்குகளை சுதேசி கம்பெனியிலேயே அனுப்பினர். சுதேசிக் கம்பெனியின் பங்குகள்

பெற்றவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள். இதனால் ஆங்கில கம்பெனியின் வருமானம் குறைந்துவிட்டது. கட்டணத்தைக் குறைத்துப் பார்த்தனர். இலவசமாக பிரயாணிகளை ஏற்றிச் சென்றனர். தரகர்களை வைத்தனர். சுதேசி சாமான்களைத் தாங்களும் ஏற்றிச் செல்வதாகப் பொய் பிரசாரம் செய்தனர். பலன் இல்லை.

கடைசியாக சிதம்பரம் பிள்ளையிடத்தில் வந்து ஏராளமான பணம் தருவதாகவும், கப்பல் கம்பெனியிலிருந்து விலகி விடும்படியும் கேட்டனர். அவர் இவ்வஞ்சக வலையில் சிக்கவில்லை. இது அவருக்குள்ள ஆர்வத்தைத்தான் அதிகரித்தது.

தூத்துக்குடியிலே "தேசாபிமானிகள் சங்கம்" என்ற ஸ்தாபனத்தை எழுப்பிவித்து அன்னியச் சுரண்டலுக்கு முடிவு கட்டிவிட முயன்றார். இந்தச் சமயம் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரரும் தேசபக்தருமாகிய சுப்ரமணியசிவா இவருடன் வந்து சேர்ந்துகொண்டார். இருவரும் சேர்ந்து சுதேசி இயக்கத்தை வற்புறுத்தினர்.

சிவாவும், சிதம்பரமும் ஒன்று சேர்ந்து பேசினதால் ஆட்டம் கண்டிருந்த அந்நியக் கப்பல் கம்பெனி அடியோடு வீழ்ந்துவிட்டது. உடனே அதன் நிர்வாகிகள் சர்க்காருக்கு ரகசியமாக செய்தி அனுப்பி எப்படியாவது சிதம்பரனை சிறை செய்து சுதேசிகப்பல் கம்பெனியிடமிருந்து பிரித்து விட வேண்டுமெனச் செய்தி அனுப்பினர். இதன் காரணமாக சர்க்கார் அப்போது நெல்லை வட்டத்தின் கலக்டராக இருந்த விஞ்சு துரைக்குச் சிதம்பரனை ஏதாவது காரணம் காட்டி தேசப்பிரஷ்டம் செய்ய உத்தரவு அனுப்பினார்கள்.

இதற்கேற்றாற்போல் விபின் சந்திரபாலர் என்பவர் அப்போது சிறையிலிருந்து விடுதலையாகி வந்திருந்தார். இவர் காங்கிரஸின் முக்கியத்துவம் பெற்ற தலைவர். வங்காளத்தில் வந்தேமாதரம், நியூஇந்தியா என்ற இருபத்திரிகைகளை ஆரம்பித்து சுதந்திர உணர்ச்சியை மூலைமுடுக்குகளில் பரவச் செய்தவர். இவர் விடுதலையான தினத்தை 1908-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ந்தேதி கொண்டாடுவதெனத் தீர்மானித்தனர்

தேசாபிமானிகள் சங்கத்தினர். இதையொட்டி எந்தக் கூட்டமும் ஊர்வலமும் நடத்தப்படக் கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தடையை மீறுவதென சிதம்பரம் பிள்ளையும் சிவாவும் தீர்மானித்துவிட்டனர். இந்த முடிவைக் கண்ட சுதேசி கப்பல் கம்பெனியைச் சேர்ந்த பங்குதாரர் பலர் பயந்தனர். சிதம்பரம்பிள்ளை சென்றுவிட்டால், எங்கே தங்களது கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படுமோ என்று பயந்து தடையுத்தரவை மீறக்கூடாது என்று கண்டித்தார்கள்.

சிதம்பரனார் ஒத்துக்கொண்டாரில்லை. தான் எதற்காக நாட்டில் பிறந்தாரோ-கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்தாரோ-அந்தக் கொள்கையை ஈடேற்றவேண்டுமெனத் தான் விரும்பினார்.

மார்ச் மாதம் 9-ந் தேதி யன்றைய தினம் நெல்லை ஜில்லா வெங்கும் மக்கள் அமைதியான முறையில் விபின் சந்திரருடைய விடுதலை நாளைக் கொண்டாடினர். சிதம்பரனாரும் சுப்ரமணிய சிவாவும் தடையுத்தரவை மீறித் தூத்துக்குடியில் ஒரு பிரமாண்டமான கூட்டத்தில் பேசினார்கள்.

"இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு மனிதனின் முதல் கடமை தன் நாட்டை விடுதலை பெறச் செய்யும் போரில் ஈடுபடவேண்டியதுதான். வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப் படுத்தி அரசாளுவதை இனி நாம் சகிக்கமுடியாது. ஒன்று விடுதலை பெறவேண்டும், அல்லது வீரசுவர்க்கம் அடையவேண்டும். நம்முடைய எதிர்கால தலைமுறையைச் சேர்ந்தவர் அடிமை மண்ணில் பிறந்த பாபிகளாகக்கூடாது."

அன்றைய தினம் பொதுக் கூட்டத்தில் பேசியதின் கருத்துதான் மேலேகண்டது. இது ராஜ நிந்தனைக் குற்றமென்று பின்னால் நடந்த வழக்கின் போது நீதிபதி பின்ஹே கூறுகிறார்.

சிதம்பரனார் அன்றையதினம் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சு எஞ்சியிருந்த சில சுயநலமிகளுக்குக் கூட

வீர உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியது. உடை வெளுப்பவர், துணி தைப்பவர், மயிர் சிரைப்பவர், வண்டி ஓட்டுபவர், பாரம் சுமப்பவர் முதல் வியாபாரம் செய்யும் வணிக உள்பட சகலரும் அந்நியர்களையும் அவர்களது சரக்குகளையும் வெறுத் தனர். இவர்களுக்குச் சாதமாகப் பேசும் பல புல்லுருவி கள் தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியவில்லை. உதாரணமாக அய்யங்கார் ஒருவர்—பெயர் அரங்கசாமி என் பது—மக்களின் கிளர்ச்சியை அடக்கும் பொருட்டுப் போலிஸ் பட்டாளத்தை அதிகப்படுத்துவது நல்லது என்று கலக்ட ருக்கு யோசனை கூறினாராம். இது பலருக்குத் தெரிந்திருந் தது. இவர் ஒரு சமயம் நாவிதர் ஒருவரிடம் மயிர் சிரைத் துக்கொள்ளும் பொருட்டுச் சென்ற சமயம் அந்நாவிதர் அரை குறையாகச் செய்து அனுப்பிவிட்டாராம். பின் பல இடங் களில் சென்று பார்த்தும் பயன் இல்லாமல் திருநெல் வேலிக்குச் சென்று தன் வேலையை முடித்துக்கொண்டாராம்.

இவ்வளவு தீவிரப் போக்குடைய மக்கள் மத்தியில் இவர் களை எப்படிச் சிறை செய்வது என்று எண்ணிய கலக்டர் விஞ்சு, இருவரையும் திருநெல்வேலிக்கு வந்து தன்னைச் சந் திக்கவேண்டுமென உத்தரவிட்டார். உத்தரவு 11—3—1908 அன்று தூத்துக்குடியில் சாரதா செய்யப்பட்டது.

மறுநாள் நடுப்பகல் 12 மணிக்கு நெல்லையில் கலக்டர் விஞ்சு துரையை இருவரும் சென்று பேட்டி கண்டனர். இனி இருவரும் அரசியல் வேலைகளில் ஈடுபடுவதில்லையென எழு திக் கொடுப்பதோடு நன்னடத்தை ஜாமீன் தரவேண்டுமென் றும், அத்துடன் அல்லாமல் அவர்கள் திருநெல்வேலி வட் டத்தை விட்டே வெளியேறிவிடவேண்டு மெனவும் எச் சரிக்கை செய்தார். இரு சாராருக்குமிடையே நீண்ட நேரம் வாக்குவாதம் நடந்தது. கடைசியில் சிதம்பரமும், சிவாவும் கலக்டரின் உத்திரவுக்கு இணங்காததினால் அங்கேயே கைது செய்யப்பட்டனர்.

இவையெல்லாம் நடந்து முடிவதற்குள் மணி மூன்றாகி விட்டது. கலக்டரின் அலுவலகத்திலிருந்து இருவரும்

பாளையங்கோட்டைச் சிறைக்குத் தக்க பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர். இப்படி நடைபெறுமென முன்கூட்டியே அறிந்த நண்பர் சண்முகசுந்தரம் என்பவர் கொஞ்சம் கட்டுச் சோறுடன் சிறைவாயிலில் காத்திருந்தார்.

சிறைவாயிலில் சிதம்பரனார் தமது நண்பர் காத்திருக்கக் கண்டார். அவர் தந்த அன்னத்தை ஆவலுடன் உண்டார். அவரது கரங்களில் இருந்த பொன் வளையம் அகற்றப்பட்டு, இரும்பு வளையங்களாக மாற்றப்பட்டன. சிறைப்பட்ட செய்தி காட்டுத் தீப் போல் நாலா பக்கங்களிலும் பரவியது. மறுநாள் காலை மார்ச்சு மாதம் 13-ந் தேதி நெல்லை ஜில்லா வெங்கும் மக்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக மாணவர்களும் இளைஞர்களும் வீறு கொண்டெழுந்தனர். கடைத்தெருவில் உள்ள எந்தக் கடையும் அன்று திறக்கப்படவில்லை. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் பொது இடங்களில் கூட்டமாகக் கூடினர். சர்க்கார் அதிகாரிகள் பலர் தாக்கப்பட்டதோடு வந்தேமாதரம் சொல்லும்படி வற்புறுத்தப்பட்டனர். நகரத்துப் போலிஸ் ஸ்டேஷன் தீக்கிரை யாக்கப்பட்டது.

இதற்குள் இதையெல்லாம் கேள்வியுற்று ஸ்தலத்திற்கு வந்த கலக்டர் தன் கைத்துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கிச் சுட்டான். இரண்டு சிறுவர்கள் வீதி வழியே சென்றுகொண்டிருந்தவர்கள் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாயினர். நீண்ட நேரம் வரை அவர்களுடைய சவம் நாதியற்று வீதியிலே கிடந்தன.

திருநெல்வேலியில இப்படி நடந்துகொண்டிருந்தபோது தூத்துக்குடியிலும், தச்சநல்லூரில் மக்கள் மறியல் நடத்தினார்கள். தூத்துக்குடியிலுள்ள கோரல் மில் தொழிலாளர்கள் அனைவரும் பெருங் கூட்டமாகக் கூடி, இந்த அநீதியைக் கண்டித்து கோஷமிட்டுச் சென்றனர். சிதம்பரம் பிள்ளை சிறை செய்யப்பட்டதைக் கேட்டபோது ஒரு தொழிலாளிகூட கண்ணீர் விடாமலில்லை. ஒரு சமயம் இவர்களது கூலி உயர்

வின் நிமித்தம் பிள்ளையவர்கள் தலைமை தாங்கிப் போராட்டம் நடத்தினதை அவர்கள் மறந்தார்களில்லை.

இந்த இடங்களில் ஏற்பட்ட குழப்பத்தை யடக்கவும், கலவரம் ஏற்படாம லிருக்கவும், சென்னை சர்க்கார் பிரத்தியேக படையொன்றை அனுப்பி வைத்தது. அதன் செலவு பொதுமக்களிடமிருந்து அபராதத் தொகையாக வசூல் செய்யப் பட்டது.

1908-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23, 26 தேதிகளில் நெல்லை டிப்டி மாஜிஸ்டிரேட் முன்பு சிதம்பரனாரின் வழக்கு விசாரணைக்கு வந்தது. இராஜ நிந்தனையாகப் பேசினதாகவும், சுப்ரமணிய சிவாவுக்கு இடம் கொடுத்துக் கலவரங்களுக்குக் காரணமாக இருந்ததாகவும் கூறப்பட்டு செஷன்ஸுக்கு கமிட் செய்யப்பட்டார். அதை விசாரித்த செஷன்ஸ் நீதிபதி பின்ஹே 20 வருடம் கடுங்காவல் தண்டனையை அந்தமான் தீவில் அனுபவிக்கவேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

சிதம்பரம்பிள்ளையவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எல்லாப் பத்திரிகைகளும் கண்டித்தன. பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் மூலம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டன.

அப்போது இந்தியா மந்திரியாக இருந்த லார்டு மார்லி என்பவர் கவர்னர் ஜெனரல் மிண்டோவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தேசமக்கள் வெகுண்டு எழுந்திருப்பதையும், இது மாதிரியான செய்கைகளைச் செய்துகொண்டே போனால் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி அஸ்தமனமாகிவிடுமெனவும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

1908-ம் ஆண்டு அக்டோபர் 13-ந் தேதி ஹைகோர்ட்டுக்கு சிதம்பரனாரின் வழக்கு அப்பீலுக்குச் சென்று பத்து வருடமாக குறைக்கப்பட்டது.

மீண்டும் சி. சுப்ரமணிய பாரதியார், ஸி. விஜயராகவாச்சாரியார் போன்ற பலர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக வழக்கு பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டு,

தண்டனை ஆறு வருடமாகக் குறைக்கப்பட்டு, அதைத் தென் ஞட்டிலேயே அனுபவிக்கலா மெனவும் தீர்ப்பு ஆகியது.

சிதம்பரனார் வைத்துச் சென்ற சுதந்திர தீ அணையாது கொழுந்து விட்டெரிந்தது. 1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ந் தேதி நெல்லை கலக்டரை வாஞ்சி என்ற இளைஞன் சுட்டுக் கொன்று, தானும் தற்கொலை செய்துகொண்டான். இவன் ஒரு பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவனென்று கருதப் பட்டது!

சிறைகளில் சிதம்பரனார் அடைந்த துயரம் எழுத முடியாததாகும். தூய்மையாக அணிந்திருந்த அவரது ஆடைகள் அகற்றப்பட்டு ஒரு சிறு காலங்கி, மற்றொரு மேலங்கி, தலைக்கு ஒரு குல்லாய், இடுப்பில் ஒரு கௌபீனம் இப்படி இரண்டு ஜதைகள் அவருக்குக் கொடுக்கப் பட்டன. தரையினும் மோசமான புழுதி படிந்த இடத்தில், கிழிந்த கோரைப் பாயொன்றில் படுத்துறங்கினார். படுகொலையும், களவும் புரிந்த பாதகக் கைதிகள் வாழும் நான்காம் ப்ளாக்கில் இருட்டறையில் தள்ளப்பட்டார். கோதுமை, கேழ்வரகு, ரொட்டி குழம்போடு சேர்த்துச் சட்டியில் உண வருந்தினார். இது கண்டு அவர் உள்ளம் கலங்கவில்லை. கண்ணியமாக நாட்டை வாழவைக்க வேண்டிய கடமையைச் செய்ததற்காகக் களிப்படைந்தார்.

பாளையங்கோட்டைச் சிறைக்குப் பின் கோவைச் சிறைக்கும், அதன் பின் கண்ணனூர் சிறைக்கும் அவர் அனுப்பப்பட்டார். கோவைச் சிறையிலே அவர் பட்டபாடு மிருகம்கூட பட்டிருக்காது. கம்பாஸிடர் வேலையைச் சில நாள் செய்தார். அதன் பின் சிறையதிகாரிகளின் கொடுமைக்குள்ளாகிச் செக்கிழுத்தார்.

சிதம்பரனார் செக்கிழுத்து மாடாக உழைத்த அநீதியை மனித இனம் உள்ளளவும் மறக்காது. தேச விடுதலையின் பொருட்டுத் தன்னலங் கருதாது உழைத்த தேசபக்தருக்குக் கிடைத்த பரிசு இதுதான்.

கடைசியாக கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் கம்பாஸிடர் வேலையைக் கவனித்தார். சிதம்பரனார் சிறைகளிலிருந்த போது "மனம் போல வாழ்வு" "வலிமைக்கு மார்க்கம்" "அகமே புறம்" மெய்யறிவு, மெய்யறம், முதலிய நூல்களை இயற்றி பின்னர் திருக்குறளிலுள்ள அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியிருக்கின்றார்.

சிறைகளில் இருந்து 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதி விடுதலையடைந்து வெளியே வந்தார். சிறைகளில் அனுபவித்த துயரங்களின் அறிகுறி அவர் முகத்தில் சிறிது கூட இல்லை. கம்பீரமாகக் காணப்பட்டார். தேசத்தின் பொருட்டு எதையும் சகிக்கும் மனப் பண்பு அவருக்கிருந்தது. சிறையிலிருந்து புதுச்சேரிக்கு வந்த சமயம் தனது நண்பர்கள் பாரதியார், அரவிந்தர், வ. ராமஸ்வாமி போன்றவர்களுடன் மனம் சிரித்தும், களிப்புடனும் பேசியது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அதன்பின் அவர் தனது வாழ்க்கையைச் சென்னையில் சிந்தாதிரிப் பேட்டையிலேயே நடத்தினர். சிறையிலிருந்து வந்தபின் அவரை வாவென்று அழைப்பார் எவருமில்லை. நெருங்கிய நண்பர் சுப்ரமண்ய சிவம் தான் சிதம்பரனாரைக் கண்டதும் கட்டித் தழுவிக் கொண்டார்.

பின்னர் நீதிபதி லாலஸ் என்பவர் உதவியால் வக்கீல் சன்னத்தை திரும்பப் பெற்றுச் சிறிதுகாலம் தொழில் நடத்தினார். அப்போதெல்லாம், அவர் பெரும் தீவிரவாதியான திலகர் போக்கை அனுசரிப்பவராகவே இருந்தார். ஒத்துழையாமைத் திட்டத்தைப் பரீசிலனை செய்வதன் நிமித்தம் 1920-ல் கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் மகா சபை கூடியது. அப்போது சிதம்பரம் பிள்ளையவர்கள், ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்க்கும்பொருட்டுப் புறப்பட்டார். அவருடன், நாமக்கல் கவிஞர், சேலம் விஜயராகவாச்சாரியார், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் போன்ற பலரும் சென்றிருந்தனர்.

தீர்மானத்தை ஆதரிக்கும் பொருட்டு அவ்வண்டியில் பிரயாணம் செய்த கவிஞருடன பிள்ளையவர்கள் விவாதித்துக் கொண்டே சென்றார். சிதம்பரம் பிள்ளையவர்களின் சிறப்புகளைக் கவிஞர் பெரிதும் பாராட்டியிருக்கின்றார்.

சிதம்பரம்பிள்ளை தீவிரப் போக்குடையவர் என்பதற்கு அவரது கல்கத்தா பிரயாணம் ஒரு சிறந்த உதாரணமாகும். தங்களைத் தாண்டிச்செல்ல இருந்த கல்கத்தா மெயிலைத் தடுக்கும் நிமித்தம் ரயில் பாதையில் சிலரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்தார். யார் கூறியும் கேட்காது ஒரே பிடிவாதமாக "மெயில் வண்டி நம்மைத் தாண்டிச் செல்வதன் நிமித்தம் நாமிங்கு மணிக்கணக்காக நிறுத்தி வைக்கப்படுவது அநீதமானது. எனவே நம்மை மீறி அவ் வண்டி செல்லாது தடுக்கவேண்டும்" என்று கூறினார். கடைசியில் தனது நெருங்கிய நண்பர் விஜயராகவாச்சாரியார் வந்து கூறியதன்பின் தன் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டார்.

சிதம்பரனார் தீவிரவாதியாக இருப்பினும் காந்தியடிகள் மீது மிகவும் பற்றுக் கொண்டவர். "இந்தியா இன்னொரு அரசின் துணை கொண்டோ அல்லது பயங்கரப் புரட்சி நடத்தியோ சுயாட்சி பெற முடியுமென்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அஹிம்சையின் மூலமாகத்தான் இந்தியா சுயராஜ்ஜியமடைய முடியுமென நம்பினார்.

சிதம்பரம் பிள்ளையின் சேவையின் காரணமாக ஆயிரக் கணக்கான தேசபக்தர்கள் தோன்றினார்கள். அவர் விட்டுச் சென்ற சுதந்திர தீ அணையாது பின்னால் கொழுந்து விட்டு பிரகாசித்தது. 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் தேதி அவர் தம சுற்றத்தார்களையும், நம்மையும் துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்து விட்டார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, இருண்ட சிறைக் கம்பிகளிடையே எண்ணுதற்கரிய இடர்களடைந்து, தன் இன்ப வாழ்வையே துன்ப வாழ்வாக மாற்றிக் கொண்ட தியாகி வ. உ. சிதம்பரம் பிள்ளையைத் தமிழர்கள் உள்ளளவும் மறக்கமுடியாது.

வீரவாஞ்சி ஐயர்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

சுதந்திரப் போரிலே சிறை புகுந்த தேச பக்தருக்கு வீரமான்யம் வழங்குகின்றனராம்; ஐந்து காணி நிலம் கொடுக்கின்றனராம்! அவ்விதம் வழங்கி அன்னாரின் தேசாபிமானத்தைப் பாராட்டுகின்றனராம்! இதில் எவ்வளவு தாமதம்! எத்தனை கிளர்ச்சி! எவ்வளவு கூச்சல்! எத்தனை சமாதானம்! ஈசனுக்கே சாட்சி!

தேச வெறிகொண்டோர், சுதந்திர ஆவேசம் வாய்ந்தோர், சுயராஜ்ய தாகம் எடுத்தோர், வீரமானியத்தைக் கருதியா ஊழியம் புரிய முற்பட்டனர்? அல்லது உயிரைக் கொடுக்க முன்வந்தனர்? இன்றேல் ஓட்டாண்டியாக உழல உறுதி பூண்டனர்? எத்தனை காணி நீலம் வழங்கினாலும், அச்சேவைக்கு ஈடுசெய்வதாக ஆகுமோ?

இனி, தேசப்பணியே தெய்வப்பணி, மன்னுயிருக்கு உழைத்தலே முன்னவனுக்கு உரிய பூஜை, ஊழியத்தில் ஆழ்ந்த பின்னர், உயிர் ஒரு பொருட்டா என்ன? காரிய சித்தி யன்றோ பெரியது; காரிய சித்தியை நாம் காணாவிடினும், பிரறேனும் கண்டு களித்து இன்பம் எய்தட்டும்! என்றெண்ணியவர்கள் எத்தனையோ பேர்!

தூக்கு மேடையில் தாவி ஏறியோர் எத்துணையர்? குரல்வளையை நெறிக்க வரும் தூக்குக் கயிற்றை ஆனந்தத்துடன் முத்தமிட்டோர் எத்தனை பெயர்? துப்பாக்கியினால் எதிரியைச் சுட்டு வீழ்த்தித் தம்மையும் சுட்டுக்கொண்டு செத்தோர் எத்துணையர்? இவர்களுக்கெல்லாம் யார் வீரமானியம் வழங்கமுடியும்? வழங்குவதாயினும், என்ன மானியம் வழங்கமுடியும்?

சுதந்திர வேள்வியில், சுயராஜ்ய சித்திக்கான தீயினில், உயிரை ஆகுதி செய்தோருக்கு உரிய மானியம் யாது? முன்னாளிலே நமது மூதாதையரோ வீரக்கல் நட்டனர்; விழுமிய சிலையும் நாட்டினர்! நாட்ட இயலாதாரோ தமது மனக்கோயிலிலே அன்னாரை இருத்தி அனுதினமும் வழுத்திவந்தனர்.

உள்ளமென்னும் உயரிய கோயிலிலே இருத்தித் துதிக்க வேண்டிய தமிழ் வீரரோ எண்ணில் அடங்கார்! எட்டிலும் அடங்கார்! அன்னவரில் ஒருவர் வீரவாஞ்சிஐயர். திருவிதாங்கூரைச் சார்ந்த செங்கோட்டையில் சனித்தவர்; குமரியை யடுத்த நாட்டினுக்கு ஒரு சிகரமாக உதித்தவர்! அவர் வரலாறு பார்ப்போம்.

காங்கிரஸ் மகா சபை ஆண்மை வடிவங்கொள்ள அரும்பாடுபட்ட அரிய தலைவர்கள் பலராவர். அவர்களில், பாலகங்காதர திலகர், விபினசந்திரபாலர், லாலா லஜபதிராய், பாபு அரவிந்தகோஷர் ஆகிய நால்வரையும் முதன்மையாம் மொழிய வேண்டும். அவர்கள் அம்மகா சபையினின்று ஆவேச கர்ஜனை புரிந்தனர்!

அப்போது, சுதந்திரப் போராட்டத்திலே மார்தட்டி முன்நின்ற மாகாணம் வங்காளமே! அவ்வங்கமே தேசமனைத்தினுக்கும் புத்துயிரும் உணர்ச்சியும் ஊட்டியதெனல் வேண்டும்! அக் கர்ஜனையைக் கண்டும், வங்கத்தின் வீறுபார்த்தும், வெலவெலத்துப் போனான், அன்றிருந்த ராஜப் பிரதிநிதியாம் கர்ஸன் பிரபு.

அவன் மகா மேதை. மிக்க பிடிவாதக்காரன், முரட்டு சுபாவமும் வாய்த்தவன். வங்காளத்தை ஹிந்து வங்காளம், முகம்மதிய வங்காளம் என இரு துண்டாக்கினான் அவன். ஆக்கி, ஹிந்து—முகம்மதிய வேற்றுமைக்கும் விதை தூவினான்; வீறுப்பும் பேசினான்; நம்மவர் மீது அவதூறும் சுமத்தப்பார்த்தான்.

அதுகண்டு, வங்க வேங்கை கண்சிவந்து, வால்முறுக்கி, வெகுண்டெழுந்தது; சுதேசியம், அன்னிய பகிஷ்காரம்

எனும் ஆயுதங்களை எடுத்து வீசியது! வீசவே, நம்மவரிடம் சுதேச சாமான்களின் பற்று மிகுந்தது; அன்னிய சாமான்களின்மீது வெறுப்பு விஞ்சியது. விஞ்சவே, வர்த்தகத்தை உயிர்நிலையாகக் கொண்டிருந்த அன்னியரும் அன்னிய அதிகாரவர்க்கத்தாரும் வயிற்றில் கனத்த அடிகொண்டனர்.

வயிற்றில் விழுந்த அந்த அடி தாங்கமுடியவில்லை; உயிர்நிலைக்கு ஆபத்து என்றால், யாவர் வாளா இருப்பர்? அடக்குமுறைகளை மேற்கொண்டு, தாண்டவமாடியது அவ்வர்க்கம். சும்மா கிடக்கும் சங்கை ஊதிக்கெடுத்தானும் ஆண்டி என்பர். அடக்குமுறைகளைக் கண்டதும், தேசம் விழிப்புக்கொண்டது; வீறிட்டும் எழுந்தது; சண்டி வெறுண்டால் காடு கொள்ளுமோ?

வங்கத்தின் எழுச்சியும் வீச்சும் நோக்கியவுடனே, தென்கோடியிலுள்ள தமிழகம்—குறிப்பாகப் பாண்டி மண்டலம்—தோள்தட்டி யார்த்தது. அவ்விதம் ஆர்ப்பதற்கு மூலபுருஷரானோர் சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகிய இவர்களே. அவ்விருவரின் வீரப்பேச்சும், தீரச்செயலும் அதிகார வர்க்கத்தைக் கலக்கித் திக்கு முக்காடச் செய்துவிட்டது.

அதன் விளைவாக அப்பெரும் பிள்ளையும் சீரிய சிவாவும் சிறைப்பட்டனர். தீவாந்தர சிட்சையும் விதிக்கப்பட்டனர். அக் கொடுந்தண்டனை கேட்டதும், தமிழகம் முழுதுமே உறுமியது; கொந்தளிப்பும் படபடப்பும் கொண்டது. முள்ளை முள்ளாலேயே எடுக்கவேண்டும் என்பது ஒரு வகையான தர்ம விதியாம்.

அடக்குமுறையைக் கையாளும் அதிகார வர்க்கத்தை ஆட்டிப்படைக்க, ஆயுதம் எடுத்து வீசியாக வேண்டும், என்னும் உணர்ச்சி எங்கும் ஓங்கிவிட்டது. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் வருஷத்துக்குப்பின், நம்மவர் அனைவரையும் ஆயுதம் தொடக்கூடாதென்று ஆங்கில அதிகாரிகள் சட்டஞ் செய்திருக்கையில், ஆயுதத்துக்கு எங்கே போவது?

அவ்வேளையில், புதுச்சேரியே விழுமிய புகலிடமாயிற்று. எப்படி என்றால், பெருங்கடன்பட்டு மீள வகை காணுதோரும், ராஜீயக் கிளர்ச்சி செய்து தங்க இடமின்றித் தவிப்போரும், புதுச்சேரியிலே தஞ்சம் கொள்ளின், அவர்களை எந்த அரசாங்கமும் ஏதும் செய்யக்கூடாது என்பது சர்வதேச சம்மதமான நியதியாம்.

மேலும், தங்கு தடையின்றிப் புதுச்சேரியிலே ஆயுதம் தருவிக்கலாம், தரிக்கலாம், கையாளலாம்: அத்தகைய புதுச்சேரியில் அன்று தஞ்சம் புகுந்தார் அரவிந்தர். இன்றும் பெரிய யோகியாக அங்கேயே இருக்கிறார். கவிராஜ சிங்கமான சுப்பிரமணிய பாரதியும், தேசிய வீர சிங்கமாண வா. வே. சு. ஐயரும் அப் புதுச்சேரியையே புகலிடமாகக் கொண்டனர்.

முள்ளை முள்ளாலேயே எடுக்கவேண்டும் என்ற நியதியைக் கடைப்பிடித்த வ. வே. சு. ஐயர் அப் புதுச்சேரியிலே ஆயுதப் பயிற்சிச் சாலையொன்று நிறுவினார். வாளேந்த விரும்பும் வீரருக்கும், துப்பாக்கிகொண்டு சுட விரும்பும் தீரருக்கும், அப் பயிற்சிச்சாலையில் பாமபோதம் கிட்டியது.

தேசபக்தி ஊட்டும்படி பேசினால், சுயராஜ்யப் பற்றுண்டாகும்படி பிரசங்கம் பண்ணினால், நாடு நமது என்று வாதாடினால், சொந்த நாட்டிலே பிறர்க்கடிமை புரிவதோ என்று பிரலாபித்தால், ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டுவதோ, என்று விளம்பினால், சிறைவாசம் கிட்டுகிறது. எனவே, பேச்சுப் பேசிச் சிறையிலே கிடந்துழலுவதினும், வாளேந்தி வீரங்காட்டி விழுப்பம் எய்த வேண்டும், என்று தீர்மானம் கொண்ட பலரும் புதுச்சேரி புகுந்து, ஆயுதப் பயிற்சி பெற்றனர்; அந்தரங்கமாக ஆயுதங்களும் கொண்டு திரும்பினர். தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம், என ஒரு வசனமுண்டு. அவ் வசனத்தில் வாலிபர் சிலர் ஊக்கம் வைத்தனர்.

அடக்குமுறையைக் கையாண்டு கொக்கரிக்கும் அதிகாரிகளைச் சுட்டு வீழ்த்துதல் ஏற்கும் எனும் கூட்டத்தார் பெருகினர். அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவான் என்பது அவ்வாலிபரின் கோட்பாடாயிற்று. அவ்வாலிபரில் நீலகண்ட பிரம்மச்சாரி, சங்கர கிருஷ்ணையர், வாஞ்சி ஐயர் இவர்களைக் குறிப்பிட வேண்டும்.

எரிகிற நெருப்பில் பெட்ரோலை ஊற்றுவதுபோல், இப்பரந்த பாரத பூமியிலே ஆங்கில அதிகாரவர்க்கம் நடக்கு வரலாயிற்று. எங்ஙனம் என்றால், லாலா லஜபதிராயும் அவரது தோழரான ஸர்தார் அஜீத் சிம்மனும் நாடுகடத்தப் பட்டனர்! வங்காளத்திலே பாரிஸால் நகரில் கூடுவதாயிருந்த ராஜீய மகாநாடு தடியடிப் பிரயோகத்தினால் கலைக்கப் பட்டது.

வங்காளத்திலே பிரபல தலைவர்கள் கண்காணாத இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டனர். வந்தேமாதரம் என்று வாழ்த்திய மாணவர் தடிக்கம்பினால் தாக்கப்பட்டனர். சுதேசத் தொழில்களை விருத்திசெய்யும் விருப்பமுடைய மாணவர் தம் கலாசாலைகளிலிருந்து நீக்கப்பட்டனர். சதிசெய்தாரென்று பாபு அரவிந்த கோஷ்மீது வழக்குத் தொடரப்பட்டது.

மனச்சாட்சியை மதித்து அவ்வழக்கில் சர்க்கார் பக்கம் சாட்சிசொல்ல மறுத்த விபினசந்திரபாலர் ஆறுமாதம் தண்டிக்கப் பெற்றார். தேசபக்தியைத் தட்டியெழுப்பும் வியாசங்கள் வரைந்து, கண்மூடித்தனமான அடக்குமுறை பலிக்காதெனவற்புறுத்திய பத்திராசிரியர்களும் சிறைக்குள் தள்ளப்பெற்றனர். இரகசியப் போலீசார் யாரையும் பின் தொடர்ந்து கண்காணிக்கத் தலைப்பட்டனர்.

அடக்குமுறை அவ்விதம் தலைவிரிகோலம் கொள்ளவே, அவ்வாலிபருக்கு ஊட்டப்பட்ட ஆவேசச் சபதம் யாதெனில்:

"நமது தேசத்திலிருந்து பாபிகளான பறங்கியரை (அந்நாளிலே ஆங்கிலேயரைப் பறங்கியர் என்பது சகஜம்)

விரட்டியோட்டுவதாக ஆண்டவனறிய விரதம் கொள்ளுங்கள்! சுயராஜ்யத்தை நிலைநாட்டுவதாகவும் சத்தியம் செய்யுங்கள்! புண்ணிய பாரதபூமியிலே பறங்கியிருக்கும் வரையில், நமது வாழ்வு மானங்கெட்ட வாழ்வாகவே இருக்கும் என்று எண்ணிக்கொள்ளுங்கள்!

"கையில் அகப்பட்ட கல்லையோ கட்டியையோ கொண்டு, நாயை அடித்துச்சாத்துவது போல், கையில் கிடைத்தது கத்தியோ கம்போ குச்சியோ கட்டையோ எது வானாலும் சரி, அது கொண்டு பறங்கியை அடித்துப் போடுங்கள். கத்தியும் கம்பும் கிடைக்கவில்லையானால், கடவுள் கொடுத்த கையினாலாவது ஏன் நாலைந்தடி போடக்கூடாது, அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் அன்றோ?"

அந்நாளிலே ஒரு காந்திமகான் தோன்றவில்லை. அஹிம்சை என்பதும் விரதமாக இல்லை. பொய்க்குப் பொய்யும் கோளுக்குக் கோளும் இரட்டிப்பாக நாம் செய்தால்தான், பொய்யையும் கோளையும் போக்கலாம் என்ற நினைப்பே எங்கும் மேலோங்கி நின்றது! கிருஷ்ணசாமி சர்மா என்ன, நீலகண்ட பிரம்மசாரி என்ன இவர்கள் எங்குஞ்சென்று கனல் பொறி பறக்கப் பேசிவந்தனர்.

இனி, இரத்தத்தைக் கண்டால் சிலருக்கு பிரமை ஏற்படும்; மயக்கம் உண்டாகும்; மாறுதல் தோன்றும். ஆதலின் அத்தகைய நடுக்கம், மயக்கம் இவற்றை நீக்க, இரத்த விழாவில் வாலிபர் பழக்கப்பெற்றனர். ஆடுகளையும் கோழிகளையும் வெட்டி, அவற்றினின்று பீச்சும் இரத்தத்தை வாலிபர் பார்த்துப்பழகினர்; தங்கள் உடம்பிலே கத்தியினால் சிறுசிறு காயங்கள் பண்ணிக்கொண்டு, இரத்தம் வெளிப்படுவதைக்கண்டு கூச்சமும் அச்சமும் விடுத்தனர்.

தேச சேவைபுரிவோம், பறங்கியரைப் பழி வாங்குவோம், என்று பேசும் வாலிபரோ துளசி, விபூதி இவற்றைத் தொட்டு அணையிடாமல், இரத்தத்தைத் தொட்டு ஆணையிட்டுவந்தனர்! ஆங்காங்கே மலைகளிலும் காடுகளிலும் புகுந்து, துப்பாக்கிகொண்டு சுட்டுப் பழகிவந்தனர்! குறிப்

பிட்ட நாட்களிலே காளிபூஜை, ரட்சகாளிபூஜை, ரத்தகாளி பூஜையும் பண்ணி வந்தனர்! மக்களுடைய நெஞ்சிலே தேசாவேசம் கொழுந்து விடுவதை அதிகாரிகள் உணராது போயினர்.

தவிர, அன்றோ இந்தியாவின் ஜனத்தொகை முப்பத்து மூன்றுகோடி, இத்தனை மக்களையும் ஆண்டுவந்தோர் அன்று வெள்ளை மயமாயிருந்த ஐ. ஸி. எஸ். வர்க்கத்தாரான ஓர் ஆயிரத்து மூந்நூறுபேரே! அவர்களின் ஆட்சியைப் பாதுகாக்க இங்குள்ள சேனையில் சேவித்த வெள்ளைக்காரரும் ஏறக்குறைய எண்பதாயிரவரே. இவர்களுக்குப் பக்க பலமாக வர்த்தகத்துறையிலும் இதரதுறைகளிலும் வாழ்ந்து வந்த வெள்ளைக்காரர் சுமார் மூன்றுலட்சம் பேரேயாம்.

முப்பத்து முக்கோடி மக்களை ஒரு மூன்று லட்சம் அன்னியர் கட்டியாளுதல் விந்தையிலும் விந்தை; ஒரு முழுகம்பினைத்தாங்கிய பாகனைக்கண்டு மிருகங்களில் பெரிய யானை அஞ்சிக்கிடப்பதுபோன்ற பான்மையே பன்மை! என்று இங்கிலாந்திலே நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியொருவன் தமது ஜபதியிடம் குத்திப்பேசினான் என்பதை அவரே ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

இத்தகைய நிலையை எல்லாம் கண்ட வாஞ்சி ஐயர் என்னும் வாலிபர் செங்கோட்டையிலே காட்டிலாகாவில் பார்த்து வந்த குமாஸ்தா வேலையிலிருந்து மூன்று மாத காலம் ரஜா பெற்றார்! புதுச்சேரி சென்று ஆயுதப் பயிற்சிச் சாலையில் சேர்ந்து கைத்துப்பாக்கியில் தேர்ச்சி பெற்றார்! தேசத்துக்கே என்னை அர்ப்பணம் செய்வேன், என்று உதிரத்தைத் தொட்டு உள்ளமறியச் சபதம் செய்தார்! பறங்கி யொருவனை பழிவாங்குவேன் என்று வஞ்சினமும் பேசினார்.

மாமன் சங்கரகிருஷ்ண ஐயரின் மூலம் நீலகண்ட பிரம்மச்சாரியின் பழக்கம் கொண்டார். இளமையாதலின், தேசத்துடிப்பு தலைசிறந்து நின்றது. மின்போலழியும் உடல் ஒரு பெருங் காரியத்தைச் சாதித்தழிதல் சிறந்த

தெனக் கருதினார். புகழோடு மடியவேண்டும் என்று தீர்மானம் கொண்டார். புல்பிடிக்கும் பூசுரன் என்பது மாறித் துப்பாக்கி தாங்கும் அந்தணன் என்று பெயரெடுக்க விரும்பினார். இள மனைவியிடம் விடைப்பெற்றுப் புறப்பட்டார் தேச சேவைக்கு.

இங்ஙனமிருக்க, உயர்குலப் பாரசீகமாது, மிகுந்த செல்வம் படைத்த குமரி, தேச பக்தியின் உருவெனத் திகழ்ந்த அரிவை, மாடம் காமா எனப்படுவாள், நம் தேசத்தின் அன்னிய ஆட்சி கண்டு சகிக்கவில்லை; இத்தேசத்தில் வாழவும் விரும்பவில்லை. எனவே பிரான்ஸ்தேசம் சென்று, பாரிஸ் நகரில் வாழ்ந்து வந்தாள். தனது திரண்ட செல்வ மனைத்தையும் இந்தியாவின் சேவைக்கென்றே செலவழித்து வரலானாள்.

அந்நாளிலே, இங்கிலாந்தில் படிக்கும் இந்திய மாணவருக்கும் அம்மாதுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. ஏழை இந்திய மாணவருக்கும் தேசபக்தி நிரம்பிய மாணவருக்கும் அவளது செல்வம் ஊர் நடுவே பழுத்த பழமரம் போல் பயன்பட்டு வந்தது. வந்தே மாதரம் என்னும் பெயருடன் பாரிஸ் நகரில் அவள் ஒரு பத்திரிகை நடத்தி வந்தாள்.

அப்பத்திரிகையின் 1911-ஆம் வருஷத்திய மே மாத இதழில் செய்தி யொன்று, முக்கியமான செய்தி யொன்று காணப்பட்டது. அதன் சாரம் யாதெனில்,

“ஒரு கூட்டத்திலோ ஒரு பங்களாவிலோ ஒரு ரயிலடியிலோ, ஒரு ரயில்வண்டியிலோ ஒரு கடையிலோ ஒரு மாதா கோயிலிலோ ஒரு தோட்டத்திலோ ஒரு சந்தையிலோ சமயம் வாய்த்தபோது வெள்ளைப் பறங்கியர் கொல்லப்பட வேண்டும். வெள்ளையதிகாரிதான் முக்கியம் என்பதில்லை. வெள்ளை வர்த்தகனாயினும் சரி, பறங்கி பறங்கியே அவனைத் தீர்த்து கட்டியே ஆகவேண்டும்.

“முதல் சுதந்திர மகா யுத்தத்தின் தலைவனான நமது நானா சாகிப் அந்த உண்மையை உணர்ந்து நடந்தார். நமது

கண்பரான வங்காளியரும் அவ்வாறே உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டுளர். அவர்களின் முயற்சி வெற்றி பெறுமாக! அவர்களின் கைவரிசை சலியாது, கிளைத்துத் தழைக்குமாக! இங்கிலையில், ஆங்கிலேயனே எல்லாவற்றையும் சமாளித்து விட்டதாகக் கும்மாளம் போடாதே என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்!" இது நிற்க,

திருநெல்வேலிச் சீமையிலே தேச பக்தர்கள் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டதை வாஞ்சி ஐயர் கண்டார்: அதன் பயனாக, அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடித்தனக்காரன் வீட்டு அம்மியை உடைப்பதையும் பார்த்தார். இவ்வளவுக்கும் காரணமான கலெக்டரை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று கச்சை கட்டினார்,

காரியத்தைக் கண்டெடுக்கக் காலம் இடம் இவற்றை அவர் கருதிநின்றார். திருநெல்வேலி ஜில்லா கலெக்டரான ஆஷ் என்பவர் எங்கேபோனாலும் சரி, நிழல் போல் அவரும் தொடர்ந்தார். அவர் தொடர்வதை யாரும் கண்டு கொள்ள இயலவில்லை. ஒரு சமயம் ஆபிஸ் குமாஸ்தாவைப் போல் தோன்றுவார்; ஒரு சமயம் டபேதாரைப் போல் தென்படுவார். ஒரு சமயம் பெரிய மனிதரைப் போன்ற கோலத்தில் காட்சியளிப்பார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் ஜூன்மாதம் 17-ம் தேதியன்று தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட ரயில் வண்டி, மணியாச்சி ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தது. சேர்ந்ததோ இல்லையோ, முதல் வகுப்பு வண்டியிலே திடீரென்று ஒரு துப்பாக்கி வேட்டுக் கேட்டது. அவ்வளவுதான்! ஆஷ் என்பான் உயிரழந்து கீழே சாய்ந்தான். அவனிருந்த அறை யெங்கும் ஓரே இரத்த வெள்ளம்.

முதல் வேட்டுக் கேட்ட மறு விநாடியிலேயே முதல் வகுப்பு வண்டியின் கக்கூசு அறையிலே மற்றொரு வேட்டுக் கிளம்பியது. கிளம்பவே, ஒரு மனிதன் தனது தலை சுக்கு நூறாய்ப் போகக் கிடந்தான். தான் யார்கையிலும் பிடிபடக் கூடாது என்ற எண்ணம் போலும். அல்லது பழி

வாங்கியபின், புகழுடம்பு வந்து சேருமாதலால், ஊனுடம்பு தாங்கி நிற்றல் ஈனமென்ற நினைப்புப் போலும்!

கலெக்டர் பிரயாணஞ் செய்கிறான் என்றால் அவ்வண்டியிலே பட்லர், அந்தரங்க குமாஸ்தா, ஆபீஸ் சேவகன், அவர்களைத்தவிர போலீஸ் சேவகர் முதலியோர் இருப்பரல்லவா? அவர்களெல்லாம் எங்கே போனார்கள்? அவர்களெல்லாரு மிருக்க, வாஞ்சிஐயர் எப்படி அந்த முதல் வகுப்பு வண்டியில் ஏறினார்?'' ஏறினபோது அவரை ஒருவரும் பார்க்கவில்லையா என்ன?

வேற்று மனித னொருவனைக் கண்டதும், அக்கலெக்டர் யாது செய்தான்'—கைத்துப்பாக்கியைக் கண்டபின்பாவது கூச்சல் போடவில்லையா? போட்டது ஒருவர் காதிலும் படவில்லையா? கலெக்டரைச் சுட்டபின்பு கக்கூசு அறைக்கு வாஞ்சிஐயர் சென்று, தன்னைச் சுட்டுக் கொள்ளும் வரையில் பிறரெவரும் ஏதும் உணரவில்லையா? எல்லாம் மூடுமந்திரமே!

குதிரை திருட்டுப் போனபின், லாயத்தை இழுத்துப் பூட்டு என்பது போல் போலீஸார் தோன்றினர்; என்ன என்ன என்றனர்; காட்சியைக் கண்டு குலைந்தனர், ஈதென்ன இந்திர ஜாலம் என்று திகைத்தனர்.

கலெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கேட்டதும், ரயில் பிரயாணிகளில் சிலரோ, நமக்கும் இக்கதி நேருமோ, என்று ரயிலை விட்டிறங்கி ஓட்டம் பிடித்தனர்; வேறு சிலரோ, நம்மீது சந்தேகப்பட்டு நம்மைப் போலீசார் சிறை செய்வாரோ, என்று அஞ்சியோடினர். அச்சந்தடியிலே ஏதும் தெரியாமல் இன்னும் சிலரோ திகைத்தோடினர் மூலைக்கு மூலை.

வாஞ்சி ஐயருடன் துணையாக வந்த அன்பர்களோ சந்தடி சாக்கில் கம்பி நீட்டிவிட்டனர். போலீஸாரோ சந்தேகத்தின் மீது சில பலரைச் சிறை செய்து சீறினர். மணியாச்சி ரயிலடி அல்லோல கல்லோலம் கொண்டது. கலெக்டரா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று நெஞ்சிலே உதைப்புக் கொள்ளாத உத்தியோகஸ்ரே கிடையாது.

கலெக்டர் கொல்லப்பட்டாரே, சும்மா இருப்பதா? பற்பலர் சந்தேகத்தின் மீது கைதி செய்யப்பட்டனர். திருநெல்வேலி சதிவழக்கு என்பது நெடுநாள் நடைபெற்றது. நீலகண்ட பிரம்மச்சாரி என்பார் அவ்வழக்கிலே பிரதான எதிரி. தினசரி ஆசிரியர் ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளையின் சோதரரொருவர் சிதம்பரம்பிள்ளை என்று பெயர் வாய்ந்தவர் மற்ருேர் எதிரி. இப்படிப் பல பெரிய மனிதர்கள் மாட்டிக் கொண்டனர்.

ஆஷின் கொலைக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தமோ நாமறியோம். மதுரையிலே பிரபல வக்கில் ஸ்ரீ. சே. ஆர். வேங்கடராம ஐயரின் சோதரர் மீதும் சந்தேகம் பிறந்தது. பலவாருன ஜாதி, மத, வகுப்பைச் சேர்ந்த ஒன்பதின்மர் தண்டிக்கப்பட்டனர். ஆனல் கொலைக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதே கோர்ட்டின் தீர்ப்பாம்.

கொலையோ கொள்ளையோ செயல் சரியன்று. ஆயினும் செய்யத் தூண்டிய சிந்தை—தேசபக்தி எனும் தீவிர சிந்தை—தூயதாக இருக்கையில், அச்சிந்தை காரணமாக அந்தபரைப் பாராட்டவேண்டும் என்பார், பாராட்டியும் இருக்கிருர், நமது தேச பிதாவான மாகாத்மா காந்தி!

திருப்பூர் குமாரசாமி

எஸ். ராமநாதன்

“சுயராஜ்யம் பிறர் அளிக்கும் கொடைப் பொருள் அல்ல. நம் முயற்சியாலேதான் அது கிடைக்கும். நமது உழைப்பாலேயே சுதந்தர இந்தியா அமைக்கப் பெறவேண்டும். ஆகையால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஊக்கமும் உற்சாகமும்கொண்டு உழைப்போம்”

இது ‘பாஞ்சால சிங்கம்’ என்று உலகம் போற்றிய லாலா லஜிபதிராய் கூறியவார்த்தை. சைமன் கமிஷன் பகிஷ்கார ஊர்வலத்தின்போது பட்ட தடியடியின் பயனாக தம் உயிரைத் தாய்நாட்டின் சுதந்தரபலிபீடத்தில் அர்ப்பணித்த வீரர்.

வடநாட்டின் லஜபதியைப் போலவே ஊர்வலத்தின் போது தடியடிபட்டு தாய்நாட்டு விடுதலைப் போரில் உயிரைத் தியாகம் செய்த வீரன் தமிழ்நாட்டிலும் ஒருவன் உண்டு.

* * *

“சொந்த நாட்டில் பிறருக் கடிமைசெய்தே துஞ்சிடோம், இனி அஞ்சிடோம்” என்ற பாடலைக் கம்பீரமாக, உரத்த குரலில், சந்தோஷமாகப் பாடிக்கொண்டு ஊர்வலம் சென்றனர் தொண்டர்கள்.

இது நடந்தது 1932-ம் வருஷம். ஜனவரி மாதம் பதினோராம் தேதி. காலை ஒன்பது மணி இருக்கும். தொண்டர் படை ஒன்று புறப்பட்டது. ஒரே ஜே கோஷம் காதைப் பிளக்கும்படி செய்தது. ஊர்வலம் ஒவ்வொரு தெரு

வாகக் கடந்து சென்றது. அன்னியத் துணி மறியலுக் காகச் செல்வது அது.

ஊர்வலம் ஒவ்வொரு தெருவாக வந்து கடைசியாகக் கச்சேரி வீதியில் நுழைந்தது. தேசீய கீதங்களும் சுதந் திரப் பாடல்களும் விண்ணை எட்டின. தொண்டர் கூட்டத் தைச் சுற்றி ஆச்சரியத்துடன் ஜனங்கள் வந்து கொண் டிருந்தனர்.

கச்சேரி வீதியில்தான் போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. தெருவிலே கோஷம் கேட்பதைக் கண்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். தொண்டர் கூட்டம், அவர்கள் போடும் ஜே கோஷங்கள் அவரைக் கேலி செய்வதுபோலத் தோன்றியது. உடனே போலீஸ் புலிகளைக் கூப்பிட்டார். 'எப்பொழுது கூப்பிடுவார்' என்று காத்துக் கொண்டிருந்த போலீஸார் கைகளில் தடியுடன் ஓடிவந்தனர். கூட்டத்தைத் தடியடி மூலம் கலைக்குமாறு சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமிருந்து உத்தரவு பிறந்தது.

அவ்வளவுதான் போலீஸார் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்தனர். பெண்கள், குழந்தைகள், வயோதி கர், நோயாளிகள் என்று பாராமல் தங்கள் கையிலுள்ள தடிகளினால் நையப் புடைத்தனர். தெருவிலே வேடிக்கை பார்க்கவந்திருந்த ஜனங்களுக்கும் 'விருந்து' கிடைத்தது.

அஹிம்ஸையையே ஆயுதமாகக் கொண்டிருந்த தொண் டர்கள் போலீஸாரை எதிர்க்கவில்லை. இருந்த இடத் திலேயே நின்று விட்டனர். போலீஸாரின் அடிகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டனர். ஆனால் எவ்வளவு நேரம்தான் அவர்களால் தாக்கிப்பிடிக்க முடியும்?

போலீஸாருடைய கண்மூடித்தனமான தாக்குதலுக்கு முன் அவர்களால் நிற்க முடியவில்லை. கொஞ்சம் கொஞ்ச மாகத் தொண்டர்படை சிதறியது.

ஆனால் அக்கூட்டத்தில் ஒரே ஒரு இளைஞன் மட்டும் தான் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. கையிலே

காங்கிரஸ் கொடி. நின்ற இடத்திலிருந்து துளிகூட நகராமல் 'வந்தேமாதரம்' என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த தேசியக் கொடியை இறுகப் பிடித்திருந்தான்.

சுமார் ஐந்து நிமிஷம் வரையில் போலீஸாரின் நாடகம் நடந்தது. கணக்கற்றவர்கள் குறுந்தடியினுல் அடியுண்டு, ரத்தம் வழிந்தோடத் தரையில் விழுந்து கிடந்தனர். போலீஸாரின் தடியடியில் ஓர் அடி அந்த இளைஞர் தலையி லும் விழுந்தது. அடி பலமாக விழுந்துவிட்டது. 'வந்தே மாதரம்' என்று கதறிக்கொண்டே தரையில் வீழ்ந்தார் இளைஞர். அப்பொழுதும் அவன் கையிலிருந்த தேசியக் கொடியை விடவில்லை. உடனே அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

*　　　*　　　*

இத்தியாகி வேறு யாரும் இல்லை. இருபத்தேழு வயதிற்குள் தன் உயிரைத் தேசப்பணியில் பலிகொடுத்த திருப்பூர் குமாரசாமி தான்.

கோவை ஜில்லாவிலே சென்னிமலை என்று ஓர் ஊர். அவ்வூரிலே மிகப் பிரபலமான செல்வந்தராயிருந்து, பிறகு காலவசத்தினுல் ஏழையான நாச்சிமுத்து முதலியார் என்ப வருக்கு 1904-ம் வருஷம் மூன்றாவது புத்திரராகப் பிறந்தார் குமாரசாமி. தாயின் பெயர் கருப்பாயம்மாள்.

ஐந்தாவது வயதில் குமாரனைச் சென்னிமலை போர்டு ஆரம்பப் பள்ளியில் சேர்த்தனர் பெற்றோர். நாச்சிமுத்து முதலியார் நெசவுத் தொழில் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்திவந்தார். எவ்வளவுதான் வரும் படி நெசவுத் தொழில் மூலம் கிடைத்துவரும்?

பள்ளியில் குமாரசாமிக்கு நற்குணங்களுடைய மாண வர்களே நண்பரானார்கள். படிப்பில் நல்ல சூடிகை. ஒவ் வொரு வருஷமும் பரீட்சையில் முதலாவதாகத் தேறி வந் தார் குமாரசாமி. பத்தாவது வயதில் ஐந்தாம் வகுப்பு தேறி

னார். அதற்குமேல் குமாரசாமியின் பள்ளி வாழ்க்கை நீடிக்கவில்லை. குடும்பத்தின் வறுமைதான் முக்கிய காரணம்.

ஆகவே ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டனர் பெற்றோர்கள். படிப்பை விட்டபிறகு நாச்சிமுத்து முதலியார் தம் மகனுக்கும் குல வித்தையான நெசவுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். இரண்டாண்டுகள் வரை, தம் தகப்பனாரிடம் நெசவுத் தொழிலை கற்றுக் கொண்டார் குமாரசாமி. இதனால் குடும்பத்தின் வறுமை சற்றுத் தீர்ந்தது என்று சொல்லலாம். குமாரசாமி மூலம் குடும்பத்திற்குக் கொஞ்சம் வருமானம் கிடைத்தது. பதினான்காவது வயதில் பள்ளிப் பாளையத்தில் வசிக்கும் தம் மாமன் வீட்டிற்குச் சென்றார். அங்கே மூன்று வருடங்கள் இருந்து நெசவுத் தொழிலில் நல்ல தேர்ச்சியை அடைந்தார். பள்ளிப் பாளையத்திலிருந்து ஊருக்குத் திரும்பிவந்த சமயம் அவர் பெற்றோர்கள் அவருக்குக் கல்யாண ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தனர். நல்லக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியை அவருக்குத் திருமணம் செய்வித்தனர்.

குமாரசாமி கொஞ்சகாலம் உள்ளூரிலேயே தொழிலை நடத்தி வந்தார். இந்தச் சமயத்தில் திருச்செங்கோடு ஜின்னிங் பாக்டரியில் வேலைக்கு ஆட்களை எடுத்துவந்தனர். அதற்குக் குமாரசாமியும் மனுப் போட்டார். வேலையும் கிடைத்தது. அங்கு கொஞ்சகாலம் வேலை செய்துவிட்டுக் கடைசியாக 1926-ஆம் வருஷம் திருப்பூருக்குக் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். அங்கே பஞ்சு வர்த்தகத்தில் குமாஸ்தா வேலை கிடைத்தது. அதில் கிடைக்கும் சொற்ப வருமபடியைக் கொண்டு சந்தோஷமாக வாழ்க்கை நடத்திவந்தார்.

* * *

பதினாறு வயது முதற் கொண்டே அவர் மனம் இந்திய விடுதலையில் நாட்டம் கண்டது. அவர் மனத்தில் தேசாபிமானம் நிலையாக வேரூன்றிக் கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியடைந்து அதிகரித்தது. அது முதல் அன்னிய துணிகளைப் பகிஷ்கரிக்க ஆரம்பித்தார். கதரைத் தவிர வேறு துணியே

உடுத்துவதில்லை. தம் குடும்பத்திலும் அதே பழக்கத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார். சைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்திற்கு இரகசியமாக உதவி வந்தார். இந்தச் சமயத்தில் நாட்டிலே சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கியது. அப்போது குமாரசாமியின் மனம் பட்ட பாட்டை எவ்வாறு எழுதமுடியும்? ஒரு புறம் குடும்பம். மற்றொருபுறம் தேசம். இரண்டையும் உதற முடியவில்லை. அப்போதுதான் குமாரசாமியின் தகப்பனார் இறந்து நாலைந்து மாதங்கள் ஆகியிருந்தன. ஆகவே குடும்பத்தை விட்டு வெளியேறி, தேசத்திற்குச் சேவை செய்ய முடியவில்லை. இதற்காக அவர் பட்ட வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல! சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து கடமையைச் செய்யாததற்காக அவர் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார், என்றால் அவர் தியாகத் தன்மையை என்னவென்று சொல்வது?

மற்றொரு ஒத்துழையாமைப் போர் ஆரம்பிக்காதா வென்று இரவும் பகலும் கடவுளைப் பிரார்த்தனை செய்வார். 1932-ஆம் வருஷம் வந்தது. தேசத்திலே மக்களின் இதயத்தில் புத்துணர்ச்சி தோன்றியது. மகாத்மா காந்தியடிகள் மறுபடியும் சத்தியாக்கிரகத்தை துவக்கியதைக்கேட்ட குமாரசாமி அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. "பகவானே! என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தாயா?" என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டார். குடும்பத்தை அறவே துறந்து சத்தியாக்கிரகத்தில் சேர எண்ணினார். 1932-ம் வருஷம் ஜனவரி மாதம் பத்தாம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தாயிடத்தில் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். மனைவியிடத்திலும் தெரிவித்தார்.

மகன் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தையைக் கேட்ட கறுப்பாயம்மாள் திடுக்கிட்டாள்.

"ஏண்டா, குமாரா! இந்தத் தள்ளாத வயதில் என்னை நிர்க்கதியாய் விட்டுவிட்டு, சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து ஜெயிலுக்குப் போகப் போகிறாயா?" என்று அழுது விட்டாள்.

"அம்மா! என்னைத் தடை செய்யாதே. என்போன்ற வாலிபர்கள் ஜெயிலுக்குச் செல்லும்போது, நான் மட்டும் சும்மா உட்கார்ந்திருப்பது அழகல்ல! என் மனம் தேச சேவையையே நாடுகிறது. அன்னையின் கையிலுள்ள விலங்கு களை உடைத்தெறியும் பணியில் ஈடுபட அன்னையே கூப்பிடு கிறாள். என்னால் உட்கார்ந்திருக்க முடியாது. என்னைத் தடுத்துப் பிடித்து நிறுத்தினால் எனக்கு நிச்சயமாய் பைத்தியம் பிடித்துவிடும்.

கருப்பாயம்மாள் இதற்கு என்ன பதில் சொல்லுவாள்? மகன் பைத்தியம்பிடித்துத் தெருவில் அலைய மனம் சம்ம திக்கவில்லை. அதைவிட, ஜெயிலுக்குள் போனால் கியாதி. ஆகவே மனதைத் திடப்படுத்திக்கொண்டு, கண்களிலிருந்து கண்ணீர்வழிய விடை கொடுத்தாள்.

குமாரசாமியின் மனைவியும் முதலில் தன் கணவனின் காலைப்பிடித்துக் கெஞ்சினாள். முடியவில்லை. தம் தீர் மானத்தை ஒரு இம்மிகூட மாற்றவில்லை நம் குமாரசாமி. ஒருவாறாக அவளிடமும் விடைபெற்றுக் கொண்டார். மாலையில் குமாரசாமி தாம் கொண்ட முடிவை தம் நண்பர் களிடமும் கூறினார். சிலர் சம்மதித்தனர். பலர் அதை விரும்பாமல் தடுக்க நினைத்துப் புத்திமதிகள் போதித்தார்கள். ஆயினும் குமாரசாமியின் உறுதி தளரவில்லை; தம் எண்ணம் ஈடேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் நின்றார்.

அவருடைய முதலாளியும் உறவினருமான கன்னியப்ப முதலியாருக்கும் செய்தி எட்டியது. குமாரசாமியும் நேரில் அவரிடம் சென்று தம் விருப்பத்தைச் சொல்லி அனுமதியும் வேண்டினார். ஆனால் முதலாளியும் அவர் மனைவியும் குமார சாமியிடம் எவ்வளவோ தடுத்து உரைத்தார்கள். நயமாக வும் பயமாகவும் கூறித் தடுக்க முயன்றார்கள். ஆனால் குமாரசாமி அசையவில்லை, பொழுது ஏறிக்கொண்டே போயிற்று. அனுமதி கிட்டவில்லை. கடைசியாக நள்ளிரவு வந்துவிட்டது. இனித்தாமதிக்க முடியாது என்று நினைத்த குமாரசாமி அவ்விருவருடைய பாதங்களையும் கெட்டியாகப்

பிடித்துக்கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். 'சத்தியாக்கிரகத்தில் சேருவதற்கு நல்லாசி அளித்தால்தான் எழுந்திருப்பேன்' என்று அழுது புலம்பினார். அதைக் கண்ட அவர்கள் மனம் இளகியது. குமாரசாமியின் பிடிவாதத்தையும் உறுதியையும் கண்டு வியந்தனர். அதேபோல் அனுமதியையும் அளித்துவிட்டார்கள்.

குமாரசாமி அதன்பின் அன்றைய இரவு முதலாளி வீட்டிலேயே உணவு அருந்தி வீடுதிரும்பினார். அனைவரும் சம்மதித்தது பற்றி அகமகிழ்ந்து இரவைச் சந்தோஷமாகக் கழித்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது. விடியற்காலையிலேயே எழுந்திருந்து குளித்து, புத்தாடைகளை அணிந்து கொண்டார். சந்தோஷத்துடன் எல்லோரிடமும் கடைசியாக விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். அதுதான் கடைசிச் சந்திப்பு என்று அவர் உறவினர்கள் அப்போது அறியவில்லை.

வீட்டைவிட்டு புறப்பட்ட குமாரசாமி நேராக சத்தியாக்கிரக காரியாலயத்துக்குச் சென்றார். அங்கே தம்மையும் ஒரு தொண்டராகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டார். தொண்டர் படைத்தலைவன் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் குமாரசாமியின் மன உறுதியையும், விடாமுயற்சியையும் கண்டு, அவரையும் ஒரு தொண்டராகச் சேர்த்துக் கொண்டான்.

ஒன்பது மணிக்குத் தொண்டர் படை புறப்பட்டது. குமாரசாமி சந்தோஷமாகப் பாடிக்கொண்டே சென்றார். அவர் கையில் தேசியக்கொடி பறந்துகொண்டிருந்தது. போலீஸ் ஸ்டேஷன் வாசலையடைந்த ஊர்வலத்தைக் கலைக்க சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார். போலீஸாரும் தடியடி மூலம் ஊர்வலத்தைக் கலைத்தனர். ஆனால் திருப்பூர் குமரன் தாம் நின்ற இடத்தை விட்டுத் துளிகூட நகரவில்லை. தேசியக் கொடியையும் விடவில்லை. வாயிலிருந்து கோஷங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. போலீஸாரின் அடி ஒன்று அவர் தலையில் விழவே, மண்டை உடைந்து

கீழே சாய்ந்தார். உடனே அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றனர். அப்பொழுதும் கையிலுள்ள கொடியை விடவில்லையென்றால் அவருக்குத் தேசியக் கொடி மீதுள்ள பக்தி எவ்வளவு சிறந்தது என்பது விளங்கும். ஆஸ்பத்திரியில் அளிக்கப்பட்ட சிகிச்சைகள் ஏதுவும் பலனில்லை. அடிபட்ட இருபத்து நாலு மணி நேரத்திற்குள் 1932-ஆம் வருடம் ஜனவரி மாதம் 12-ஆம் தேதி காலை 9-மணிக்குத் தமது ஆவியை அன்னையின் காலடியில் சமர்ப்பித்து விட்டார்.

ஐயோ பாவம்! திருப்பூர் குமாரசாமி தம் இருபத்தேழாவது வயதில் காலமானார். குமாரசாமி இறந்த செய்தியைக் கேட்டுக் கண்கலங்காதவர்கள் யாருமே இல்லை. அவருடைய மரணத்திற்குக் காரணமாயிருந்த போலீஸாரே வருத்தப்பட்டனரென்றால் வேறு யார்தான் வருத்தப்பட மாட்டார்கள்!

தியாகியின் பூதவுடல் நம்மை விட்டுப் பிரிந்தாலும், புகழுடல் நம்மைவிட்டுப் பிரியாது. இவ்வீரத் தியாகியின் நினைவு மங்காமல் என்றென்றும் நிலைத்திருக்கத் தமிழர்கள் ஏற்பாடு செய்வது அவசியம்.

செண்பகராமன் பிள்ளை

தி. நா. சுப்பிரமண்ணியன்

தாய்நாட்டிலே யன்றி கடல்கடந்து வெளிநாடு சென்று இந்திய விடுதலைக்காகப் போராடிக் கடைசியில் அதற்காகவே தம் உயிரையும் அர்ப்பணித்த தியாகி செண்பகராமன் பிள்ளை. கூட்டங்களைக் கூட்டி பெரும் வாயளவில் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு நம்பிக்கையில்லை. புரட்சியின் மூலமே இந்தியா விடுதலையை அடைய முடியும் என்று எண்ணினார். "கூட்டங்கள் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதால் மட்டும் நாம் சுதந்தரத்தை அடைந்துவிட முடியாது. மந்திரத்தால் மாங்காய் விழாது. இவ்விதம் செய்வது, சுதந்தரம் என்ற சொல்லையே அவமதிப்பதாகும். இந்தியாவில் இன்றைக்கு அடிமைகளும் கோழைகளும் வேண்டிய நபர் இருக்கிறார்கள். நீண்ட காலமாக நம்மைப் பிணைத்து வரும் அடிமைத் தளையைத் தங்கள் ரத்தத்தைச் சிந்தித் தகர்த்து எறியும் வீர இளைஞர்களே தேவை." இவ்விதம் அடிக்கடி கூறிவந்தார் செண்பகராமன் பிள்ளை. இந்த லக்ஷ்யத்தை அடைவதற்காக அவர் புரட்சிகரமான பாதையையும் திட்டமிட்டு வகுத்தார். பேச்சு அளவில் பிறருடைய அநுதாபம் நமக்குத் தேவையில்லை. ஆனால் செயலில் அவர்கள் நமக்கு உதவி செய்வதாக இருந்தால், அதை ஏற்றுக்கொள்ள நாம் தயங்க வேண்டியதில்லை" என்றும் கூறி வந்தார். இதனால்தான் அவர் முதல் உலக யுத்தத்தின்போது ஜர்மானியர்களின் உதவியை நாடினார்.

இதை அநேகர் ஆக்ஷேபித்தனர். இந்திய விடுதலைக்காகப் பிறநாட்டின் உதவியைக் கோரவோ ஏற்றுக்கொள்ளவோ அவர்கள் விரும்பவில்லை. அதனால் செண்பகராமன் அவர்

களுக்குத் தெளிவாகப் பின்வருமாறு சமாதானம் கூறினார்.

"இதிலே என்ன தவறு? அடிமைப்பட்ட எந்தத் தேசமும் பிறருடைய உதவியை நாடாமலும், போரிடாமலும் சுதந்தரத்தை அடைந்ததில்லை. போரும் காதலைப் போன்றதே. வெற்றியடைய எந்த முறையை வேண்டுமானாலும் பின்பற்றலாம். தலைமுறை தலைமுறையாகத் தனக்குப் பரம விரோதியாக நினைத்து நடத்தி வந்த பிரான்ஸுடன் இப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கொஞ்சிக் குலாவவில்லையா? அப்படியிருக்க, அடிமைப்பட்டு உழலும் இந்தியா தனக்கு ஜெர்மனியின ஒத்தாசையை நாடுவதில் குற்றம் என்ன?"

இம்மாதிரியான ஆக்ஷேபணையே இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் கிளம்பிய பொழுது இதே சமாதானத்தைத்தான் சுபாஷ்போஸும் சொல்லியிருக்கிறார். சுபாஷ்பாபு, செண்பகராமன் பிள்ளை இருவருடைய லக்ஷ்யமும் ஒன்றுதான். செண்பகராமன் முதல் உலகயுத்தத்தில் ஜெர்மனியின் உதவியை நாடியது போலவே இரண்டாவது உலகயுத்தத்தில் ஜப்பான் உதவியை நாடினார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்.

இருவர் அடைந்த பலனும் சற்றேறக் குறைய ஒரே வகைதான். செண்பகராமன், நேதாஜி ஆகிய இருவருடைய வாழ்க்கையிலும் இதைப்போன்ற வேறு பல ஒற்றுமைகளையும் காணலாம்.

செண்பகராமன் பிள்ளை திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிறந்தவர். 1904-ம் வருஷம் பிறந்த அவர் தம் இளமைப் பருவத்தை அங்கேயே கழித்தார். திருவனந்தபுரம் மகாராஜா ஹைஸ்கூலில் படித்தார். ஆனால் பள்ளிப் படிப்பு முடியும் முன்பே அவர் பள்ளிக்கூடத்தைவிட்டு மட்டுமல்லாமல் ஊரைவிட்டே ஓடவேண்டி ஏற்பட்டது.

செண்பகராமன் பிள்ளைக்கு பதினாறு வயதிருக்கும். அப்போது நாட்டிலே சுதேசி இயக்கம் ஏற்பட்டது. வட

நாட்டிலே லோகமன்யதிலகர், அரவிந்தகோஷ் முதலியவர்கள் இந்த இயக்கத்தை நடத்தினார்கள். அதேபோலத் தென் இந்தியாவிலும் இந்திய விடுதலை இயக்கம் ஏற்பட்டது. வ. உ. சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்.

சிறுவயது முதற்கொண்டே இந்த மாதிரி இயக்கங்களில் செண்பகராமனுக்குப் பற்று உண்டு. அப்போது அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சந்தோஷமாக இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்தார்.

சர்க்கார் இயக்கத்தின் ஜீவநாடிகளாய் இருப்பவர்களைக் கைதுசெய்ய வாரண்டு பிறப்பித்தனர். அதில் இளைஞனை செண்பகராமனுடைய பெயரும் உண்டு. கைதியாகி சிறையில் கிடந்து உழலச் செண்பகராமனுக்கு விருப்பமில்லை. ஆகவே அவ்விடத்திலிருந்து தப்பி ஓடிவிடத் தீர்மானம் செய்தார்.

தேசிய போராட்டத்தில் சிறைபுகுவது பிற்காலத்தில் தான் சகஜமாகப் போனது. அந்தக் காலத்தில் சிறை வாழ்க்கையை ஒருவரும் விரும்பவில்லை. போராட்டத்திலே நேருக்கு நேர் நின்று உயிரை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருந்தார்களே யல்லாமல், சிறை செல்லத் தயாராக இல்லை.

சிறை புகவிரும்பாத செண்பகராமன் ரகசியமாக ஒருவரும் அறியாமல் வீட்டை விட்டுக் கிளம்பினார். நேராகப் பம்பாயை அடைந்தார். வழியிலே அவர் பட்ட கஷ்டங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. எவ்வளவோ இடங்களில் இரகசியபோலீஸாரின் கண்களில் மண்ணைத் தூவ வேண்டியிருந்தது. வெகு கஷ்டப்பட்டுப் பத்திரமாக பம்பாயை அடைந்தார். அவ்விடத்தில்தான் ஸ்திரமாக இருக்கமுடியுமா? இரகசிய போலீஸ்காரர்கள் விடாமல் திரிந்து கொண்டிருப்பார்களே முன்போலச் சுதந்திரமாக நடமாட வேண்டுமானால், இந்தியாவை விட்டு வேறு தேசத்திற்குச் சென்றுவிட வேண்டும். ஆகவே அவர் கப்பலில் இடம்பிடிப்பதற்காக பலரை பேட்டி காண ஏற்பட்டது. கடைசியாக இதாலி

செல்லும் ஆங்கிலேய நண்பர் ஒருவர் கிடைத்தார். அவர் மூலம் இத்தாலியை அடைந்தார். அங்கிருந்து ஸ்விட்ஜர்லந்திற்குச் சென்று, அவ்விடத்தில் பல்கலைக் கழகத்தில் தம்மை ஒரு மாணவராகப் பதிவுசெய்து கொண்டார். பொருளாதார சாஸ்திரத்தை வாசித்து 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

படிப்பிலே அவருக்கு மனம் ஓடவில்லை. வாழ்க்கையிலே ஏதாவது உத்தியோகத்தைப் பெற்று பொருள் சம்பாதிக்கவும் அவர் விரும்பவில்லை. அவர் மனதில் குடிகொண்டிருந்தது தாய் நாட்டின் விடுதலையேதான். சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கையில்லாமல் புரட்சிகரமான திட்டங்கள் பலவற்றை அவர் வகுத்தார். “சர்வதேச இந்தியர் கமிட்டி” என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார். அதற்கு அவரே தலைவராக அமர்ந்தார். ஜெர்மனி முழுவதும் அக் கமிட்டியின் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருந்தன. தலைமைக் காரியாலயம் பெர்லினில் அமைந்திருந்தது. அந்தப் பக்கத்தில் இருந்த இந்திய தேசபக்தர்கள் அனைவரையும் அது ஒன்று திரட்டியது.

இந்தச் சமயத்தில் தான் முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. புரட்சியின் மூலம் இந்தியா விடுதலை அடைதற்கு அதுவே ஏற்ற தருணம் என்றும் நம்பினார். ஆங்கிலேயருக்கு எதிராக ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டார். தம்மைப்போலவே, இந்தியாவின் விடுதலையில் ஆர்வங்கொண்டிருந்த சிலரைக் கூட்டி 'இந்திய சுதந்தரக் கமிட்டி' என்ற ஒன்றை பெர்லினில் ஏற்படுத்தினார். வெகு சிக்கிரத்தில் அவருக்குக் கூட்டாளிகள் கிடைத்தனர். அவர்களில் லாலா ஹரிதயாள், ராஜா மகேந்திர பிரதாப், ஷேக் உபயதுல்லா என்பவர்கள் முக்கியமானவர். இவர்களில் ராஜா மகேந்திர பிரதாப் செண்பகராமன் பிள்ளையைப்போலவே, கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தவுடன் இந்தியாவிலிருந்து தப்பி ஓடி; ஆப்கானிஸ்தானத்தை அடைந்து, அங்கே போட்டி சர்க்கார் ஏற்படுத்தியவர்.

செண்பகராமன் பிள்ளைக்கு ஜெர்மனி அதிகாரிகளிடம் நல்ல மதிப்பு உண்டு. அவர்களுடன் தாராளமாக நெருங்கிப் பழகிவந்தார். ஜெனரல் லுடன்டிராப், மார்ஷல் ஹின்டென்பர்க் ஆகியவர்கள் செண்பகராமனுக்கு ரொம்பவும் வேண்டியவர்கள். சக்கரவர்த்தி கெய்சரையும் அவருக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமன்று; கெய்சரின் அரண்மனைக்குள் அவர் எந்தச் சமயத்திலும் நுழைந்து உள்ளே எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அவரைத் தடுக்க ஒருவரும் முன்வரமுடியாது. இதிலிருந்து ஜெர்மனியில் அவருக்கிருந்த செல்வாக்கை ஊகித்துக்கொள்ளலாம். பட்டத்து இளவரசர் அடிக்கடி செண்பகராமன் பிள்ளையின் வீட்டிற்கு வந்து நீண்ட நேரம் பேசிவிட்டுப் போவது வழக்கம்.

வெளி நாட்டிலே பிரசாரம் செய்வது, ஆதரவு தேடி உதவி சம்பாதித்துக் கொள்வதால் மட்டும் பிரயோஜனமில்லை; அதேசமயம் உள்நாட்டிலும் புரட்சி ஏற்படவேண்டும். அதற்கு வேண்டிய ஆயுத உதவியை வெளிநாட்டிலிருந்து அனுப்ப சௌகரியமாயிருக்கும். ஆகவே அவர் வங்காளத்தில் உள்ள புரட்சி இயக்கத்தவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். வங்காளத்தில் இருந்த 'அனுசீலன் சமிதி', 'யுகாந்தர் கோஷ்டி' ஆகிய இருவகையாருடனும் பஞ்சாபில் இருந்தவர்களுடனும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. இதனால் ஏராளமான ஆயுதங்களை இந்தியாவுக்கு அனுப்ப முடிந்தது. அவர் அதனோடு நிற்கவில்லை. அந்தச் சமயத்தில் இந்திய தேச பக்தர்களால் அமெரிக்கரின் ஆதரவை இந்தியப் புரட்சியாளர்களின் பக்கம் திருப்புவதற்காக அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'கதர்' பார்ட்டிக்கும் பக்கபலமாக இருந்திருக்கிறார். செண்பகராமன் பிள்ளை இந்தியாவுக்குத் துணிகரமாக ஆயுதங்களை அனுப்பிய விபரங்கள் பிற்காலத்தில் விவரமாக ரௌலட் சட்ட யதாஸ்தில் நன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்திலும் செண்பகராமன் நேரிடையாக ஈடுபட்டு விஷயங்களை அறிந்துகொண்டார். விமானம் ஓட்டுவதிலும்

ஜெர்மன் அதிகாரிகளிடம் பயிற்சி பெற்றிருக்கிறார். அடிக்கடி ஆங்கிலப் பகுதியின் மீது பறந்துசென்று, இந்தியர்கள் ஆங்கிலேயர்களுக்கு உதவியாகப் போர்புரியக்கூடாதென்ற துண்டுப் பிரசுரங்களைப் போட்டு, ஒரு சமயம் விமானத்தில் செல்லும்போது அடிபட்டுக் காயம் அடைந்திருக்கிறார். யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் ஜெர்மானிய விமானப் படையில் உயர்ந்த பதவியையும் வகித்துவந்தார். 'எம்டன்' கப்பல் இந்தப் பக்கம் வந்ததற்கு அவரே காரணம், கப்பல் தலைவர்களை வற்புறுத்தி அவரே அனுப்பினாராம். இன்னும் எத்தனையோ வழிகளில் அவர் முயற்சி செய்தார்.

சமீப காலத்தில் நேதாஜி சுபாஷ் பாபுவைப் பற்றி எழுந்த கதைகளைப்போலவே செண்பகராமனைப்பற்றியும் அக்காலத்தில் எத்தனையோ கதைகள். ஒரு சமயம் மாறுவேடத்தில் இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போனதாகவும் ஒரு கதை. அதன் உண்மையை நாம் எப்படி நிச்சயிக்க முடியும்?

ஆங்கில அரசாங்கத்தார் சும்மாயிருக்கவில்லை. செண்பகராமனை எப்படியாவது பிடித்துவிட முயற்சி செய்தனர். ஸ்காட்லந்து யார்டு என்ற பிரசித்திபெற்ற துப்பறியும் போலீஸாரும், இங்கிலாந்தின் ரகசிய போலீஸாரும் எவ்வளவோ முயன்றனர். பிரசித்தி பெற்ற ஒற்றர் தலைவியான மாதாஹாரி என்பவளும் செண்பகராமனைப் பிடிக்கத் தன் வலையையும் வீசிப்பார்த்தாள். ஆனால் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. அவரை உயிருடன் பிடித்துக்கொடுத்தாலும் சரி, செத்த பிணத்தையாவது காட்டினாலும் சரி; அவ்விதம் செய்பவர்களுக்கு ஏராளமாகப் பரிசுகள் கொடுப்பதாகவும் விளம்பரம் செய்தார்கள். அந்த நாட்களில் செண்பகராமனுக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆபத்து. ஆனாலும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் அஞ்சா நெஞ்சத்துடன் உழைத்துவந்தார்.

உலகயுத்தம் முடிந்தது. ஜெர்மனி தோல்வியுற்றது. அதனோடு செண்பகராமன் கண்ட கனவும் குலைந்தது. ஆனாலும் அவர் மனம் இடிந்துவிடவில்லை. 'உலக யுத்தத்

திலே ஜெர்மனி தோற்றுப்போனது உண்மையே யானாலும், அது இந்திய விடுதலைப் போரின் தோல்வியாகாது. அது தொடர்ந்து நடைபெறும்' என்றே சொன்னார். எத்தனையோ கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக்கொண்டே அதை நடத்திவர முற்பட்டாரானாலும், கூட்டாளிகள் ஒவ்வொருவராகக் கலைந்துபோக ஆரம்பித்துவிட்டார்கள். லாலா ஹரிதயாள் என்பவர் யுனைடெட் ஸ்டேட்டுக்கு (அமெரிக்காவுக்கு)ப் புறப்பட்டுப் போய்விட்டார். மகேந்திர பிரதாப் தென் அமெரிக்கா சென்றார். ஷேக் உபயதுல்லா துருக்கிக்குப் போனார். இவ்விதம் ஒவ்வொருவரும் வெவ்வேறு இடங்களுக்குப் போய்விட்டனர். பணம் கிடைப்பதும் அரிதாகியது.

இதே சமயத்தில், கிழக்கே ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் தலைதூக்கி ஆதிக்கம் பெற்று வந்தார்கள். அவர்கள் செண்பகராமனை எப்படியாவது தங்களுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். அதனால் அவர்களுக்கு எத்தனையோ நன்மைகள் ஏற்படும். ஆனால் செண்பகராமன் அதற்கு இணங்கவில்லை. கம்யூனிஸ்டுகளைக் கண்டாலே அவருக்கு வெறுப்பு. அந்தக் காலத்திலே ஜெர்மனிக்குள்ளேயும் கம்யூனிஸ்டுகளுக்கு ஓர் அளவு செல்வாக்கு இருந்து வந்தது. இதனால் அவ்விடத்திலும் செண்பகராமன் வாழ்க்கை மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாகியது.

அவர்களில் பலர் செண்பகராமனைப் பரிகசித்து வந்தனர். இந்த விஷயத்தை நம் தேசத்துப் பிரதமமந்திரியான பண்டித ஜவஹர்லால் நேருவும் தம் சுய சரித்திரத்தில் கூறியிருக்கிறார். அந்தக் காலத்திலே ஐரோப்பாவுக்குப் போகும் இந்தியர்கள், முக்கியமாக தேசபக்தியுள்ளவர்கள், செண்பகராமனைப் பார்த்துப்பேசாமல் வரமாட்டார்கள். இதேபோல, நேரு, இந்திய சட்டசபைத் தலைவராக இருந்த காலஞ்சென்ற வித்தல்பாய் பட்டேல் முதலானவர்கள், செண்பகராமனுடைய விருந்தினராக இருந்திருக்கிறார்கள்.

என்றாலும் அவருக்கு ஆபத்து நீங்கவில்லை. மேல்மேலும் வந்துகொண்டே இருந்தது. ஆங்கிலேய ரகசியப்

போலீஸார் அவரை எப்படியாவது தங்கள் வலையில் சிக்க வைத்துவிட வேண்டுமென்று வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். அதற்காக அவர்கள் ஜெர்மன் போலீஸார் போலவும் வேஷம் போட்டுக்கொண்டார்கள். ஒரு சமயம் அவர்கள் அந்த வேஷத்தோடு அவர் வீட்டுக்கு வந்து கதவைத் திறந்தார்கள். அவரைக் கைதுசெய்வதற்காகப் பொய்யாக வாரண்டு ஒன்றையும் சிருஷ்டித்துத் தயாராக வைத்துக் கொண்டிருந்தார்கள். அதைக் காட்டி அவரைக் கைது செய்து தங்கள் எல்லைக்குள் கொண்டுபோய்விட்டால் போதும் என்றே அவர்கள் எண்ணினார்கள். அதற்காகவே அவர்கள் அவ்விதம் வந்து சேர்ந்தார்கள்.

ஆனால் செண்பகராமனுக்கு என்னவோ சந்தேகம் தட்டியது. அதனால் கையில் துப்பாக்கி கொண்டு அவர்களை மிரட்டினார். அவர்களும் மிரண்டு திரும்பி ஓட்டம் எடுத்தார்கள். விஷயம் வெளிக்குத் தெரிந்தால் ஆபத்து அல்லவா? பிறகு, செண்பகராமன் இந்த விஷயத்தைப் பெர்லின் போலீஸ் நிலையத்துக்குச் சொல்லலாம் என்று டெலிபோனை எடுத்தார். டெலிபோன் கம்பிகள் அதற்கு முன்னதாகவே அறுக்கப்பட்டிருந்த விஷயம் அவருக்கு அப்போதுதான் தெரியவந்தது.

ஜெர்மனியில் அவர் வாழ்க்கை நித்திய கண்டமாக இருந்தது. அதற்கும் ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. அவரை உயிருடன் விட்டு வைக்கவே எதிரிகள் இஷ்டப்படவில்லை. விஷமிட்டு அவரைக் கொன்றுவிட்டார்கள். இது 1934-ம் வருஷம் மே மாதம் 26-ம் தேதி நடந்தது. அவர் இறந்தபோது ஸர்தார் சுஜித்சிங்தான் அவருடன் கூடக் கடைசி காலத்தில் இருந்தவர்.

செண்பகராமன் வாழ்க்கை முழுவதுமே போராட்டமாக முடிந்தது. இந்தியாவிலே இருந்துவந்த வகுப்புப் பூசல், ஆதிக்கப் போட்டி, சில்லறைப் பொறாமை, குறுகிய பிரதேச மனப் பான்மை, ஆகியவைகளை அவர் அறவே வெறுத்துவந்தார். அவை ஒழியும் வரையில், தாம் இந்தியா

திரும்பாமல் வெளி நாடுகளில் தங்குவதே நல்லது என்று எண்ணி வந்தார். கடைசியிலே தாய்நாடு திரும்பாமலே உயிரையும் தியாகம் செய்தார்.

பின்வருவதனின்றும் அவர் லக்ஷ்யம் நன்கு விளங்கும்.

"நான் விரும்புவது ஒரே இந்தியாதான். அதுவும் விசால பாரதம். அதை அடைந்து அதற்குச் சேவை செய்வதே என் வாழ்க்கையின் நோக்கம். கட்டாய ஆரம்பக் கல்வி, உடற் பயிற்சி, எதற்கும் நிலை குலையாத கட்டுப்பாடு, மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரம், நாடு முழுவதும் வழங்குவதற்கு ஒரே மொழி, தொழிலாளர்கள் நலனை வளர்த்து அவர்களை முன்னேற்றல், பொருள் நிலைச் சீர்திருத்தம், யாவருக்கும் சமமாகப் பங்கிடுதல் ஆகிய துறைகளில் ஒரு பத்து வருஷகாலம் இடைவிடாமல் உழைத்து வெற்றி கண்டால் அதற்குப் பிறகு உலகத்து மக்களிலே இந்தியர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களாக யாருமே இருக்கமுடியாது. இந்தியர்களே உலகத்தில் முதன்மை ஸ்தானம் பெறுவார்கள்."

அவர் லக்ஷ்யத்தின் ஒரு பகுதியான தேச விடுதலை இப்போது கிட்டிவிட்டது. மற்றப் பகுதிகள் விரைவிலே கைகூடவேண்டும்.

வ. வெ. சுப்ரமணிய அய்யர்

சாமி. சிதம்பரனுர்

இருண்டு கிடந்த இந்திய அரசியல் வானத்திலே ஒளி விட்டுப் பிரகாசித்த நட்சத்திரங்கள் ஒரு சில தான். மகாத்மா காந்தி இந்திய அரசியல் வானத்தில் பிரவேசிப்பதற்கு முன்பு தோன்றிய தேசிய நட்சத்திரங்களையே நாம் குறிப்பிடுகி ரேம்.

தென்னுட்டு தேசபக்தர்களில் ஒருவராகிய வ. வெ. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் வாழ்க்கை பல ரகசியங்கள் நிறைந்தது. இந்த நாட்டிலே வெள்ளைக்காரர்களின் ஆட்சி யிருந்த வரையிலும் அவருடைய வாழ்க்கை வரலாற்றிலே பல நிகழ்ச்சிகளை வெளியிடக்கூட இடமில்லை. அத்தகைய அபூர்வ சம்பவங்கள் நிறைந்தது அவர் வாழ்க்கை.

இன்றைய சுதந்திர இந்தியாவைக் காணுவதற்கு விதை யூன்றியவர்களிலே வ. வெ. சு. அய்யரும் ஒருவர். ஆனல், அவர் உழைப்பிற்குத் தகுந்த புகழைப் பெறவில்லை. அவர் காலத்திலும் சரி; அவருக்குப் பின்னும் சரி; அவரைப்பற்றி இந்நாட்டு மக்கள் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. அவ ருடைய வாழ்க்கைக் குறிப்பை இந்திய நாட்டினர்—குறிப் பாகத் தமிழ் நாட்டினர் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

வ. வெ. சு. அய்யர் தமிழ் நாட்டில் பிறந்த வீரவிளக்கு; கலைக்கேணி; குமுறிவெடித்து ஆறி இறங்கிப்போன எரிமலை; எதிர்காலத்திலே நமக்கு வழிகாட்டி நிற்கும் சிறந்ததோர் இலக்கியம். அவர் வாழ்க்கை வரலாற்றை ஊன்றி உணர்ப வர்கள் இந்த உண்மைகளை மறுக்க மாட்டார்கள்.

அவர் திருச்சி வரகனேரியிலே ஒரு நடுத்தரப் பிராமணக் குடும்பத்திலே 2-4-1881 ஆண்டிலே பிறந்தார். அவருடைய தாய் காமாக்ஷி அம்மாள். தந்தையார் வேங்கடேச அய்யர். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலே கல்வி பயின்றார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், சட்டக் கல்வி பயின்று திருச்சிராப்பள்ளியிலேயே சில காலம் வக்கீல் தொழில் புரிந்தார். அப்பொழுது அவருக்குப் பணம் சம்பாதிப்பதிலேயே கவலை அதிகமிருந்தது. அவருக்குக் கலை வளர்ச்சியிலே அதிக ஆர்வம். அவர் ஒரு கலா ரசிகராகவும் இருந்தார்.

திருச்சியிலே வக்கீல் தொழிலிலே போதுமான வருவாய் இல்லை. வெளிநாடு செல்ல எண்ணினார். அக்காலத்தில் பிராமணர்கள் கப்பலேறிச் செல்லுவது வைதீகத்திற்கு விரோதம் என்று தடுக்கப்பட்டிருந்த காலம். கப்பலேறிச் சென்ற பிராமணர்களை சாதிப் பிரஷ்டம் செய்யும் காலம். அந்தக் காலத்தில் அவர் தன் குறிக்கோளைச் சாதித்துக் கொள்ளுவதற்காகக் கப்பலேறத் துணிந்தார். ரங்கூன் சென்றார். அங்கு வக்கீல் தொழில் செய்தார். பர்மா நாட்டில் பார் அட்லா பரிட்சையில் தேறிய வக்கீல்களுக்கே அதிக செல்வாக்கிருந்தது; அதிக வருவாயு மிருந்தது. ஆகையால் பார் அட்லா பட்டம் பெறுவதற்காக அவர் இங்கிலாந்திற்குச் சென்றார்.

இங்கிலாந்திலே அவர் பார் அட்லாவுக்குப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அந்நாட்டிலிருந்த இந்தியர்களுடன் அவர் தொடர்பு வைத்துக் கொண்டார். அந்நாட்டில் இந்திய இளைஞர்களின் புரட்சிக் கூட்டம் ஒன்று இருந்தது. அதைப் பற்றி ஐயர் கேள்விப்பட்டார்.

வி. டி. சாவர்க்கார், பாய் பரமானந்தா போன்ற புரட்சிப் போக்குடையவர்களைக் கொண்டது அக் கூட்டம். இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சிக்குக் குழிதோண்டிவிட வேண்டும். புராதன இந்தியப் பெருமையைப் பரிமளிக்கக் கூடிய சுயராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டும். வெள்ளையர்களை இந்தியாவைவிட்டு வேறு வழிகளிலே விரட்டமுடியாது.

ஆயுத பலங்கொண்டு தாக்கித்தான் வெளியேற்றவேண்டும்; என்னும் பலாத்காரக் கொள்கையிலே நம்பிக்கை யுடையது அக் கூட்டம்.

இந்திய மக்களுக்கு அவர்களுடைய புராதனப் பெருமையை நினைப்பூட்ட வேண்டும்; சோர்ந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்திய மக்கள் உள்ளத்திலே உணர்ச்சி நெய்யூற்றி வீரக் கனலைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யவேண்டும். தூங்கிக் கிடக்கும் இந்திய மக்களைத் தட்டி யெழுப்பி அவர்கள், செல்வமும் சுதந்தரமும் கொள்ளைக்காரர்களால் அள்ளிக் கொண்டுபோகப்படுவதைக் காணும்படி செய்ய வேண்டும் என்ற கொள்கையுடன் அவர்கள் பல துறைகளிலே வேலை செய்துகொண்டு வந்தனர். வீரப் போராட்டத்திற்குப் பயிற்சிபெற்று வந்தனர்.

இத்தகைய கூட்டத்தைச் சந்திக்க வேண்டும் என்னும் ஆவலுடன் அய்யர் அவர்களைத் தேடிச் சென்றார். இது 1907-ஆம் ஆண்டிலே நடந்த செய்தி.

வீரசாவர்க்காரும் அவருடைய நண்பர்களும் லண்டனில் உள்ள இந்தியா விடுதிக்குச் சாப்பிட வந்திருக்கும் சமயம் வ. வே. சு. அய்யர் அங்கே சென்றார். தன்னுடைய பெயர் எழுதிய சீட்டை ஒரு வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பினார். உடனே சாவர்க்காரும் அவருடைய நண்பர்கள் சிலரும் வந்து அய்யரைச் சந்தித்தனர்.

அப்பொழுது அய்யருக்குச் சுமார் 28 வயதுதான் இருக்கலாம். நல்ல கட்டமைந்த உடம்பு. நவீன நாகரிக உடை. எல்லாம் ஆங்கிலேயர் பாணியில் காட்சியளித்தார். சாவர்க்கார் கூட்டத்தினரோ அய்யருக்கு மாறான முறையிலேயே உடையணிந்திருந்தனர்.

அய்யர், சாவர்க்கார் கூட்டத்தைச் சந்திப்பதற்குமுன் அவர்கள் வயது சென்றவர்களாயிருக்க வேண்டும் என்று கருதியிருந்தார். இப்பொழுது அவர்களைப் பார்த்தால் எல்லோரும் வாலிபர்களாகவே காணப்படுவதைக் கண்டு வியப்

புற்றார். அவரை அறியாமலே அவர்கள்மேல் அன்பும் ஆசையும் வளர்ந்து பெருகிற்று.

சாவர்க்காருக்கும் அய்யருக்கும் நடந்த பேச்சிலே அய்யர் தனது வாலாற்றைக் கூறினார். இங்கிலாந்திலே தனது எதிர்கால வேலை ஆங்கிலச் சங்கீதம், நடனம் ஆகிய கலைகளைக் கற்றுக்கொள்வதுதான் என்று கூறினார். கலையிலே தனக்கிருந்த ஆர்வத்தைக் கூசாமல் வெளியிட்டார்.

அப்பொழுது சாவர்க்கார் அய்யருடைய உள்ளத்திலே உறங்கிக் கிடந்த உணர்ச்சியைக் கொஞ்சம் குத்திக் கிளப்பி விட்டார். இந்தியா படும் துன்பத்தை எடுத்துக்காட்டி, இதற்குக் காரணம் யார் என்பதையும் சுட்டிக் காட்டினார். இந்தியாவின் விடுதலைக்காக உழைக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியனின் கடமை என்பதையும் அச்சமயம் அவர் உள்ளத்திலே ஆணியறைந்தாற்போல் பதியும்படி பேசினார்.

இதன் பிறகு அய்யருக்கும் அந்தப் புரட்சிக்காரர்களுக்கும் அடிக்கடி சந்திப்பு ஏற்பட்டதில்லை. என்றாலும் அன்று அய்யரின் உள்ளத்திலே சிறிதாக மூட்டப்பட்ட தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கிவிட்டது. சுதந்தர உணர்ச்சியுடனேயே இலக்கியங்களையும், கலைகளையும் கற்றுணர்ந்தார்.

சாவர்க்கார் கூட்டத்தினரைச் சந்தித்த பிறகு அய்யருடைய மனத்திலே ஏற்பட்ட மாற்றம் அவரைப் புதிய மனிதராக்கிவிட்டது. அவருடைய நடையிலே, உடையிலே கூட மாற்றத்தைப் புகுத்திவிட்டது. பாரத அன்னைக்குப் பணிசெய்ய வேண்டும் என்ற உணர்ச்சிப்பத்தாக உருமாறி விட்டார்.

இதற்கிடையில் சாவர்க்கார் கூட்டத்தினர் ஆங்கில அரசாங்கத்தாரால் கைதியாக்கப் பட்டனர். சிறையில் அடைக்கப் பட்டனர். அவர்கள் மேல் சதிக் குற்றம் சுமத்தப் பட்டு வழக்கு விசாரணையிலே இருந்தது. அவர்களை நிரந்தரச் சிறை வாசிகளாக்கிவிட வேண்டும்; அல்லது தூக்கு மேடையிலே தொங்கும்படி செய்துவிட வேண்டும் என்பதே அதிகார வர்க்கத்தின் நோக்கமாக இருந்தது.

அவர்கள் லண்டனில் பிரிக்சன் சிறையிலே அடைபட்டுக் கிடந்தனர். அவர்களுடைய நண்பர்கள் கூட அவர்களைச் சந்திக்கப் பயந்தனர். யார் யார் சிறையிலிருக்கும் சாவர்க்கார் கூட்டத்தினரைச் சந்தித்துப் பேசுகிறார்களோ அவர்களையெல்லாம் அரசாங்க ஒற்றர்கள் பின்தொடர்ந்தனர். அவர்களையும் பயங்கரப் புரட்சிக்காரர்கள் பட்டியலிலே சேர்ப்பதற்குக் காத்துக் கிடந்தனர்.

1910-ஆம் ஆண்டில் ஒரு நாள் சாவர்க்காரையும், அவருடைய நண்பர்களையும் சிறைக்கூடத்திலே சந்திக்கச் சென்றவர்கள் கூட்டத்திலே நமது வ. வே. சு. அய்யரும் ஒருவர். சாவர்க்கார் அய்யரைக்கண்டார். முன்பு 1907-ல் காணப்பட்ட தோற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டிருந்தார் அய்யர். அன்று நவீன ஆங்கில நாகரிக வேடதாரியாகக் காணப்பட்டார். இன்று இந்திய மகரிஷிகளின் பரம்பரையைச் சேர்ந்த ஒரு உத்தமரதியாகி உருவத்தில் காட்சியளித்தார். மார்புவரையிலும், அடர்ந்து நீண்டு தொங்கும் அழகான தாடியுடன் தோன்றிய அய்யரைக் கண்டதும் சாவர்க்காருக்கு உண்டான ஆநந்தத்திற்கு அளவில்லை.

அப்பொழுது சாவர்க்காருக்கும் அய்யருக்கும் நடந்த பேச்சில், அய்யர், "சாவர்க்காரும் அவர் நண்பர்களும் கைதியாகாமல் தப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்ற கருத்தை வெளியிட்டார்.

பேட்டிகண்டு பேசுவதற்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன் போலீஸ்காரர்கள் விரட்டினர். அய்யரும் சாவர்க்காரும் தங்கள் அந்தரங்கத்தை மட்டிலும் ஒன்றாக இணைத்துக் கொண்டு ஆக்கையை மாத்திரம் தனித்தனியே பிரித்துக்கொண்டனர்.

இதன் பின் வ. வெ சு. அய்யரும் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்புப் பட்டியலிலே முதல் தளபதியாகச் சேர்க்கப்பட்டு விட்டார். அவரை ஒற்றர்கள் சுற்றித்திரிந்தனர். அவரையும் கைதிசெய்து சிறையிலடைக்கத் துடியாய்த் துடித்து நின்றனர்.

சிறைக்கூடம் செல்வதற்குத் தயாராக இருப்பது ஒரு பெரிய துணிச்சல்தான். அதிலும் தூக்குமேடையைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அதற்கும் கழுத்தை நீட்டத் தயாராயிருப்பது அதைக் காட்டிலும் அதிக துணிச்சல். எதிரிகள் கையில் சிக்காமல் எப்படியேனும் வெளியிலே இருந்து கொண்டு எண்ணத்திற் கொண்ட கொள்கைக்காக உழைப்பது மேற்சொல்லிய இரண்டைக் காட்டிலும் மிகவும் துணிச்சலான காரியம். இவ்வாறு செய்வது ஒரு அரசியல் கலையுங்கூட.

சுதந்திரத்திற்குப் போராடிய ஒவ்வொரு நாட்டிலும் முன்னணியிலே நின்ற அறிவும் ஆற்றலும் நிறைந்த தலைவர்கள் எதிரிகள் கையில் அகப்படாமலிருக்கும் கலையிலே பயிற்சி பெற்றவர்களாகவேயிருந்தனர். ஒவ்வொரு சுதந்திர நாட்டுச் சரித்திரத்தையும் புரட்டிப் பார்ப்போருக்கு இவ்வுண்மை விளங்கும்.

நமது வ. வெ. சு. அய்யர் அவர்களும் எதிரி கையில் அகப்படாமலிருந்து வேலை செய்யவேண்டும் என்று உறுதி கொண்டார். ஆகையால், அவர் போலீஸ்காரர்களுக்கு வேட்டையாகவில்லை. எப்படியோ தப்பித்துக்கொண்டார். பலவித மாறுவேடங்கள் பூண்டு எதிரிகள் கண்ணில் படாமல் தப்பினார்.

பல அல்லல்களுக்கு ஆளாகிக் கடைசியாகப் பாண்டிச்சேரிக்கு வந்துவிட்டார். புதுச்சேரியிலே அய்யர் தங்கியிருந்தகாலம் சிறிது தான். அங்கு அவர் அரவிந்தகோஷ் அவர்களுடனும், கவிச்சக்கரவர்த்தி பாரதியாருடனும் இருந்து அளவளாவி வந்தார். அவர்களுக்குள் அடிக்கடி நடைபெறும் பேச்சு வார்த்தைகள் மிகவும் பொருட் செறிவுடையதாயிருக்கும். அவர்களுடைய தர்க்கங்களை நண்பர்கள் கூடியிருந்து பொழுது போவது தெரியாமல் சுவைப்பார்கள்.

பாரதியார் கவி; எதையும் சுவைக்கும் சுபாவம் கவிகளுக்கு உண்டு. அரவிந்தர் தத்துவ ஞானி; இந்திய

வேதாந்தத்தின் ஆழத்திலே அமுழ்ந்திப்போனவர்; பழுத்த அரசியல் புரட்சிக்காரரா யிருந்து வேதாந்தியாக மாறிப்போனவர். அய்யரோ கலா ரசிகர்; கலைகளின் ஆழத்திலே மூழ்கி அதன் இன்பத்தை அனுபவிப்பதோடு மற்றவர்க்கும் எடுத்துக் காட்டும் இயல்புடையவர்; இதனோடு புரட்சிகரமான அரசியல் மனோபாவமும் படைத்தவர். இத்தகைய மூவரும் கூடிப் பேசுவதென்றால்—ஒன்றைப்பற்றி விவாதிப்பதென்றால் அதிலே அறிவூற்றுச் சுரந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அய்யர் புதுச்சேரி எல்லைக்குள் அடைந்து கிடக்க விரும்பவில்லை. அவருடைய பரந்த நோக்கத்திற்கும், தொண்டு செய்யவேண்டும் என்ற ஆர்வத்திற்கும் அது சிறைக் கோட்டமாகவே அவருக்குத் தோன்றிற்று. ஆகையால் புதுச்சேரியை விட்டு வெளி யேறினார். சென்னைக்கு வந்து "தேசபக்தன்" பத்திரிகையின் ஆசிரியப் பதவியை ஏற்றுக்கொண்டார். திரு. வி. கலியாணசுந்தர முதலியாருக்குப் பின் அப்பத்திரிகையின் ஆசிரியப் பதவியை ஒப்புக் கொண்ட அறிஞர் வ. வெ. சு. அய்யர் தான்.

அய்யர் தனது புரட்சிகரமான அரசியல் கருத்துக்களை தேசபக்தன் பத்திரிகை மூலம் வெளியிட்டு வந்தார். இடையிடையே அவருடைய கலை புணர்வையும் அப்பத்திரிகை தாங்கி வந்தது. அய்யரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையை வெள்ளையர் அரசாங்கம் கவனிக்காமலா இருக்குமா?

அப்பத்திரிகையிலே வெளி வந்த கட்டுரைகள் சம்பந்தமாக அய்யர் கைது செய்யப்பட்டார். 9-மாதம் சிறைவாசம் பெற்றார். சிறையிலிருந்து விடுபட்ட பிறகு வடநாட்டு யாத்திரை போனார். காசி, ஹரித்துவாரம் முதலிய இடங்களுக்குச் சென்றார். அந்த யாத்திரையின் போது மீண்டும் பம்பாயிலே அய்யரும் சாவர்க்காரும் சந்தித்தனர்.

லண்டன் பிரிக்சன் சிறையிலே அய்யரும், சாவர்க்காரும் சந்தித்துச் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இது

தான் முதல் சந்திப்பு. இது 1924-ல் நடந்தது. அய்யரும், சாவர்க்காரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். அவர்களுக்குள் பல அந்தரங்கங்களைப் பரி மாறிக்கொண்டனர்.

இக்காலத்திலே இந்திய அரசியல் வானிலே மகாத்மா வின் அகிம்சா தத்துவத்திற்கே அதிக செல்வாக்கு ஏற்பட் டது. மகாத்மாவே இந்திய அரசியல் வானத்தின் உச்சியிலே தகதகவெனப் பிரகாசித்தார். புரட்சிக் கொள்கைகளும், புரட் சிக்காரர்களும் ஓரளவு இந்திய மக்களின் மனக்கண்ணிலிருந்து மறைந்து வந்தனர். இந்த நிலைமையை அய்யரவர்கள் நன்றாக உணர்ந்தார்.

இந்திய சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டும். இந்திய சமுதாயக் கோட்டையில் இடைக்காலத்தில் எதிரிகளால் ஏற் படுத்தப்பட்டிருக்கும் சிதைவுகளைச் செப்பம் செய்யவேண்டும். இந்திய சமுதாயக் கோட்டைப் பார்த்து உலகம் வியக்கும் படி—போற்றும்படி பழய நிலையிலே கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யவேண்டும். இந்த முடிவு அய்யர் உள்ளத்திலே உதித்தது. அவரை இதற்கான காரியத்தைச் செய்யும்படி உணர்ச்சி உந்தியது.

அமைதியாக இருந்து பணி செய்வதின் மூலம் எதிர் கால பாரதமக்களை உருவாக்கத் திட்டமிட்டார். இதற்கேற்ற வழி குருகுலம் ஒன்றை அமைத்து நடத்துவதே என்று முடிவு செய்தார். சேர்மாதேவியிலே தாம்பிரபரணி நதிக்கரை யிலே பரந்த வெளியிலே குருகுலம் ஒன்றை அமைத்தார். அதை நாட்டு மக்கள் அனைவரும் ஆதரித்தனர். மகாத்மா காந்தியடிகளின் ஆசியும் கிடைத்தது.

வகுப்புபேதமின்றிப் பல பிள்ளைகள் குருகுலத்திலே கல்வி பயின்றனர். “பாலபாரதி” என்ற மாதசஞ்சிகை ஒன்றைக் குருகுலத்தின் வாயிலாகத் தொடங்கினர். அய்யர் அவர்களே அதன் ஆசிரியர். இன்று கல்வியும், கலையும் கற்ற வர்களும் கலைஞர்களும் எவ்வளவோ பெருகியிருப்பதாகச்

சொல்லப்படுகின்றது. முளைக்கிளைகள் போல் பத்திரிகைக் கூட்டங்கள் நிரம்பிக் கிடக்கின்றன. ஆயினும் பாலபாரதி போன்ற ஒரு சிறந்த கலைக்களஞ்சியத்தை இன்னும் காண முடியவில்லை.

பாரத நாட்டின் பண்பாட்டை—தமிழ் நாட்டின் தனிப் பெரும் இயல்பை—உலக இலக்கியத்தின் சுவையை விளக்கும் சிறு கதைகள், கட்டுரைகள் ஆராய்ச்சிகள் எல்லாம் பாலபாரதியிலே மிளிர்ந்தன. கலைமகள் பால பாரதியின் ஏடுகளிலே நர்த்தனம் புரிந்தாள். அய்யரின் உன்னத நோக்கங்களைப் பால பாரதி தாங்கிக்கொண்டு வந்தது.

வ. வெ. சு. அய்யரின் புதிய பாரத அமைப்புக்கு அடிப்படையான குருகுலம் ஓங்கி வளர்ந்து தமிழ் நாட்டை பாரத நாட்டின் தலைமையாகச் செய்யும் என்று பலர் எதிர் பார்த்தனர். ஆனால் வகுப்புப் போராட்டம் தலையெடுத்து குரு குலத்தின் வாழ்நாளைச் சிதைத்து விட்டது.

குருகுலத்திலே மாணவர்களுக்குள் எந்த வகுப்பு வேற்றுமையும் பாராட்டப்படவில்லை. எல்லா வகுப்பு மாணவர்களும் ஒன்றாகவே படித்து உண்டு உறங்கி வருவதற்கான சட்ட திட்டங்களே அமைக்கப்பட்டிருந்தன. அய்யர் அவர்கள் எல்லா மாணவர்களுடனும் ஒன்றாகவே—சமமாகவே பழகி வந்தார்.

ஆனால் உயர்ந்த வகுப்பினராகக் கருதிக் கொண்டிருந்த சில மாணவர்கள் ஹரிஜன மாணவர்களுடன் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட விரும்பவில்லை. தனியாக உட்கார்ந்து உணவு கொண்டனர். குருகுலத்தின் போக்கை எதிர்த்தவர்கள் எல்லா மாணவர்களும் ஒன்றாகவே உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்றனர். ஆனால் "மாணவர்கள் மனந்திருந்தி ஒன்றுபட வேண்டுமே ஒழிய அவர்களை வற்புறுத்த முடியாது; கட்டாயப்படுத்த முடியாது; மனப்பூர்வமாக ஏற்படும் ஒற்றுமைதான் மறையாமல் நிலைத்து வாழ முடியும்; கட்டாயப்படுத்திச் சேர்க்கப்படும் கூட்டுறவு நிலைக்காது; பிளவுபட்டுப்போகும்" என்பது அய்யர் அவர்களின் கொள்கை.

அய்யருக்கும், அவரை எதிர்த்தவர்களுக்கும் எழுந்த கொள்கைப் போராட்டமே குருகுலப் போராட்டமாக உருவெடுத்தது. அய்யர் ஒரு வகுப்புவாதியாகத் தமிழ் நாட்டிலே சித்திரிக்கப் பட்டார். எதற்கும் அய்யர் அஞ்சவில்லை. கொள்கையே பிரதானமென இறுதி வரையிலும் தன் கொள்கையிலேயே பிடிவாதமாக நின்றார்.

வகுப்புவாத மனப்பான்மையை விட்டொழித்துக் குருகுலப் போராட்டத்தின் உண்மைத் தத்துவத்தை ஊன்றிப் பார்ப்பவர்கள் வ. வெ. சு. அய்யரின் வயிர உள்ளத்தைக் காண்பார்கள். அவருடைய நேர்மையான மனப்போக்கை உணர்வார்கள். அய்யரின் சரியான மனப்போக்கை அறிந்து கொள்ளாத காரணத்தாலேயே குருகுலப் போராட்டம் வகுப்புச் சண்டையாக வளர்ந்து குருகுலம் நாசமாயிற்று.

இதற்காக நாம் யாரையும் குறைகூற முடியாது. இந்த நாட்டிலே தலைவிரித்தாடும் வகுப்பு வித்தியாசந்தான் இத்தகைய நிலைமையை உருவாக்கிவிட்டது; விடுதலை யுணர்ச்சியும், பரிசுத்தமான தேசத் தொண்டும், தங்கலமற்ற தியாகமும் உடைய தலைவர்கள் கூட ஒருவரை யொருவர் சந்தேகித்துச் சாதிச்சண்டையிலே வழுக்கி விழும்படி செய்து விட்டது.

இந்தக் குருகுலச் சண்டை 1925-ல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பொழுது அய்யர் குருகுல மாணவர்களுடன் பாப நாசம் மலைக் காட்சிக்குச் சென்றிருந்தார். மலையின் இயற்கை வனப்பிலே ஈடுபட்டுப் பாண தீர்த்தக்கரையிலே பரவசமாக நடக்கும்போது அய்யரின் குமாரத்தி பாண தீர்த்தத்திலே தவறி விழுந்துவிட்டார். அவரைக் காப்பாற்றத் தாவிய அய்யரும் அருவியிலே மூழ்கினார். வகுப்புவாதக் குருகுலச் சண்டையை வளரவொட்டாமற் செய்யவேண்டும் என்னும் உயரிய நோக்கம் அவரை அருவியிலே தள்ளி அமரர் ஆக்கி விட்டதென்று அன்று பலர் கூறினர். அது உண்மையாக இருக்கலாம்.

வ. வெ. சு. அய்யர் அவர்கள் தமிழிலே துறைபோனவர்; வடமொழியிலே வல்லுநர்; ஆங்கிலக் கலையிலே அபார அறிவு படைத்தவர். இவ்வறிவை அவர் தமிழ் வளர்ச்சிக்கே பயன் படுத்தினார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

என்று பாரதியார் தமிழ்ப் புலவர்களின் சிறப்பைக் குறித்தார். உலகத்திலேயே கம்பன், வள்ளுவன், இளங்கோ இந்த மூன்று புலவர்களுக்கும் ஈடானவர்கள் எவரும் இல்லை யென்று முழங்குகிறார் பாரதியார்.

இவ்வுண்மையை வ. வெ. சு. அய்யர் அவர்களும் ஒப்புக் கொண்டு கையொப்பம் போட்டுவிட்டார்.

அய்யரவர்கள் எழுதியுள்ள கம்ப ராமாயண ரசனையிலே பாரதியாரின் கருத்தை அப்படியே ஒப்புக்கொண்டுவிட்டார். உலகில் பல மொழிகளில் உள்ள காவிய கர்த்தாக்கள் எல்லா ரையும் விடக் கம்பன் உயர்ந்து நிற்கிறான் என்பதை விளக்கி யிருக்கிறார்.

கம்பனைப் பற்றி அவர் கூறும் ஒரு விஷயம் குறிப்பிடத் தக்கது. கம்ப ராமாயணம் தெய்வீகக் கதை என்பதற்காக மதிக்கப் படவில்லை; பாராட்டப் படவில்லை. சிந்தனையைக் கொள்ளை கொள்ளும் சிறந்த கவிதை என்பதற்காகவே மதிக்கப்படுகிறது; என்று கூறியிருக்கிறார். தெய்வீகக் கதை என்பதனால் தான கம்ப ராமாயணப் பிரசங்கிகளுக்கு மதிப் பும், பாராட்டும் கிடைக்கிறது என்றால், கந்த புராணப் பிர சங்கிகளுக்கு—விநாயக புராணப் பிரசங்கிகளுக்கு—பாகவத புராணப் பிரசங்கிகளுக்கு ஏன் பாராட்டும் மதிப்பும் ஏற் படவில்லை; என்று கேட்கிறார்.

கம்ப ராமாயணம் மக்கள் மனதிலே மூட நம்பிக்கையை ஊட்டுகின்றது; ஆதலால் அதை நெருப்பிலே புடம் போட

வேண்டும்; என்று இன்று கூறும் சிலருக்கு அன்று அவர் எழுதி இருப்பதே சரியான பதிலாகக் காணப் படுகிறது. கம்ப ராமாயணம் கதைக்காகப் போற்றப்படவில்லை; கவிக்காகவே போற்றப்படுகின்றது. ஆகையால், மொழி வளர்ச்சியிலே நாட்டம் உடையோர் கம்பனைத் தூற்றுவது அறிவீனம் என்று கன்னத்தில் அறைந்து பதில் சொல்லுவது போல் இருக்கிறதல்லவா. இத்தகைய சிறந்த கம்ப ராமாயணத்தை வ. வெ. சு. அய்யர் அவர்கள் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்திருக்கின்றார். அவர் மொழி பெயர்ப்பு இன்னும் அச்சேறவில்லை. விரைவிலே அச்சேறி வெளியேறி உலகில் உள்ள கலா ரசிகர்களின் உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் என்பது உறுதி.

உலகம் போற்றும் உயர்ந்த திருக்குறளை அய்யர் அவர்கள் ஆங்கிலத்திலே பெயர்த்தெழுதி உலகிற்கு விருந்து செய்திருக்கின்றார். இதன் மூலம் பாரதி போற்றிய வள்ளுவனை உலகமெங்கும் உலவச் செய்துவிட்டார். இன்றும் அய்யரின் மொழி பெயர்ப்பைப் படித்து உலகம் தமிழருடைய பண்பாட்டைக் கண்டு வியக்கின்றது.

பாரதியார் கூறிய மூன்று புலவர்களிலே இருவரை அய்யர் உலக இலக்கிய மேடையிலே தலைமை தாங்கச் செய்துவிட்டார். இன்னும் சிறிதுகாலம் அவர் உயிருடன் வாழ்ந்திருந்தால் மூன்றாவது புலவரான இளங்கோவடிகளையும் உலக அரங்கில் தலைமை தாங்கச் செய்திருப்பார் என்பது நிச்சயம்.

அய்யரின் எழுத்துச் சித்திரங்களிலே ஈடுபடுபவர்கள் அவருடைய உன்னத நோக்கங்களை உணர்வார்கள். பாரத நாட்டின் பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்பதிலே அவருக்கிருந்த ஆர்வம்—தமிழ் நாகரிகத்தையும், தமிழர் பண்பாட்டையும், தமிழ் இலக்கியத்தையும் புதுப்பிக்க வேண்டும் என்பதிலே அவருக்கிருந்த உணர்ச்சி எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுவார்கள்.

வ. வெ. சு. அய்யர் என்னும் கதிர் தமிழ் நாட்டு வானத்திலே கருமேகங்களால் மறைக்கப்பட்டுக் கிடந்தது. ஆயினும் அதன் ஒளி அந்த மேகங்களையும் கிழித்துக்கொண்டு வீசாமல் இல்லை. வீசிற்று. அதன் கதிர்களைக் கண்டு மகிழ்ந்தவர்கள் சிலர்தான். அந்த ஒளி மறைந்த பின்னராவது அதன் பெருமையைப் போற்றுவது கண்டு களிக்கிறோம். அய்யரின் வாழ்க்கை—கொள்கை—செய்கை நவீன பாரதத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது. இதை எவரும் மறுக்க முடியாது. வாழ்க வ. வெ. சு. அய்யர் கொள்கை.

சுவாமி சுப்ரமண்ய சிவம்

எஸ். ஏ. தேவநாயக அய்யா M. L. A.

திருச்சி சிறையில் கைதிகளை அடைக்கும் கொட்டடை. கத்தை கத்தையாக சுண்ணும்பில் தோய்த்துக் காய்ந்துவரும் கம்பளி ரோமத்தை வில் பிடித்து அடித்துச் சன்னமாக்கிக் கொண்டிருந்தது ஒரு உருவம். எட்டினதும் எட்டாதது மான கைதியுடை யொன்றை அது அணிந்துக் கொண்டிருந்தது. கைதியின் நம்பர், விடுதலையாகும் தேதி முதலியன குறிக்கப்பட்ட தகரப் பில்லை யொன்று அதன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. ஷோல்டர் ஏறிப்போன ஒரு சட்டை, இழுத்துப் பிடித்தபடி யிருந்த ஒரு கால் சராய், வலது கணுக்காலில் ஒரு இரும்பு வளையம், இவைகளோடு காட்சியளித்தது.

கடுமையான தொழிலாகிய கம்பளி ரோமத்தை அடிப் பதால் இருமல் உண்டாகி இரண்டு நிமிடத்திற் கொருமுறை கொல், கொல் என்று இருமும் சப்தம் அந்த அறை முழு வதும் கேட்டவண்ண மிருந்தது. ஓயாத உழைப்பினுல் சோர்ந்து போயிருந்தும்கூட முறுக்கிவிடப்பட்ட மீசை யுடன் கம்பீரமாக காட்சி அளித்தது. அதன் இரு கண்களி லிருந்தும் தீட்சண்யமான ஒளி ஒன்று வீசிக்கொண்டிருந்தது.

இந்த உருவம் வேறு யாரும் இல்லை. நமது சுவாமி சுப்ரமண்ய சிவம்தான். பூலோக நரகம் எனப்படும் இந்தியச் சிறைச்சாலைகளில் ஒன்றுன திருச்சி சிறையில் 1908-ம் ஆண்டு ஜுலை 7-ந் தேதியிலிருந்து 1912-ம் வருடம் நவம்பர் 2-ந் தேதி வரை அடைபட்டுக் கிடந்தபோது அனுபவித்த வைகள்தான் மேலே கூறியவைகள்



தூத்துக்குடி தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையோடு சேர்ந்து கனல் கக்கும் பிரசங்கங்களை புரிந்ததன் பொருட்டு சர்க்காரின் விருந்தாளியாக சிறைக்கூடத்திற்குச் சென்றார்.

சுப்ரமண்ய சிவம் மதுரை ஜில்லாவிலுள்ள வத்தலக் குண்டில் பிறந்தவர். வடமப் பிராமண வகுப்பைச் சேர்ந்த வர். இளமையில் சுவாமி சதானந்தர் என்பவரிடத்தில் சிஷ்யராகயிருந்து யோகமும், ஞானமும் பயின்றார். இந்து மத தத்துவங்களில் நம்பிக்கை வைத்து வேதாந்த வழியில் சென்றார். சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகளே அவரது வாழ்க்கையின் லட்சியம்; தேசநிடம், மனோநிடம் இவைகளோடு கூடிய பலசாலிகளாக தமிழ்நாட்டு வாலிபர் கள் திகழ வேண்டுமென விரும்பினார். இதன் பொருட்டு அவர் "பாரத ஆஸ்ரம்" என்ற ஒரு ஸ்தாபனத்தை 1921-ல் சேலம் ஜில்லா பாப்பாரப்பட்டியில் ஏற்படுத்தினார். அதன் மூலம் தனது எண்ணத்தை உயிர் போகுமளவும் நிறைவேற்றி வந்தார்.

1906-ல் தேச சேவையில் புகுந்தது முதல் 1925-ல் இறைவனடி செல்லும்வரை சிவம் இந்திய விடுதலையின் பொருட்டு சலியாது உழைத்தார். சிறை செல்வதென்பது கடினமெனக் கருதப்பட்ட அந்நாளில் சிதம்பரம் பிள்ளையோடு சேர்ந்துச் சிறை சென்றார். சிறையிலே சிதம்பரம் செக்கிழுத் தார். சிவம் கம்பளிமயிர் வெட்டி நோய்கண்டார்.

சிவம் தமிழ் மொழியில் நல்ல பாண்டித்யம் பெற்றவர். தனது மனைவியின் வாழ்க்கைச் சகாயத்தின் பொருட்டு, சிறையில் பல நூல்களை எழுதினார். சச்சிதானந்த சிவம், ஞானரத்தினம், பகவத்கீதா சங்கிரகம் சங்கர விஜயம் மத்வ விஜயம் என்பவைகள் அவைகளில் முக்கியமானவை. தான் சிறையில் அனுபவித்தவைகளைப் பற்றி "சிறைவாசம்" என்றபெயருடன் ஒரு சிறிய நூல் ஒன்றையும் அவர் எழுதி யுள்ளார். சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளின் தினசரி வாழ்க்கையைப்பற்றி அவர் அதில் எழுதி இருக்கிறார். அதில் ஒரு பகுதியை கீழே தருகிறேன்.

“ சிறைச்சாலைக் கொட்டடைகளில் காலையில் 5-மணிக்கு முதல் மணி அடிப்பார்கள். அதன்பின் பதினைந்து நிமிடம் சென்று மீண்டும் மணியடிப்பார்கள். அனைவரும் அதற்குள் எழுந்து வெளிவந்து தயாராக நிற்க வேண்டும். $5\frac{1}{2}$-மணிக்கு மூன்றும்மணி அடித்து, கொட்டடைகளின் கதவுகளைத் திறந்து விடுவார்கள். அதிகாரிகள் வந்து கைதிகளைப் பார்வையிட்டபின் மலஜலம் கழிக்க கக்கூஸ்களை நோக்கி ஓடுவோம். கழிவுப் பொருள்கள் அப்புறப்படுத்தப் படாமல் ஆபாசமாகக் கிடக்கும். நாம் கழித்த மலச் சட்டியை பின் நாமே அப்புறப்படுத்த வேண்டும். அதன் பின் மண்ணையோ கல்லையோ கிடைத்ததைக்கொண்டு பல் துலக்க வேண்டும்.

காலை ஆகாரம் இதற்குள் தயாராக இருக்கும். கேழ்வரகு கஞ்சியும் அதற்குக் கொஞ்சம் சட்டினியுமே காலை ஆகாரம். பின் மத்தியானம் 11-மணிக்கு உப்பு உறைப்பில்லாத குழம் போடு கூடிய கேழ்வரகுக் களியை சட்டியில் பரிமாறுவார்கள். சாதம் என்பது வாரத்திற்கு இரண்டுநாள் தான். காய்கறி எதுவும் இதற்குக் கிடையாது. சிறைச்சாலையில் விளைபவை அனைத்தும் அதிகாரிகள் வீட்டிற்குச் சென்றுவிடும். பிரதி புதன், ஞாயிறு தோறும் மாமிச போஜனம் உண்டு மாமிசம் உண்ணுதவர்களுக்கு நல்லெண்ணெய் கொஞ்சம் கொடுப்பார் கள். ஞாயிற்றுக்கிழமைகளில் கைதிகளுக்கு க்ஷவரம்செய்வார் கள். சிறைச்சாலையின் சரித்திரத்தில் க்ஷவரம் செய்வ தென்பது இல்லாவிட்டால் சிறைச்சாலையைப் போல் சுகமானதெதுவும் இல்லை. க்ஷவரத்தின் பொருட்டு தீட்டப் பட்ட இரும்புத் தகடுகள் இருக்கும். இதைக்கொண்டு மயிர் சிரைக்கும்போது அடையும் அவஸ்தையை பொறுக்க முடியாது. கைதிகளின் உடம்பில் எந்த பாகத்திலும் அரை அங்குலத்திற்கு மேல் ரோமம் இருந்தால் அழுக்குப் படிந்து நோய் நொடிகள் உண்டாகும். இதனால் க்ஷவரம் செய்து கொள்வதென்பது சிறைச்சாலை விதிகளில் விலக்கமுடியாத தாகும்.

சிறைச்சாலைக்கு ஆஸ்பத்திரி யொன்று உண்டு. அதைப் பார்வையிட வருபவர்களிடம் கைதிகள் தங்கள் குறைகளைச் சொல்ல அஞ்சுவார்கள். அதைக் கேள்வியுற்றால் அதிகாரிகள் துன்புறுத்துவார்களோ என்ற அச்சமே அதற்குக் காரணம்.

ராஜியக் கைதிகள் இதரர்களைக் காட்டிலும் கடுமையாக நடத்தப்பட்டனர். எடுத்ததற்கெல்லாம் இவர்கள் மீது குற்றம் சாட்டப்படும். தொட்டதற்கெல்லாம் தண்டனை கிடைக்கும். தண்டனை என்றால் சாதாரணமானதல்ல. கசையடி, கஞ்சி ஆகாரம் கொடுத்தல், கைகளை கம்பியில் சேர்த்து விலங்கு பூட்டுதல், கால்விலங்கு மாட்டி இருட்டறையில் தள்ளுதல் இப்படியெல்லாம் பயங்கர அதிகார ஆட்சி நடக்கும்.

சகோதரர்களே! இப்பரந்த உலகில் சுகமும் துக்கமும் மாறி மாறி வரும் இயல்புள்ளவை. சுதந்திரம் என்ற சத்தியத்திற்காக நாம் அடைபட்டுக் கிடக்கும் சிறைச்சாலை அனைத்தும் தவச்சாலைகளே. மானிட ஜாதியின் சுதந்திரத்தை தேடிச் செல்லும் வேலைக்காக மேற்கொள்ளும் சிறைத் தண்டனை என்ற இந்தத் துன்பத்தை நாம் கம்பீரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.”

சிவமும், அவரைப் போன்று அந்தக் காலத்தில் சிறைத் தண்டனை மேற்கொண்ட தேசபக்தர்களும் எந்த வாழ்க்கையை மேற்கொண்டார்கள் என்பது இந்தப் புத்தகக் குறிப்பிலிருந்து நமக்கு நன்றாக விளங்குகின்றது.

சிறையிலிருந்து வெளிவந்த பின் சிவம் தன் மனைவியுடன் வாழ்க்கையைச் சேர்ந்து நடத்தினார். அப்போது ஞானபானு, பிரபஞ்ச மித்திரன், இந்திய தேசாந்திரி என்ற பத்திரிகைகளின் ஆசிரியராக அமர்ந்திருந்தார். பழைய நாதர் என்ற புனைபெயரில் அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுவார். இவர் எழுதும் புத்தகங்கள், கட்டுரைகள் அனைத்தும் ஆழ்ந்த பொருட்சுவையோடு கூடியனவாக

வும், வீரம், உணர்ச்சி இவைகள் கொண்டதாகவும் இருக்கும்.

சிவம் எப்போதும் குடும்ப வாழ்க்கையில் பற்று கொண்டவர் அல்ல. தம் மனைவியை விட்டுவிட்டு ஊர் ஊராகச் சென்று விடுதலைப் பிரசாரம் செய்வார். அவர் துடங்கிய பாரத ஆஸ்ரமமும் அதன் தொண்டர்களும் இந்த வேலைக்குப் பெரிதும் உதவினர். ஆஸ்ரமத்தின் செலவுக்கும், சுற்றுப் பிரயாணத்திற்குத் தேவையான பணத்திற்கும் அவர் எப்போதும் கவலைப்பட்டதில்லை. புத்தகங்கள் எழுதுவதன் மூலமும், தெருக்களில் பஜனை செல்லும்போது கிடைக்கும் உண்டியல் அரிசி வசூல் மூலமுமே ஆச்ரம வாசிகள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

மதுரை நகரத்தின் தெருக்களில் தினமும் சிவம் தனது சிஷ்யர்கள் புடைசூழ பஜனை பாடிச் செல்வார். தேசிய கீதங்களை உருக்கமாகப் பாடுவதைக் கேட்கும் பொது ஜனங்கள் தங்கள் கையில்கிடைக்கும் காசுகளை உண்டியலில் போட்டுவிடுவார்கள்.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் சிவம் தனது பிரசங்கத்தையும், தேசவிடுதலைத் தொண்டையும் செய்திருக்கின்றார். கனல் கக்கும் பிரசங்கத்தை கேட்டு வழி நெடுக அவருக்குப் பலர் சிஷ்யர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். அரசாங்கம் தன்னைக் கைது செய்துவிடுமோ என்று அவர் கவலைப்பட்டதே கிடையாது. பஞ்சாபில் லாலாஜி, அஜித்சிங் இருவரும் நாடுகடத்தப்பட்ட சமயம் அவர் திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்தார். வடநாட்டிலிருந்து தாகூர்கான், சந்திரவர்மா என்ற இரண்டு தலைவர்கள் அங்கு வந்திருந்தனர். லாலாஜி, அஜித்சிங் நாடுகடத்தப்பட்டதைக் குறித்தும், அன்னியர் ஆட்சியின் கீழ் அவதியுறுவதைக் குறித்தும் இருவரும் பேசினார்கள். அதைக் கேட்ட சிவம் எப்படியாவது இந்த ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டவேண்டுமெண தீர்மானித்தார். அன்றிலிருந்துதான் தனது தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை துடங்கினார். தேசமெங்கும் இதனால்

ஒரு உணர்ச்சியைக் கிளப்பி புரட்சியை உண்டாக்கிவிட முடியுமென தீர்மானித்தார்.

மறு நாளே திருவனந்தபுரத்தில் மூன்று கூட்டங்கள் கூட்டினார். சிவத்தின் வீரகர்ஜனையைக் கேட்ட சமஸ்தான மன்னர் சிவத்தை வெளியேற உத்திரவு போட்டார். உடனே சிவம் கால்நடையாகவே புறப்பட்டு கிராமந்தோறும் பிரசங்கங்கள் செய்துகொண்டே திருநெல்வேலி வந்துசேர்ந்தார்.

1921-ம் வருடம் சட்டமறுப்பு துடங்கிய காலத்தில் முதன் முதலாக மதுரை ஜில்லாவில் சிறை சென்றவர் சுப்ரமண்ய சிவாதான். மதுரை நகரில் அன்னியர் சட்டத்தை மீறவேண்டுமென செய்த பிரசங்கங்களின் பொருட்டு 124-எ பிரிவின் கீழ் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடந்தது. சிவம் வழக்கில் கலந்துகொள்ளவில்லை. கடைசியில் தனது வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார். அவருக்கு மீண்டும் 2½ வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பின் சிவம் கைதாகி திருச்சி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

குருவைத் தொடர்ந்து அவரது பாரத ஆஸ்ரமத்தைச் சேர்ந்த சிஷ்யர்கள் சட்டமறுப்பைத் தொடர்ந்து நடத்தினார்கள். 1922-ம் வருடம் ஜனவரி மாதம் 25-ந் தேதி மதுரை ஜில்லா கோரிப் பாளையம் கள்ளுக்கடை மறியலில் சிவத்தின் சிஷ்யர்கள் 19 பேர் கைது செய்யப்பட்டனர். மறுநாள் காலை கோர்ட்டில் ஒரே கூட்டம். கைதான அனைவருக்கும் 11 வருடம் கடுங்காவலும், 100 ரூபாய் அபராதமும் செலுத்தத் தவறினால் இன்னும் 3 மாத தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பாகியது. ஜெயகோஷத்துடன் சகலரும் சிறை புகுந்தனர். "இந்தியாவில் வடக்கில்தான் சட்டமறுப்பு நடக்கின்றது, தெற்கில் இல்லை" என்று லண்டன் பார்லிமெண்டில் கேள்வி எழுந்தபோது ஒரு அங்கத்தினர் எழுந்து மதுரையில் இந்த பாரத ஆஸ்ரமத்தை சேர்ந்த 19 பேர் கைது செய்யப்பட்டதைக் கூறினார்.

இந்த அளவிற்குத் தமிழ் நாட்டில்—தென் இந்தியாவிலேயே மதுரை புரட்சியின் தலைநகரென பெயர் பெற காரணமானவர் சுவாமி சுப்ரமண்ய சிவம்தான். சிவத்தின் சேவையால் மதுரை நகரில் சுதந்தர தீ பரவியது. அங்கு பரவிய தீ தமிழ் நாடெங்கும் பின்னால் தொடர்ந்தது.

சிவம் எழுதுவதிலும், உணர்ச்சி ததும்ப நடிப்பதிலும் திறமைகொண்டவர். ஒரு சமயம் அவர் சிதம்பரம் வந்திருந்த போது நானும், பரஞ்ஜோதி ஸ்வாமிகள், நயனியப்ப பிள்ளை முதலானோர்கள் உடனிருந்தோம். ஒருநாள் அதிகாலையில் வந்த "ஹிந்து" பத்திரிகையை பிரித்துப் பார்த்தார். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டியது. பக்கத்திருந்த நம் அனைவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. வியப்பும் கவலையும் கொண்டோம். யாவரும் ஒன்றும் பேசாது அப்படியே ஸ்தம்பித்து விட்டோம். நிசப்தம் குடிகொண்டிருந்தது. திடீரென்று சிவம் "பார்த்தீர்களா! இப்பேர்ப்பட்ட மகான்களைச் சிறையிலிட்டு செய்யும் சித்ரவதையை. நம் நாட்டிற்கு நல்லகாலம் வருமா?" என்று பெருமூச்சுவிட்டார். ஏரவாடா சிறையில் மகாத்மாஜீ உடல் நோய்ப்பட்டு, சாஹரன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்ட செய்தியே அதில் காணப்பட்டிருந்தது. உடன் சிவம் பேனாவையும் காகிதத்தையும் எடுத்தார். "திலகர் மறையும் காலத்தில் நாட்டு மக்கள் தங்கள் ரக்ஷைக்கு உன்னையே எதிர்நோக்கினார்கள்" என்ற பொருள்படும்படியான நாடகம் ஒன்றை "திலகர் காந்தி தரிசனம்" என்ற பெயருடன் எழுதிப் படித்துக் காண்பித்தார்.

படித்த சிவமும் கேட்ட நாமும் கண்ணீர் வடித்தோம். சிவத்திற்கு பேசும் திறன் எப்படியோ, அப்படியே எழுதும் திறனும் இருக்கின்றது என்று இதிலிருந்து தெரிந்தது.

அத்துடன் மட்டுமல்ல; அவர் தைரியமும் திடசித்தமும் கொண்டவர். 1923-ம் வருடம் கள்ளுக்கடை மறியலில் தண்டிக்கப்பட்ட தொண்டர்கள் கடலூர் சிறைக்குக் கொண்டு போகப்படுவதன் நிமித்தம் திருப்பாப்புலியூர் வந்தனர்

இரவு சுமார் 1 மணிக்கு ரயில் வருகின்றது. அதற்கு முன்பே சிவமும் உள்ளூர் தேசபக்தர்களும், ஆசிர வாசிகளும், 160 தொண்டர்களுக்குத் தேவையான சாப்பாட்டுடன் காத்திருந்தோம் சரியாக இரவு 1 மணிக்கு வண்டி வந்தது. நாங்கள் ஜே கோஷம் போட்டு வரவேற்றதைக் கேட்ட போலீஸார் மிரண்டனர். எங்களில் ஒருவரையும் தொண்டர்களிடம் பேச அனுமதிக்கவில்லை. உடனே சிவம் கைதான மதுரை தொண்டர்களைச் சாப்பிடாமல் அகலாதீர்கள் எனக் கூறினர். அவர்கள் 160 பேரும் சாப்பிடாமல் செல்ல முடியாதென சத்தியாக்கிரஹம் செய்தனர். போலீஸார் தொண்டர்கள் மீது நடுநிசியில் தண்ணீர் ஊற்றியும் அவர்களது கம்பளங்களை நனைத்தும் அகலவில்லை. கடைசியில்போலீஸார் பணிந்தனர். தொண்டர்கள் உணவருந்தி சிவத்தைப் பாராட்டிச் சென்றனர்.

சிவம் மதுரையிலிருந்த காலத்தில் சேர்மாதேவி குருகுலப் போராட்டம் நடைபெற்று வந்தது. வ.வெ.சு. அய்யர் ஆச்சார்யா பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இதைச் சமாசமாக தீர்த்து வைக்கத் திருநெல்வேலி போவதாக தீர்மானித்திருந்தார். அதுசமயம் ஒரு நாள் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தபோது வ. வெ. சு. அய்யரின் குமாரத்தி ஆற்றில் விழுந்துவிட்டதாகவும், அவளைக் காப்பாற்ற குதித்த அவரும் இறந்துவிட்டதாகவும் செய்தி இருந்தது. இதைப் படித்ததும் அலறினர். அதைத் தொடர்ந்து தேசபந்து சித்ரஞ்சன தாசரும், காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மாவும் இறந்துவிட்ட செய்திகள் வந்தன. இதையெல்லாம் பார்த்த சிவத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. தேசத் தொண்டில் பிரபலம்பெற்றவர்களும், அரிய நண்பர்களும் தன்னைவிட்டுச் சென்றுவிட்டது அவரது உள்ளத்தில் நீங்காத் துயரை உண்டாக்கிவிட்டது. அவரது உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி, தானும் சீக்கிரம் மறைந்துவிடலாமெனக் கூறியது.

உடனே சிவம் திருவானைக்காவல் வழியாக பாப்பாரப்பட்டியிலிருந்த தனது பாரதமாதா ஆஸ்ரமத்திற்குச் சென்

ரூர். அங்கு சென்றடைந்தவுடன் சிவம் நம்மைவிட்டு மறைந்தார். இது 1925-ம் ஆண்டு ஜூலை 23-ந் தேதி ஆகும். அவர் ஸ்தாபிதம் செய்த பாரத ஆஸ்ரமத்திலேயே அவரது உடலைச் சமாதி செய்தனர். அவரது சமாதியை அடக்கம் செய்யும் பொருட்டு கிராமவாசிகள் பெருங்கூட்டமாக வந்து லிங்கப் பிரதிஷ்டை செய்தனர்.

சிவம் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் மட்டும் இருக்கவில்லை. வீரம் ததும்ப நடிக்கும் திறமையும் கொண்டவர். தேசிய உணர்ச்சி ததும்பும் நாடகங்கள் பல எழுதி தானும் தனது சிஷ்யர்களுடன் சேர்ந்து நடிப்பார். அவரது சிவாஜி என்ற நாடகத்தை அப்போது சர்க்கார் தடைசெய்துவிட்டனர். தடையை மீறி சிதம்பரத்தில் தகரக்கொட்டகை யொன்றில் சமர்த்த தாஸராக நடித்தது தத்ரூபமாக இருந்தது. இதைத்தவிர தேசிங்கு ராஜன் போன்ற சரித்திர நாடகங்களையும் நடித்திருக்கிறார். நாட்டின் முன்னேற்றத்திற்கு நாடகங்கள் பெரிதும் உதவுமென நம்பினார்.

தேச விடுதலைத் தவிர வேறெதையும் சிவம் கருதினவரல்ல. ஒரு சமயம் அவரது குருவாக யிருந்த சதாநந்த ஸ்வாமிகள் திருவனந்தபுரத்தில் சிவத்தை சந்தித்தார். சுவாமிகளுக்கு சிவத்திடம் அன்பு அதிகம் அவர் சிவத்திடம் அரசியல் வேலையை விட்டு தன்னுடன் வந்தால் லட்ச ரூபாய்க்கு மதிப்புள்ள மடத்தின் அதிகாரியாக தனக்குப்பின் அமரலாமென கூறினார். சிவம் இதை ஒப்புக்கொள்ளாமல் அரசியல்தான் தன் வாழ்வு, செல்வம், சுகம் சகலமுமெனக் கூறிச் சென்றுவிட்டார்.

சுவாமி சுப்ரமண்ய சிவத்திற்கு வாழ்க்கையில் ஒரு ஆசையுண்டு. ஜாதி பேதமன்னியில் அரசியலை மதமாக்க விரும்பினார். அதன் பொருட்டு பாரதமாதா ஆலயம் ஒன்றை கட்ட விரும்பினார். முதலில் சென்னையை அடுத்த கோடம்பாக்கத்திலும், பின் காரைக்குடிக்குச் சமீபமுள்ள அமராவதி புதூரிலும், அதற்குப் பின் மானாமதுரையை அடுத்த பசலையிலும் ஆலயம் அமைக்க முயற்சி செய்து

கடைசியாக சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப் பட்டியில் தேசபந்து சித்ரஞ்சன தாஸரைக்கொண்டு அஸ்திவாரக்கல் நாட்டினர். அவரது இந்த ஆசைக்கு இது வரை மேல் முயற்சி எடுத்துக் கொண்டு அந்தக் கட்டிடம் கட்டப் படவில்லை.

தினசரி பஜனையும், பொதுக் கூட்டமும், பிரயாணமும் செய்து, சிறைவாசத்திலும், கசையடி பெறுவதிலும் தனது காலமனைத்தையும் தள்ளி, வாழ்நாள் முழுவதும் இன்பம், ஓய்வு என்பது இல்லாமலே இருந்தார் சுவாமி சுப்ரமண்ய சிவம். அவர் எண்ணியது போல் இந்தியாவின் செங் கோட்டையில் நமது சுதந்திரக் கொடி வானளாவ வீசிப் பறக்கின்றது! ஆனால் அதைக் கண்டு களிக்க அவரில்லை.

எஸ். சத்தியமூர்த்தி

பி. ராமச்சந்திரன், B.A.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருமயம் என்ற விஷ்ணு க்ஷேத்திரம். அவ்வூர் பெருமாள் நாமம் சத்திய மூர்த்தி என்பதாகும். சமஸ்தானத்தில் முக்தியார் பரீட்சை பாஸ் செய்து வக்கீலாக சுந்தர சாஸ்திரிகள் என்பவர் தொழில் நடத்தி வந்தார். இவர் தஞ்சை ஜில்லாவில் ஆவடையார் கோவில் என்ற ஊருக்கு நான்கு மைல் தூரத்தில் இருக்கும் செம்மனும் பொட்டல் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவருக்கும், இவருடைய தர்ம பத்தினியாகிய சுப்புலக்ஷ்மி அம்மாள் என்பவருக்கும் குமாரனாக ஸர்வஜித் வருடம் ஆவணிமாதம் 4உ (17-8-1887) நமது சத்திய மூர்த்தி அவர்கள் அவதரித்தார்!

இவரது தந்தை சுந்தர சாஸ்திரிகள் சமஸ்கிருதத்தில் மிகத் தேர்ச்சி அடைந்தவர். தானே தனது வீட்டிலேயே கொட்டகை முதலிய வசதிகளேற்படுத்தி ராமாயணம் முதலிய கிரந்தங்களை ஒவ்வொரிரவும் படித்து பிரசங்கம் செய்வார். இவர் வக்கீலாக இருந்த சமயம் தனது கட்சிக்காரரைப்பற்றி எடுத்துச் சொல்லி வாதாடும்போது "சாஸ்திரிகளே, கட்சிக் காரருக்காக இவ்வளவு அதிகம் பேசக்கூடாது, உங்களது சன்னத்தை ரத்து செய்து விடுவோம்" என்று நீதிபதியால் பயமுறுத்தப்பட்டார். "உங்களால் முடிந்ததை செய்து கொள்ளலாம்" என்று சொல்லி தனது வக்கீல் சன்னத்தை இழந்தார். இதற்குப் பிறகு ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகங்கைக்குச் சென்று அங்கு சில விவகாரங்களைத் தீர்த்து வைத்ததால் ஏதோ சிறிது நிலம் கிடைத்தது. இதை தனது குமாரர்களுக்காக விட்டுவைத்து இறந்துவிட்டார்.

இவர் இறக்கும்போது சத்தியமூர்த்திக்கு வயது எட்டு. தாயார் 32 வயதுடைய பால்ய விதவையானாள். சத்தியமூர்த்தியையும் மூன்று சகோதரர்களையும் நான்கு சகோதரிகளையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்த அம்மாள் தலையில் விழுந்தது. தன்னிடமிருந்த நகைகளை விற்று பிள்ளைகளை படிக்க வைத்தாள்.

புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் சிலகாலம் கல்வி பயின்றபின் சத்தியமூர்த்தி சென்னை வந்து சேர்ந்தார். சென்னை வந்து சேர்ந்தபின் இவருடைய படிப்பிற்கு போதிய பணமில்லை. புதுக்கோட்டையிலிருந்த தாயாரும் இதர சகோதர சகோதரிகளும் இவரை வெகு கஷ்டப்பட்டு படிக்க வைத்தனர். சிவகங்கையில் இவரது தந்தைக்கு கிடைத்த பூமி சாஸனம் இந்த சமயம் படிப்பிற்குப் பெரிதும் உதவி செய்தது. கடைசியாக 1906-ம் வருடம் பி.ஏ. பட்டம்பெற்று வக்கீலுக்குப் படிக்கத் தொடங்கினார்.

புதுக்கோட்டையில் படிக்கும் பொழுதும், சென்னையில் கிறிஸ்தவ கலாசாலையில் படிக்கும் பொழுதும் இவரது திறமை பல துறைகளிலும் வெளியாயிற்று. 1911-ம் வருடம் வங்காளப் பிரிவினை நடந்தபோது இதை எதிர்த்து தேசமெங்கும் கிளர்ச்சிகள் நடந்தன. அதுசமயம் இவர் பேசிய பேச்சுகள், புத்தக பூச்சிகளாக இருந்துவந்த பல மாணவர்களுக்கு தேசபக்தியைத் தூண்டி விட்டது.

படிப்பதைத்தவிர வேறொன்றும் அறியாதிருந்த இவரது வகுப்பு மாணவன் ஒருவன் ஒருநாள் வங்காளப் பிரிவினை பற்றியும் இதனால் தேசத்துடன் இருந்த இந்தியர்களிடையே ஏற்படும் பிளவைப் பற்றியும், சத்தியமூர்த்தியின் பிரசங்கத்தைக் கேட்டான். அன்று அவர் வாய்திறந்து கடல் மடை திறந்தாற்போல், உடல் பதற உள்ளம் குமுற செய்த பிரசங்கமானது அம்மாணவனின் உள்ளத்தில் ஏதோ புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அன்று இரவே அம் மாணவன் வங்கப் பிரிவினைக்குக் காரணமாக இருந்த கவர்னர் கர்ஸான் பிரபுவுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினான்.

"எங்கிருந்தோ இந்தியாவிற்கு வந்த நீ, சகோதர பாவத்தோடு வாழ்ந்து வரும் எங்களிடையே இனவேற்றுமையைப் புகுத்துவதைஎன்னால் சகிக்க முடியவில்லை. இந்தக்கடிதம் கிடைத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் பிளவு படுத்திய வங்கத்தை இணைக்க ஏற்பாடு செய்தாக வேண்டும். இல்லையெனின் முப்பத்து முக்கோடி இந்தியர்களின் நல் வாழ்வுக்கு சாளாகையுள்ள உன்னைக் கைலாசத்திற்கு அனுப்பநேருமென இந்தக் கடிதம் மூலம் எச்சரிக்கை செய்கின்றேன்."

இம்மாதிரியான உணர்ச்சியும் உற்சாகமும் ஏற்படுமளவிற்கு மாணவர்களின் மனதில் சுயராஜ்ய வேகத்தை வளர்த்த பெருமை சத்தியமூர்த்தியையே சாரும்.

அன்னிய ஆளுகையையும், அயல் நாட்டு சாமான்களையும் சத்தியமூர்த்தி எப்போதும் வெறுத்து வந்தார். 1907-ம் ஆண்டு சென்னை கடற்கரையில் "விபினசந்தர பாலரி"ன் பிரசங்கத்தைக் கேட்டு வெறிகொண்டு விதேசி குல்லாய்களை எல்லாம் சேர்த்துவைத்துக் கொளுத்தினார்.

1908-ம் ஆண்டு சென்னையில் இந்திய தேசிய காங்கிரஸ் கூடிய சமயம் தொண்டராக இருந்து மகாநாட்டிற்கு சேவை செய்தார். அந்த வருடம் மதுராந்தகத்தில் கூட்டுறவு மகாநாடு நடைபெற்ற சமயம் தமிழில் முதன் முதலாக நீண்ட பிரசங்கம் ஒன்று (சுதேச சாமான்கள் ஆதரிப்பதைப் பற்றியும், கூட்டுறவு முறையில் ஏற்படும் பலன்களைப் பற்றியும்) செய்தார்.

சத்தியமூர்த்தி பேசுவதில் மட்டும் சமர்த்தரல்ல, நடிப்பிலும்கூட நல்ல திறமையுண்டு! "வேணி சம்ஹாரம்" என்ற சமஸ்கிருத நாடகத்தில் அசுவத்தாமனாக அவர் வீரத்துடன் நடித்ததை எவரும் எளிதில் மறக்க முடியாது. தனது பூணூலை அறுத்துவிட்டு வீராவேசமாக கர்ணனுடன் சபதம் செய்த கட்டத்தை நினைத்துக்கொண்டால்கூட மயிர் கூச்சல் எடுக்கின்றதென அப்போது அவருடன் கலைத்துறையில் தொடர்பு கொண்டிருந்த நண்பர்கள் கூறுவார்கள்- பல வரு

டங்களுக்கு முன் புறக்கணிக்கப்பட்டு க்ஷீண தசையை அடைந்து கொண்டிருந்த நடனக்கலையை புத்துயிரளிக்கும் பொருட்டு பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டார். சென்னையிலுள்ள சுகுண விலாஸ சபையில் சத்தியமூர்த்தி ஒரு நடிகராகவும், நடிகர்களை பழக்குபவராகவும் நீண்டகாலம் இருந்தார்.

1917-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸுக்குச்சென்று அச்சு சட்ட அடக்குமுறையைக் கண்டித்துப் பேசிவிட்டு சென்னை திரும்பினார். அப்போது தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாடு ஸ்ரீமதி சரோஜனி தலைமையில் கூடியது. யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்ட மாண்டேகு சீர்திருத்தத்தை ஆதரிப்பதற்காக அன்னிபெஸண்ட், சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர், அருண்டேல், வாடியா, கனம் சீனுவாச சாஸ்திரிகள், திவான்பகதூர் கேசவப் பிள்ளை ஆகியோர்கள் கூடியிருந்தனர். அன்னிபெஸண்டு அம்மையார் உலகத்திலேயே பிரசங்கம் செய்வதில் பெரிய நிபுணரென பெயர்பெற்றிருந்தவர். அவரை எதிர்த்து "இங்கிலாந்து நமக்கு சுதந்திரத்தைக் கொடுத்தாலொழிய யுதத்தில் அதற்கு உதவி செய்யக் கூடாது" என்ற திருத்தப் பிரேரணை கொண்டுவந்து ஆவேசமாகப் பேசினார். இந்த ஆவேசமான அவருடைய பிரசங்கம் ஸ்ரீமதி பெஸண்டின் வீழ்ச்சிக்கும் விழிப்புக்கும் காரணமாக இருந்தது.

சில வருடங்களுக்குப் பின்னால் அதே இடத்தில் நடந்த மாகாண காங்கிரஸ் மகாநாட்டின்போது சத்தியமூர்த்தி சுயராஜ்ஜிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தார். மத்திய மாகாணத்தில் சுயராஜ்ஜிய கட்சித் தலைவர் ஸ்ரீ தாம்பே காங்கிரஸுக்கு துரோகம் செய்து சர்க்காரிடம் நிர்வாகப் பதவிப் பெற்றுவிட்டதால் காங்கிரஸ் சுயராஜ்ஜிய கட்சியை நம்பக்கூடாதென, ஈ. வே. ராமசாமி நாயக்கர், சுரேந்திரநாத் ஆர்யா, எஸ். ராமநாதன் ஆகியோர்கள் பேசினர். அம் மகாநாட்டின் தலைவர் திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஆவார்.

மகாநாட்டின் மேடைக்கு வந்து சேர்ந்த சத்தியமூர்த்தி, ஈ.வே. ரா, ஆர்யா ஆகியவர்களின் வாதத்தை எதிர்த்துப் பேசி இரண்டே விநாடிகளில் உடைத்தெறிந்தார்.

“400 பேர்கள் கொண்ட சுயராஜ்ஜிய கட்சியில் ஒரு நாம்பே துரோகம் செய்துவிட்டதால் மீதமிருக்கும் 399 பேர்களாகிய எங்களுடைய பரிசுத்தத்திற்குப் பங்கம் ஏற்பட்டு விடவில்லை. பொழுது போனால் பதவி பட்டம் என்று அலைந்துகொண்டு சர்க்காருடன் குலாவி தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் இந்தக் கட்சிக்கு எங்களைக் குறைகூற வாய் ஏது? நெல்லுடன் உமி இருக்கின்றது. ரோஜாவுடன் பிறந்தது முள். பலாப்பழத்தின் மீதும் முள் இருக்கின்றது. உமியையும் முள்ளையும் கண்டு அவற்றை விலக்கிவிடுகின்றோமா? எனவே, பசுத்தோல் போர்த்த இவ் வேஷதாரிகளை விலக்குங்கள். காங்கிரஸ் சுயராஜ்ஜிய கட்சியை ஆதரியுங்கள்” என கர்ஜனை புரிந்தார். மகாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் கரகோஷம் புரிந்தனர்.

சத்தியமூர்த்தியின் பேச்சுத் திறமைக்கு இவை தவிர இன்னும் பல உதாரணங்கள் சொல்லலாம். சென்னை கிறிஸ்துவ கலாசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் தேர்தல் நடைபெற்ற சமயம் சத்தியமூர்த்திக்கு எதிராக சர் உஸ்மான் போட்டியிட்டார். சர் உஸ்மான் பருத்த தேகமுடையவர். மேடைக்குச் சென்ற சத்தியமூர்த்தி “நீங்கள் சர் உஸ்மானைப் பார்த்திருப்பீர்கள். அவரைப் பார்க்காமல் இருக்க முடியாது. காரியதரிசி என்றால் காரியம் செய்யவேண்டும். நாலு இடத்திற்குப் போகவேண்டும். சர் உஸ்மான் அம்மாதிரி செல்ல முடியுமா என்பதை அவரைப் பார்த்து தீர்மானியுங்கள்” என்று கூறினார். உஸ்மான் தேர்தலில் தோல்வியடைந்தார் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

பிரசங்கங்களில் சத்தியமூர்த்தி அடிக்கடி வெள்ளையனைப் பற்றிச் சொல்லும்போது பின்வருமாறு குறிப்பிடுவார்: “ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவனுக்கு

ரூபாய் 2000 சம்பளம். அதே உத்தியோகத்தை நான் பார்த்தால் எனக்கு 200 ரூபாய்தான் சம்பளம். இந்த வித்தியாசம் எதனால் தெரியுமா? அவன் தோல் வெளுப்பாம்; என் தோல் கருப்பாம்!"

1925-ம் ஆண்டில் இரண்டாம் முறையாக லண்டனுக்கு காங்கிரஸ் பிரசாரத்தின் பொருட்டு சென்றிருந்தார். பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் பொழுது "இந்தியாவை விட்டு இங்கிலீஷ்காரர்கள் விலகி வந்துவிட்டால் கொள்ளை மிதமிஞ்சிப்போய் இந்தியா பாழாய்ப் போய்விட்டதா?" என்று ஒரு ஆங்கிலேயன் கேட்டதற்கு சத்தியமூர்த்தி "இங்கிலீஷ்காரன் உலகத்துக்குப் போலிஸ்காரனா?" என்று வாய்த்துடுக்குடன் பதில் கூறினாராம்.

தனது பிரசங்கத் திறமை மூலம் சத்தியமூர்த்தி சட்டசபைகளில் செய்திருக்கக் கூடிய சேவை அபாரமானது. "காங்கிரஸின் சார்பாக ஸ்ரீ சத்தியமூர்த்தி மட்டும் சட்டசபைக்குப் போனால் போதுமானது" என்று காந்திஜி ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கின்றார். கேள்வி நேரம் என்பது சத்தியமூர்த்திக்குச் சர்வமான்யம் ஆகும். கேள்விக்குப் பின் கேள்விகள் கேட்டு எதிரிகளை மடக்கிவிடுவார். கேள்வி நேரம் அதிகாரிகளுக்கு சோதனை காலம். சத்தியமூர்த்தியைக் கண்டால் அவர்களுக்குச் சிம்ஹ சொப்பனம்.

1920-ம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின்போது சட்ட சபைகளைக் கைவிடுவது எதிரிகளுக்கே பயன்படுமென வாதித்தார். இருப்பினும் காங்கிரசிடம் தனக்கிருந்த பிரேமையின் காரணமாக கட்டுப்பாட்டுக்கு அடங்கி சட்ட சபைக்குப் போகாமல் நின்றார்.

அதன்பின் 1923, 1926, 1934 ஆண்டுகளில் மத்திய சட்டசபைகளிலும், சென்னை சட்டசபையிலும் அங்கத்தினராக இருந்திருக்கிறார். சென்னை சட்டசபை அங்கத்தினராக இருந்த சமயம் 1928-ம் வருடம் செப்டம்பர் மாதம் 11-ந் தேதியன்று பாரதியாரின் தேசியப் பாடல்கள் ராஜத்துவேஷமானவை என்று கூறும் பர்மா சர்க்கார் அறிக்கையை

சென்னை சர்க்கார் தனது கெஜட்டிலும் வெளியிட்டு, ஹிந்தி பிரசார சபையிலும், சென்னையில் உள்ள புத்தக வியாபாரிகளிடமுமிருந்த சுமார் 20,000 பிரதிகளைச் சென்னையிலுள்ள போலிஸ் மூலம் பறிமுதல் செய்தது. "தமிழன் உள்ளளவும் மறக்க முடியாத கவியின் புத்தகப் பிரதிகளைத்தான் பறிமுதல் செய்யமுடியுமே தவிர அவர்கள் சிந்தனையிலுள்ள கீதத்தை பறிமுதல் செய்ய முடியாது" என்று சத்தியமூர்த்தி நீண்ட பிரசங்கத்தை சட்டசபையில் செய்து பாரதி பாடல்களின் மீதுள்ள தடையுத்தரவை நீக்க அவசர பிரேரணை கொண்டுவந்து வெற்றியடைந்தார்.

1936-37-ல் நடந்த சட்டசபைத் தேர்தலின்போது காங்கிரஸ் அபேட்சகர்களுக்கென ஓயாத உழைப்புக்குள்ளானார். மூல ரோகத்தால் அவஸ்தையுற்றுக் கொண்டிருந்த காலம் அது. தினம் இருபது கூட்டங்களுக்குமேல் நடுசாமம் வரையிலும் பேசினபோதும்கூட தூல் சிறிதும் தளராமல் உணர்ச்சியும் வீரமும் ததும்ப பேசுவார். இன்றும்கூட "மஞ்சள் பெட்டியில் மங்களகரமான உங்களது வாக்குச் சீட்டுகளை போடுங்கள்" என்ற கோஷம் இசைத் தட்டுக்காரர் மூலம் நம் காதுகளில் கணீரென்று ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

1939-ம் வருடம் சென்னை நகரத்தின் மேயரானார். சென்னை நகரத்தை அழகுபடுத்தி, அதிலுள்ள சிறு சந்து பொந்துகளைச் சீர்திருத்தினார். இவை எல்லாவற்றையும் விட நகரத்திலுள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கு இன்றியமையாத நீர் வசதியை ஏற்படுத்தினார். பூண்டி நீர் தேக்கத் திட்டம் அவரது முயற்சியின் பலனையாகும்.

1942-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 4-ந் தேதி பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் கமிட்டி கூட்டத்தில் கலந்துகொள்வதின் நிமித்தம் சென்றார். அப்போது அவருடைய உடல் நலம் பெரிதும் குன்றியிருந்தும் கூட கடமையே பெரிதென மதித்தார். கூட்டத்திலிருந்து



திரும்பி வரும்போது அரக்கோணம் புகைவண்டி நிலயத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். சிறைச்சாலை வாசம் சத்தியமூர்த்தி உடலுக்கு எப் போதும் ஒத்துக்கொள்ளாது. ஒரு சமயம் அவரது ஆங்கில நண்பர் "லியோபால்டு" என்பவர் அவரிடம் "சிறைச்சாலை வாசம் உங்கள் தேகத்திற்கு உகந்ததல்ல. விலகி நின்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னபோது "எந்த ஆங்கிலேயனாவது இம்மாதிரியாக செய்வானா?" என்று கேட் டார். இது ஒன்றே சத்தியமூர்த்தியின் தேசபக்திக்கு சிறந்த உதாரணமாகும்.

வேலூர் சிறையிலிருந்து சில மாதத்திற்கெல்லாம் அமராவதி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இரண்டு வாகன்களில் 60-க்கு மேற்பட்ட தேசபக்தர்களை புளிமூட்டை போல அடைத்து, மேடுபள்ளங்கள் நிறைந்த ரஸ்தாவில் 117 மைல்கள் அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது அவர் அடைந்த துன்பம் விவரிக்க முடியாததாகும். மிகவும் பலவீன நிலைமையிலிருந்த அவருடைய முதுகெலும்பு முறிந்துவிட்டது. அமராவதியின் சீதோஷ்ணம் சத்திய மூர்த்திக்கு ஒத்துக்கொள்ளவில்லை. தேகநிலை பெரிதும் க்ஷீணதிசையை அடைந்து கொண்டே இருந்தது. அதைக் கண்ட அதிகாரிகள் அவரை சென்னை சிறைச்சாலைக்கு அனுப்பினர். சிறை அதிகாரிகள் அவருடைய தேகநிலையைக் கண்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டனர்.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் 1943-ம் வருடம் மார்ச் மாதம் 25-ந் தேதி இரவு ஒரு மணிக்கு தேசவிடுதலையின் பொருட்டு எந்த ஆத்மா தன்னைத் தியாகம் செய்ததோ, இடைவிடாத பிரசங்கங்கள் மூலமாக எதிரிகளை மடக்கி மக்கள் மத்தியில் உணர்ச்சி, உத்வேகம் ஆகியவற்றை எந்த ஆத்மா கிளப்பிவந்ததோ, அந்த ஆத்மா தனது பூதஉடலை விட்டு, அந்த நள்ளிரவில் எங்கோ பறந்து சென்றுவிட்டது!